முத்தாரம்

1415
3-56
1415
1/2
m211,N56MR
N56.1.2
198948

ஆசிரியர்

மு.கருணா

உள்ளே

ஆரம் : 1 செப்டம்பர், 1956 முத்து : 2

கதை :

கி. ஆ. பெ. விசுவநாதம் ... 5
மு. கருணாநிதி ... 6
டைரக்டர் காசிலிங்கம் ... 22
கே. ஏ. மதியழகன், பி. ஏ., ... 33
ப. உ. சண்முகம் ... 43
இரா. மதனகோபால், பி. காம் ... 59
அதிகமான் ... 68
இரெ. இளம்வழுதி, எம். ஏ., பி. எல்., ... 83
மாறன், எம். ஏ.. ... 107

கவிதை :

கவிஞர் வாணிதாசன் ... 4
கருணானந்தம் ... 20

கட்டுரை :

வித்வான் கி. சண்முகம் ... 14

ாடகம் :

தில்லைவில்லாளன், எம். ஏ., ... 97

பருங் கதை :

ஜேம்ஸ்ஹில்டல்—
தமிழில் : பி. சி. கணேசன்,
பி. எஸ்ஸி., பி. டி., ... 111

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 SEP 1956
MADRAS

'முத்தாரம்'—இலக்கியத் திங்கள் ஏடு. தனிப் பிரதி அணா எட்டு. ஆண்டு சந்தா ரூ. 6-8-0. ஆசிரியர்: மு. கருணாநிதி. வெளியிடுபவர்: எஸ். என். மாறன் எம்.ஏ., அச்சிட்டோர்; முரசொலி அச்சகம், சென்னை-6. அலுவலகம் : தபால் பெட்டி எண் : 712, 4,128, மவுண்ட்ரோடு, சென்னை-6.

முத்துக்கள்

முத்தாரம், இரண்டாவது தொகுப்பு உங்கள் கரங்களை அணிசெய்கிற போழ்து, முதல் தொகுப்பு பற்றித் தோழர்கள் தந்துள்ள கருத்துக்களை யொட்டிச் சில வார்த்தைகள்!

அருமை மிகு நண்பர் சம்பத் அவர்களும், பேராசிரியர் அன்பழகனார் அவர்களும் சுட்டிக் காட்டியதுபோல, இயக்க வண்ணத்திலே எவருங் குறைகூற இயலாத வகையில் இலக்கியப் பணி நடைபெறும் நாள் எந்நாளோ என ஏங்கியிருந்த நம்மவர் உள்ளமெலாம் களிக்க 'முத்தாரம்' வருகிறது என்ற மகிழ்ச்சிப் பெருக்கை அள்ளி வரும் மடல்கள் ஏராளம்!

குறைகளைச் சொல்லும் ஓலைகளும் உண்டு. அவை தொகையில் குறைவுதானெனினும் கவனிக்கத் தக்கவை. குறை காண்போர் பலவகை! —நம்மவர் இப்படியொரு முயற்சியில் ஈடுபடுவதே பிடிக்காத பரந்த பண்பினர்! இன்னொரு வகை—இந்த முயற்சி மேன்மேலும் செழிப்புடன் தழைக்க வேண்டுமென விழைபவர்! மற்றொரு வகை—ஏதாவது ஒரு குறையைச் சொன்னால்தான் அகச்சாந்தி ஏற்படும் எனும் நிலையிலுள்ளோர்! இவர்களில் இரண்டாம் வகையினரின் எண்ணங்களுக்கு மட்டுமே விளக்க முறைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நாகர்கோயில் மாணவர் ஒருவர் எழுதுகிறார்; முத்தாரத்தை ஒரே நாளில் படித்துவிட்டேன்; ஒருவாரம் படிப்பதுபோல் பக்கங்கள் தேவை—யென்று! 112 பக்கங்களை ஒருநாளில் படித்தால் ஒருவாரத்துக்கு எழுநூறு பக்கங்கள் போட்டு எட்டணா விலைக்குக் கேட்கிறார் என்றுதானே பொருள்?

ஆங்கில மொழி பெயர்ப்பே வேண்டாமென்கிறார் ஒரு நண்பர். உலகத்தின் எல்லா திசைகளிலுமுள்ள அறிவியல் கருத்துக்களை தொகுத்தளிப்பதைக் குறியாகக் கொண்ட முத்தாரத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும் இது! "சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்

கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' என்ற பாரதியின் பாடலைத் தான் நண்பருக்கு நினைவூட்ட வேண்டியிருக்கிறது.

என் கட்டுரை, கதைகள் முத்தாரத்தில் மிக எளிய நடையில் வரவேண்டுமென்கிறார் 'ரெட்பீல்ட்ஸ்' நண்பர் ஒருவர். தொடர்ந்து இப்படியொரு முறையில் எழுதவேண்டுமென்ற என் நினைப்புக்கு பெரும்பாலான தோழர்களின் பாராட்டுதல் இருப்பதால் இன்னும் ஊக்கத்தோடு அதே முறையை இந்த இதழிலும் கடைப்பிடித்திருக்கிறேன்.

முத்தாரம் — உருவில் பெரியதாக வேண்டுமென்று பலர் எழுதியிருக்கிறார்கள். புதிய அச்சுப் பொறி வாங்கிட ஏற்பாடு செய்திருப்பதாக மாறன் சொல்லுகிறான், வாங்கியதும் உருவில் திருவும், உயர அகலமும் அதிகமாகும்!

திரைப் படச் செய்திக்கென ஒரு பகுதி கேட்கப்படுகிறது— பெரும்பாலோர் விரும்பினால் எந்த முறையில் அச் செய்தி தருவது என்று—'முத்தாரம் குழு'வினர் விவாதித்துத் திட்டமிட்டுத் தக்கது செய்வர்!

சங்க இலக்கியங்கள் பற்றிய இலக்கியக் கட்டுரைகள் தேவையென்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். அவர்களது தேவை, தெவிட்டாத அளவுக்கு நிறைவேற்றி வைக்கப்படும்!

பக்கங்களை இன்னுங் கொஞ்சம் அதிகமாக்கலாம் எனப் பலர் எழுதியுள்ளனர். இழப்பின் சுமை அதிகப்படாத அளவுக்குக் கணக்கிட்டுப் பார்த்து, இந்த இதழிலேயே பதினாறு பக்கங்களை அதிகமாகத் தந்திருக்கிறோம் என்கிறார்கள் அலுவலகத்தார்! அதுபோலவே வண்ணங்களிலும் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது இந்த இதழில்!

மிகச் சிலர், விலை எட்டணா அதிகம் என நவில்கின்றனர்! விளம்பரங்களால் பாதிப் புத்தகத்தை அடைத்துக் கொண்டிருக்கிற சில ஏடுகளோடு முத்தாரத்தை ஒப்பிட்டு, விலையைக் குறைத்திடக் கூறுவது பொருத்தமானதல்ல! எண்பது பக்கங்கள் கொண்ட நமதியக்கப் புத்தகங்கள் (நல்ல தாளில்) ஒரு ரூபாய் விலைக்கு விற்றால்தான் கட்டுபடியாகும் என்ற நிலையிருப்பதை சற்று சிந்திப்பவர்கள் முத்தாரத்திற்குத் தரும் எட்டணாவை அதிகமெனக் கருதமாட்டார்கள். எட்டணா கொடுத்து வாங்க முடியாதவர்களுக்கு வேண்டுமானால் ஒரு வழி கூறுவேன்; இரண்டு பேர் ஆளுக்கு நாலணா போட்டு, ஒரு முத்தாரம் வாங்கி இருவருமே படித்துக் கொள்ளலாம். பெருத்த இடையூறுகளினிடையே—ஏராளத் தொல்லைகளுடே—எதிரிகள் முகாம் வியக்குமளவுக்குக் காரியங்கள் சாதிக்க எண்ணும் எங்களின் இந்த நல்ல முயற்சிக்கு எட்டணாவை ஒளிவிளக்கில் ஊற்றுகின்ற எண்ணெய் போல் தந்திடலாகாதா என்ன?...

இந்த முத்தாரத்தை சுவையுங்கள்!...அடுத்த முத்தாரம் இதைவிட எழிலோடு; அண்ணாவின் ஓவியத்தோடு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

198948

உன்னோடு ஒருநாள்—அந்நாள் நன்னாள்
பொன்னோடு! திருநாள்! புதுநாள்! முதல்நாள்!

மின்னோடு மாமதி மலைமூங்கில் அடைத்தேன்
தன்னீடு இடைமுகம் தடக்கை சொல் கண்டேன்

திருக்கோவை சுவைத்திட்ட தில்லையில் அன்று
செந்தமிழ் விளக்கென்றாய்; ஆயிரம் நின்று
சுருக்கமாய் விளக்கினேன்; தொகைநூலை நன்று
தோழியருடன் சுவைத்தாய்; மறப்பேனோ இன்று?

வழிகூட்டி அனுப்பநீ வந்தாயே மாலை
மயங்கிய இருட்டிற்கோ யார்தந்தார் ஓலை?
செழியனின் நாட்டிலே தீந்தமிழ்ச் சோலை
தீக்கிரை யாவதோ எடடி நீ வேலை!

நந்தனார் பெயர் கேட்டேன்; எந்தையர் வீட்டை
வந்தவர் கெடுத்தார்; தமிழரின் கேட்டை
எந்தநாள் உணர்வாரோ அன்றல்லோ ஒட்டை
இல்லா தொழிந்திடும்; அடைவோம் நம்நாட்டை!

ஒரே ஒரு ஊரில்..

கி. ஆ. பெ. விசுவநாதம்

உழவன் ஒருவன் அடி பாகம் இல்லாத ஓட்டை வாளியின் மூலம் ஏற்றத்தின் வாயிலாக நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தானும். அந்த வழியே வந்த புரோகிதர் ஒருவர். உழவனைப் பார்த்து "என்னப்பா செய்கிறுய்?" என்று கேட்டாராம்.

"கும்பகோணத்திலே உள்ள என் நஞ்சை நிலத்துக்கு இங்கேருந்து தண்ணீர் பாய்ச்சிறேன், சாமியோவ்" என்ருனும் உழவன்.

அதற்கு புரோகிதர், "அட முட்டாளே! உனக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கா? கும்பகோணத்துக்கும் இதுக்கும் ஏழு மைலாச்சே! வைச்சிருக்கிறது ஓட்டை வாளி. நிலத்திற்கு எப்படியப்பா நீர் போய்ச் சேரும்?" என்று தலையில் அடித்துக் கொண்டாராம்.

உழவன் சற்றும் யோசிக்காமல், "போங்க சாமி, நீங்க இங்கேருந்து இந்திரலோகத்துக்கு சங்கதி சொல்லி அனுப்புறேங்கிறிங்க! வைகுண்டத்துக்கு அரிசி, பருப்பு, சாமான் எல்லாம் அனுப்புறேன்னு சொல்றீங்க, இந்த தண்ணிதான இங்கே இருக்கிற கும்பகோணத்துக்குப் போய்ச் சேராது?" என்று கேட்டானும்! எப்படி கதை?



மயிலிறகு

மு. கருணாநிதி

சைவரே வென்றார்— சமணர் தோற்றார் எனப் பாண்டி மண்டிலத்து நீதிமன்றம் தீர்ப்பளிக்க, உடன் அமைச்சன் குலச்சிறை, அன்பே சைவம் எனும் அருளொழுகும் இலக்கணத்தை மேற்கொண்டு, கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிறையில் எண் பெருங்குன்றத்து எண்ணாயிரவர்களையும் ஏற்றிக் களித்து, 'நாயனார்' ஆனான். இக்கொடுமை சூழ் செயலுக்குப் பின்னர் பாண்டிய நாடு வாய் திறக்கப் பயந்து கிடந்தது. மிச்சமிருந்த சமணத் துறவிகள் வெளியிற் கிளம்ப அச்சங் கொண்டனர். சமணந் தழுவி, இல்லறமுந் தழுவி நிற்கும் பொதுமக்கள் மனந் திறக்க வழியில்லை. குலச்சிறையின் கொடுங்கோல் உரிமைக் குரலுக்குப் பெருந் தடை விதித்தது. அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகளும் ஆகிட வேண்டுமென ஆட்சி ஆணை பிறப்பித்தது. சைவத்துக்கு எதிராக சிறு துரும்பும் அசையக் கூடாது- குலச்சிறை கொக்கரித்தான். அரசியும் அப்படியே! பாண்டியனோ கூனனாகிவிட்டான்; கொள்கை பிறழ்ந்தது!

இந்நிலையில் தமிழகம் இருக்கின்ற வேளையில் ஒரு நாள்!

படை முகத்து வீரனவன்; படைக்கலனைப் பார்வையிலும் பால் நிலவு முகத்தினிலும் பெற்றிருக்கும் பாவை அவள்! ஆணொருவன் பெண்ணொருத்தியென்றால் அங்கே காதலுக்குக் கதவு மூடியா இருக்கும்! நலங்கிள்ளி— அந்த நல்ல தமிழ் இளைஞனுக்குப் பெற்றோர் இட்ட பெயர்! பேரழகியோ பீலிவளை யென்னும் பெயர் பெற்றாள்! சந்தித்தார்...சிறிது சிந்தித்தார்......முந்தித் தருவது யார் முத்தம் எனும் விதத்தில் வளர்ந்து விட்டார். பந்திப் பார்ப்பனரின் வயிறு போல் பொற்கிழி வேண்டாம்—அந்திச் செவ்வானத்து எழில் காட்டும் கன்னம் தருவேன் அட்டியின்றி! ஆனாலும் அத்தான், குந்திக்குத் தங்கைகளாம் குலக் கணிகையர் மரபினிலே வந்

தாலும் மந்தி கை—மாலையாய் மாறமாட்டேன்–இஃது றுதி. யென்று சொல்லி 'இச்' சென்று பேச்சை முடித்திட்டாள் சித்திரச் செந்தமிழாள் பீலிவளை!

"தேன் துளியால் என் இதழை நனைக்கின்ற திருவே! வான்வெளியில் வட்டமிடுகின்ற நிலவே! கணிகையர் மரபென்றாய்... கண்ணீரால் ஓவியம் கன்னத்தில் தீட்டுகின்றாய் ... கலங்காதே! தனிமையில் கிடந்திட்ட எனக்கு இனிமையை வழங்குகின்ற தளிரே! தளிர் மேவும் பனியே! தமிழ் மூச்சே!

"யாயும் ஞாயும் யாராகியரோ! எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்! யானும்நீயும் எவ்வழி அறிதும்! செம்புலப் பெய்ந்நீர் போல அன்புடை நெஞ்சந் தான் கலந்தனவே"-இந்த சங்க காலத் தமிழ் நெஞ்சங் கொண்டவரே நாம்! அஞ்சாதே! சாவாலும் நமைப் பிரிக்க ஆகாது!" எனச் சொல்லி இதழ் அமுதம் தந்தான்; திரும்பப் பெறுகின்ற சுயநல நோக்கோடு!

பூக்காடு தாண்டி, சமணரைச் சாக்காட்டில் தள்ளிவிட்ட கழுமரக் கும்பல் தாண்டி, வேக்காட்டு மனத்தினனும் குலச்சிறை கோலோச்சும் தலைநகர வீதி வந்தார் கலையழகு காண்பதற்கும், காதல் சுகம் வளர்ப்பதற்கும்!

இடையிலாப் பெண்டிர் தங்கள் நடையிலோர் நாட்டியம் காட்டி, தடையெலாங் கடந்து வந்த வெள்ளம்போல் பாய்ந்து சென்றார்; பச்சை விரிக்கின்ற பாண்டிய நாட்டு வீதியிலே!

குடை நிழற் பாண்டியனை வாழ்த்திக் கொண்டு சைவக் கும்பல், படைவீரர் புடைசூழ பவனி வரும்!

சிவ சக்தி சிலையுடனே தேரொன்று சிரோங்கிச் சித்திர வீதியிலே நகர்ந்தபடியிருக்கும்!

அனைத்தும் கண்டாள். அங்கு என்னை அணைத்த சுகம் இதில் எதிலுமே யில்லை யென்றாள். அவன் மகிழ்ந்து இதழ் குவித்தான்; பிறகு "மறந்துவிட்டேன் இது வீதி" யென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மயக்கம் தெளியாக் காதல் வெறியினிலே தடுமாறி நடக்கின்ற அவர்கள் முன்னே மயில் தோகை பிடித்தவாறு ஒரு கிழவர் — சமணத் துறவி வருகின்ற காட்சி கண்டார்.

கால்பட்டு உயிரிழக்கும் எறும்பினங்கள்—அதனாலே மயிலிறகால் கூட்டிச் சென்று அதன் பிறகு நடப்பதுதான் அன்புவழி எனக்கொண்ட சமணப் பெரியார்! பாண்டியத்தில் யார்க்குமில்லா உரத்தோடு தம் கொள்கை பரப்புதற்கு வெளிவந்த வீரர்! பல் இல்லை—ஆனாலும் சொல்லில் தளர்வில்லை! உடலில் காணும் நடுக்கம் உள்ளத்தில் சிறிதுமில்லை! "வாழ்க சமணம்!" என்ற வார்த்தையிலே என்ன அழுத்தம்! எண்ணாயிரத்தில் சிக்காத கிண்ணரைக் கிழவனடா என்று வியந்துரைத்தார் வெளியூரில் இருந்து விழாக்காண வந்த பல்லோர்!

ஒரு வீரன் உறுமி வந்தான்! "ஓதிய மரமே! உனக்கு உரிமை

யில்லை இங்கு நடக்க!" என்று கிழவர் முன் நின்றான்.

"மயில் தோகை விரித்தாற் போல் மனம் படைத்த தமிழகத்தில், நான் நடமாட உரிமையில்லை! எங்கப்பா செல்வது?" என்றார் பெருங்கிழவர்!

"எங்கோ செல்; எமக்கென்ன?" எனச் சொன்னான். பதிலை விரும்பாமல் படபடவென அவர்மீது தாக்குதலைத் தொடுத்துவிட்டான். "சமணம் வாழ்க!" எனச் சாகும்வரை சொல்வேனென்று உரத்த குரல் பெற்றார்! இரத்த வெள்ளமாயிற்று இராச பாட்டை! மயில் தோகை சிதறிற்று......... பெரியவரின் மண்டையும் அவ்வாறே!

சைவம், அகன்றது அதை விட்டு! நலங்கிள்ளி—பீலிவளை நடுக்கமுடன் கிழவரின் அருகே வந்தார்.

"வாழ்க சமணம்!" என்ற உச்சரிப்பை உதடுகளில் பொருத்திக் கொண்டு உயிர் விட்டார், நலங்கிள்ளி மடிமீது அக்கிழவர்!

"உத்தமரே! உயர் தமிழா! உயிர் மதியா ஒளி விளக்கே!" என வாழ்த்த நலங்கிள்ளி நாவசைத்தான். நாலு சைவ வீரர்களை எதிரே கண்டு மூடிக் கொண்டான் தன் வாயை! சிதறியுள்ள மயிலிறகில் ஒன்றை எடுத்து, நடக்கலுற்றான். நங்கை மடவன்னமும் அவன் பின் தொடர்ந்தாள்.

தொலைவினிலே 'வாழ்க சைவ' மென்னும் பெருங்கூச்சல் கிளம்பக் கேட்டான். அவளுங் கேட்டாள்; "ஏனத்தான் ஒரு மாதிரி இருக்கிறீர்?" என்று! "ஒன்றுமில்லை" என்றுரைத்து, விடை கேட்டான் அவள் வலுவில் தந்த விருந்துக்குப் பின்! "சுவைத்து அருந்தவில்லை நீங்கள் விருந்தை" யென்று காயம் படா தன் கன்னத்தைக்காட்டி நின்றாள். கலையாத திலகத்தைக் காண்பீர் என்றாள். "ஒரு நிலையில் உள்ளமில்லை; நாளை காண்போம்"—என மொழிந்தெழுந்தான். முழு நிலவாள் மோகத்தால் அவனைப் பற்றி, இருங்கள் எனத் தாபத்தை விழியால் சொன்னாள்.

கள்ளிப் பழத்தின் சிவப்பை வெல்லும் அவள் கனியுதட்டில் ஊறுகின்ற காதல் ரசம் பருகாமல் நின்றிருந்தான். "கண்ணே!" என்றாள். அவன் கண்ணே

அவள் மீதில்லை. கரம் பற்றிச் சாய்ந்தாள் தோள்மீது! நாளை யாகட்டும் எனக் கூறி, கையிலுள்ள மயிலிறகை அவள் கரத்தில் தந்துவிட்டு ஓடி விட்டான்.

மயிலிறகைப் பார்த்தபடி மன மயக்கம் கொண்ட பெண்ணாள் வீற்றிருந்தாள், அசையாமல்!

ஆயிரமாயிரம் அழகு இழைகள்! இருந்தாலும் அந்த நீலக்கண்ணின் கோலமே கோலம்! வான வில்லினும் அழகு! வைரப் பிறையினும் அழகு! அந்த அழகு மயில் கண்ணிலே அவள் கண்டாள் நலங்கிள்ளியை! அவன்



இதழ் அழுந்தும் முகமாகத் தன் முகத்தை அதிலே கண்டாள்! ஈருயிரும் ஒருடலும் எனும் இலக்கணத்தைக் கற்பனையால் ஓவியந் தீட்டிக் களித்தாள், அந்த மயில் இறகின் நெற்றியிலே!

அவனோ, இராசவீதி நிகழ்ச்சியினால் நெஞ்சதிர்ச்சி கொண்டு விட்டான். "உரிமைக்கு வழியில்லை பாண்டியத்தில்! உள்ளம் சொல்லுகின்ற நினைப்புக்குச் சித்திரம் தீட்டுவது பெருங்குற்றம்! என்ன கொடுமை! கூன்பாண்டியன் குருடாகி விட்டான்! குலச்சிறையோ இன்னும் இருவிழிகள் பெற்றுவிட்டான் பாண்டி நாட்டு மண்மீது நெருப்புமிழ! யார் அந்த ஞான சம்பந்தன்? தேவியிடம் திருமுலைப்பால் குடித்தவனும்! திமிர் பிடித்தவனும்! ஏமாற்றிச் சமணர் எண்ணாயிரவரை அழித்த தன்றி எஞ்சியுள்ள பேர்களையும் கொல்வதற்குத் துணிந்த பாவி! அந்தச் சிறு பார்ப்பான் நம் பெரு நிலத்தை வளைத்து விட்டான்; சிவன் பேர் சொல்லி! சக்திதனைக் காட்டி! முதுகிழவர் — முத்தமிழர் — அவர் முதுகெலும்பு ஒடியுமட்டும்— மூளையெல்லாம் சிதறுமட்டும்— அடிப்பதுதான் சைவமோ? அன்புக்கு மடை கோலும் அடியார் கூட்டம் இதுதானோ? மிகக் கொடுமை! மிகக் மை!! பிள்ளைக்கறி கேட்பார்— —பள்ளியறைக்குப் பிறர்மனைவி வருதல் வேண்டு மென்பார்— ஆணை அணங்காக்கி மகவு பெற்று 'ஐயப்பா' என்பார்— அழுக்குமிகு சிவனுக்கு அடியார்கள்! இவர்கள் வளர்ந்தால் விடியாது நாடு! என்போன்ற இளைஞர்கட்குக் காதல் அல்ல முதல் வேலை—பாண்டியத்தில்' உரிமைப் போர் துவங்குவதே முதன்மைத் தொண்டு! சாலையிலே சமணர் நடத்தலுமாகாதாம்! சம்பந்தன் வாக்காம்— குலச்சிறையின் சட்டமாம்! அந்தத் தடைமீற சமணத் துறவிகள் இன்றே குவிய வேண்டும்! அதற்குத் தலைமையேற்க ஒருவன் வேண்டும்! யார் அந்தத் துணிவுடையான்? யார் அந்தத் தலைமைச் சிங்கம்?"

நலங்கிள்ளி கேள்வி கேட்டான் விண்ணோக்கி! பாண்டி நாட்டு மண்ணோக்கி!!

பீலிவளையோ பெருவிருந்து அருந்தலாம் இன்றென்று பேரழகை *ஆடியிற் சரி பார்த்து, ஆவணிவீதி கடந்து, புரட்டு ஆசி கூறும் புரோகிதர் வாழ் பகுதி தாண்டி, தன் ஐப்பசிக்கு உணவு தேடிக் காத்திருந்தாள் சோலையோரம்! அவன் மாலை நேரம் போனபின்னும் வரவில்லை. மலர்ப் புதரின் அருகாமை மண்டபத்தில் காத்திருந்த கட்டழகி கண்ணயர்ந்தாள். காளை வந்தான். காதல் உண்டார். பிறகே—கேட்டாள், வெகு நேரம் ஆனது ஏனென்று!

"மனக் குழப்பம் கண்ணே—மன்னித்து விடுக!" "நீலமிழைத்துப் பச்சை பதித்த தங்கத் தட்டாம் மயி

---

* ஆடி—கண்ணாடி, ஆவணி வீதி—மதுரையில் ஒரு வீதி, ஐப்பசி—ஐம்புலன்களின் பசி.

விறகில் நீயும் நானும் இருப்பது பார்!''

''ஏன் அத்தான்; கொழு கொம்பில் படருவதால் கொடி யென்றீர் பெண்ணை யென்பீர்! தோகையென மங்கையரை அழைப்பதற்கு விளக்க மென்ன?''

''மயில்களிலே பெண்ணுக்குத் தோகையில்லை! ஆண் மயிலுக்கு அழகூட்டும் அணிகலனே தோகைதான்! மயிலுக்கென்ன; மனிதருக்கும் தோகைதான் சிறப்பூட்டுதலால், பெண் மணியைத் தோகை என்றார்.''

''பெரும் புலமைக் கவிஞரத்தான் நீங்கள்!''

''கவிதையடி கண்ணே நீ!''

''தமிழத்தான் நீங்கள்! என்னைத் தழுவத்தான் வேண்டும்!''

பேச்சிடையே விழித்துக் கொண்டாள்! வெறுங் கனவு. வீரன் வரவேயில்லை. விடிந்தது பொழுது! வேகமாய் நடந்தாள் அமுது!

செல்லும் வழியிலே சித்திர வீதி! ஆங்கோர் இளைஞன், அழகு சிகையின்றி—அணிமணிகள் எதுவுமின்றி நடக்கின்றான். அவன் கையில் மட்டும் மயில் தோகை!

'வாழ்க சமணம்' எனும் முழக்கம் நாவில்! யார் இவன்? சமணர் வெளிக் கிளம்பலாகாதெனும் சட்டத்தை மீறுகின்ற வீரன்? கிழவன் போனவழி போவதற்கு வருகின்றானே? அம்மவோ! அரண்மனைக் காவலர் காணின்-அழிவுதான் இவன் முடிவு! நடுங்கினாள் பீலிவளை; அவனைக் கண்டு! நெருங்கினான் அத்துறவி! விழியெல்லாம் இருள் மேவ சுருள் கத்தி சுழல்வது போல் சுழன்று வீழ்ந்தாள்! பொக்கை வாய்ச் சமணன் விட்ட போர்க் கொடியைத் தொடர்ந்து ஏந்த-சக்கைகளாம் சைவர் செயல் எதிர்த் தொழிக்க—எழுச்சி பெற்ற பெருவீரன், நலங்கிள்ளி! அவன் கடந்து விட்டான், தூய காதலினால் மயக்க முற்ற காரிகையை! எறிந்து விட்டான் இன்ப ஒவியம் தீட்டுகின்ற தூரிகையை!

ஓடி வழி மறைத்தாள். ''உயிர் எடுத்துச் செல்லாதே'' யென்று!

''உரிமை எடுத்துச் செல்லுதற்கு ஊராளுங் கூட்டம்—திருஞானம் கும்பல் — இருக்கும் வரை போராட்டம்—நடக்கும்! இதில் மாற்றம் இல்லை யென்பேன்—மன மிருந்தால் காத்திருப்பாய் — உயிரிருந்தால் ஒன்றுவோம்!''

நலங்கிள்ளி பேசிவிட்டு முழங்கிச் சென்றான் 'சமணம் வாழ்க' என்று!

தெருக் கூட்டிச் செல்கின்ற தோகையிலே சிந்தியது ஓர் இறகு! எடுத்தாள் எழிலரசி பீலிவளை! ஒளி காட்டும் கண்ணிரண்டும் குளங்காட்டி மங்கியதால் மயிலிறகில் அவள் உருவம்—அவன் வடிவம் இரண்டும் கண்டாள். அதுவும் ஒன்றாய்க் கண்டாள்! நலங்கிள்ளி தனியொருவன் சைவத்தை எதிர்ப்பதற்கு நடைபோடும் துணிவு கண்டு கண நேரம் காதலையும் மறந்திருந்தாள்! ●

* * *

அடேடே.....சீக்கிரம்
'பிரேக்'கை போடுடா!.....


ஓவியக் கலைஞர்

அகமும் புறமும்

மலர்தலும் கூம்பலும் இல்லதாய அறிவின் துணை கொண்டு மலர்தலையுலகத்து வாழ்வு நடாஅத்தி நலம் பெற்றிலங்கினர்; தண்டமிழ் கற்ற நற்றமிழ் இனத்தவர் என்ற உண்மையை பண்டெழுந்த இலக்கியங்கள் பாங்குற விளக்குவனவாம். தொகையும், பாட்டும், கீழ்க் கணக்கும், காப்பியமுமென்றித் தொடக்கத்தனவாய நூல்களெல்லாம் அறிவியல், பொருளியல், மொழியியல், அரசியல் என்றின்னவாய துறைகளையே விரித்துரைக்கக் காண்கிறோம். வானியல் ஆய்வைத் துணைக்கொண்டு வையகத்தை உய்விக்க வெண்ணிச் செயலாற்றும் இக்கால அறிஞர்கட்கு அக்கால விலக்கியங்கள் பெரிதும் துணைபுரியாதென்று எண்ணலாம். நாமும் இன்று வாழும் மக்கள் மனநிலையை நோக்கின் அது விஞ்ஞானத் துறையொன்றையே எதிர்நோக்கி நிற்கக் காண்கிறோம். ஆனாலும் அத்துறை ஒன்றினாலேயே அறிவியல் கலந்த வாழ்வியல் அமைந்து விளங்கிட முடியுமா என்பதே ஒரு பெருங் கேள்வியாகும். எங்ஙனமாயினும் வானியலாராய்ச்சி நடத்துவதெல்லாம், அதன் காரணமாக புதியன பலவற்றை விளைந்திடச் செய்வதெல்லாம், வாழ்வியலிலே புறத்திருந்து துணை புரியும் கருவியாயமையுமேயன்றி, அகப் பண்பு நிறைந்த திருந்திய உணர்வு வாழ்வை நல்காதென்பதே உண்மையாதல் கூடும். இங்கே, தமிழினத்தார் வாழ்ந்த அக்கால பண்பமைந்த உணர்வு வாழ்வை உன்னின் உண்மை புலனாவதாகும்.

அக்கால உணர்வு வாழ்வு எங்ஙனம் முகிழ்த்திருந்தது? அது, அகம் புறமென்று மலர்ந்திருந்தது. அகமாவது என்ன? ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அஃது இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வினாலேயே நுகர்ந்தின்ப முறுவதோர் பொருள் என்று கூறுவர். புறமாவது என்ன? தலைவன் தலைவியரே யன்றி, எல்லோரானும் துய்க்கப்பட்டு இத்தன்மைத்து என்று பிறர்க்கும் உரைக்கத் தக்கதாய் உள்ள பொருள்

என்று கூறுவர். இத்திறத்த நுண்பொருளை உள்ளடக்கி நெறிப்படுத்திய அந்த வாழ்வியற் பிரிவு தமிழனின் பெருவாழ்வு என்றே சொல்ல வேண்டும். வாழ்வியலைப் "பொருள்" என்னும் தலைப்படக்கி இலக்கணம் வகுத்துள்ளமை தமிழர்க்கும் தமிழுக்குமே யுள்ள தனிச் சிறப்பு—வேறெம் மொழிக்கும் — இனத்தவருக்குமில்லாத தனிவாழ்வு என்றே கூறவேண்டும். எழுத்தானும், சொல்லானு மியைந்த மொழியொன்றினுக்கு இலக்கணம் தேவைப்படலாம். ஏனெனின், அம்மொழி சிதையாமைக்கு. ஆனாலும், தமிழன் தன் வாழ்வும் சிதையாதிருக்க வெண்ணியே பொருள் இலக்கணம் எழுதினான். இதனை எண்ண— எண்ண நமக்கு அவன் வாழ்வில் கொண்டிருந்த அக்கறை எத்துணையதென்பதை அறிய ஏதுவாகிறது. எனினும் அஃது எவ்வளவில் பயனளித்தது என்பதையும் எண்ணிப் பார்த்தல் நமக்குப்பெரிதும் பயன்விளைப்ப தொன்றாகும். ஏனெனில், அரசு, மொழி, இனம், சமயம் என்றிவற்றால் பிணக்கும், பிளவும், பேதைமையும் பெற்றிலங்குமின்றைய மக்கட்கு அன்றைய கவிதை சொல்லும் கருத்துரைகளை அறிதல் அவசியமாகிறது.

இரண்டாயிரமாண்டுகட்கு முன்பு நிலப் பகுதியில் பெரும் பகுதி மக்களினம் திருந்திய வாழ்வைக் கண்டறியாத காலமாக விருந்திருக்கலாம். அக்கால உலகிருளில் செங்கதிராய்த் திகழ்ந்திருந்தவர்கள் தண்டமிழ் இனத்தவர்கள். அரசும், குடியுமாக அமைந்து வாழ்ந்திருந்த அந்தக் காலம் தமிழனின் பொற்காலம். பெற்றோர் குடும்பத்திலிருந்து, வேந்தும் குடியுமான அந்த நாட்டுக் குடும்ப உறவுவரை கண்ணோட்டத்தியைந்த உலகாய்த் திகழ்ந்திருக்கக் காண்கிறோம். அருமறை உதவிய திருவள்ளுவனின் அறமொழியில் ஒரு மொழி "கண்ணோட்டத்துள்ளது உலகியல்" என்பதல்லவா? இங்கொரு கருத்தை நாம் சிந்திக்க வேண்டியவர்களாகிறோம்.

அகமும் புறமுமாகப் பகுத்து வாழக் கற்றுக் கொண்ட தமிழன், அக வாழ்வில் பெற்றிருந்த செம்மை வாழ்வை புற வாழ்வில் பெற்ற வகைவில்லை என்பதாகும். இவ்வுண்மை இலக்கியத்தில் நுழைந்தவர்க்கு எளிதிற் புலனும். தலைவனும் தலைவியுமாக விருந்து இன்ப நுகர்ச்சிகளின் எல்லையைக் கண்டுணர்ந்து, இல்லறத்தே யிருந்து ஆற்ற வேண்டிய அறங்களை வழுவாது ஆற்றி அக மகிழ்ந்த வாழ்வியல் விளக்கமே அகமும், கலியும் ஐங்குறுநூறுமாம். நிற்க அரசமைத்து, மொழி வளர்த்து, ஆற்றலைப் பெருக்கிப் புற வாழ்வை வகுத்த தமிழன் போரும் பூசலும் விளைத்து ஈசலாய்

---வித்வான் கி. சண்முகம்

அழிந்திருக்கிறான் என்பதைக் காணவே நாம் நாணுகிறோம்.

தந்தை மைந்தனோடு பொருதலும், மைந்தன் தந்தையொடு பொருதலும், இளையவன் முதியவனோடு பொருதலும் ஆய இந்நிகழ்ச்சிகள் அக்கால அரச குடும்பங்களில் சொக்கட்டான் ஆட்டமாகவே எண்ணப் பட்டிருக்கிறது. இது போன்ற நிகழ்ச்சிகள் புறப்பாட்டிலும் அஃதொத்த பிற நூல்களிலும் காணப்படும் செய்திகளாம். தோள்வலியும் வாள்வலியும் பெருக்கி வையத்துப் பேரரசு செலுத்தி வாழ்ந்தவர் தமிழர் என்பது வெள்ளிடை மலை. பங்காளிப் பகையால், பாராண்ட முகாம் பாங்கிழக்க நேர்ந்தது என்பதும் வெள்ளிடை மலை. எனினும் அரசு அழிக்கப்பட்டு மொழி ஒழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இக்கால நிலையையொட்டி நோக்குங்கால் புற வாழ்வில் தமிழன் தோற்றவன் என்றே கூறவேண்டும். அதற்குக் காரணமாயமைந்தது உட்பகையே என்பதனையும் உணர வேண்டும்.

ஆனால் சுகவாழ்வில் அன்றிருந்து இன்றுவரை வெற்றி முரசு கொட்டியிருக்கிறான் தமிழன் என்பது கண் கூடு. தலைவனும் தலைவியும் உளம் புணர்ந்த நாள் முதல் உயிர் நீங்கும் காலம்வரை மாசு மருவற்ற தூய வாழ்வில் துலங்கியிருக்கிறார்கள் என்பதற்கு எண்ணற்ற இலக்கியங்கள் சான்று பகரும். தலைவன் பிரிவு பொருது வருந்திய தலைவி செய்கோலம் அழித்துச் செய்யாக் கோலத்தோடிருந்த செய்திகள் பல காண்கிறோம். உருவால் திருவால் ஒன்று பட்ட தலைமக்கள் இறுதிவரைப் பிரியாது இல்வாழ்ந்திருந்தனர் என்பதை அறிகிறோம். அவைபோன்ற செய்திகள் முறிவு மணம் வேண்டி வாழ்வார்க்குப் பெருவியப்பாக இருக்கலாம். துறைபடியப்போய தலைவியொருத்தி நீர் வழியே இழுத்துச் செல்லப் பட்டாளாக, அவண் கரை வழியே சென்ற தவனொருவன் அதுகண்டு நீர்பாய்ந்துத் தலைவியைக் கரை சேர்த்தான். அவன் அவளை ஆகமுறத் தழுவி அணைத்தெடுத்து வந்தானாதலின் அவள் அவனையே யன்றி பிறனை மணக்கிலா பெருங்கற்பினளாயினள் என்னுமிச் செய்தி கற்றவர் போற்றும் கலித்தொகையுட் காண்கிறோம். கற்பென்னும் இல்லமைத்து அதில் வாழ்ந்த தலைமக்கள் தமிழர்கள் என்பதனை நோக்குங்கால் அகவாழ்வில் எத்துணைத் தூய்மை? எத்துணைச் சீரிய நாகரிக நிலை? வாழ்வில் உயர்வுகண்ட மனிதன்—அவனான் தமிழன் பெண்ணுக்குக் கற்பைப் பேணிக் காக்க வேண்டிய பெரும் பொருளாக்கினான். ஆணுக்கு அறத்துள் ஒன்றாம் ஈதலையே அரும் பொருளாக்கினான். அவனின் உயரிய அந்த அக வாழ்வு மனிதவினம் உள்ளவரை மிளரும் என்பதில் ஐயமில்லை. வாழ்க தமிழ் அகம்!

அல்ஜீரியா

அல்ஜீரியா — வட ஆப்பிரிக்காவின் நடுவில், மேற்கில் மொராக்கோ நாட்டையும், கிழக்கில் டுனிஸ்யா நாட்டையும் எல்லையாகக் கொண்டு அமைந்திருக்கிறது.

சுமார் ஒன்பதுலட்சம் மக்கட் தொகை கொண்ட இந்த மண்ணுக்கு பிரெஞ்சுக்காரர்கள் உரிமை கொண்டாடி வாழ்கிறார்கள்.

இந்த நாட்டின் ஆதிக் குடிகள் 'பெர்பர்ஸ்' என்னும் ஜாதியினராகும். இன்றுகூட அவர்களது பழக்க வழக்கங்கள் எல்லா மக்களிடத்தும் காணப்படுகின்றது.

பிறகு ஏழாவது நூற்றாண்டில் வட ஆப்பிரிக்காவில் குடியேறிய அராபியர்கள் இந்த 'பெர்பர்ஸ்' ஜாதியினரையும் முஸ்லிம்களாக மாற்றி விட்டனர். இவர்களும், அராபியர்களும் சேர்ந்து மொத்த ஜனத்தொகையில் 90 சதவீதமாகத் திகழ்கின்றனர். மீதமுள்ள பத்து சதவீதமாக அங்குக் குடியேறிய பிரெஞ்சுக்காரர்கள் திகழ்கின்றனர்.

மதம்

முஸ்லீம் மதமே அங்கு வழங்கி வந்தாலும்கூட பிரெஞ்சுக்காரர்கள் அதை அடக்கி ஒடுக்குவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். உதாரணமாக 1830-ம் ஆண்டில் 106-ஆக இருந்த மசூதிகள் இப்போது எட்டாகக் குறைந்து விட்டதென்றால், அதற்கு பிரெஞ்சு அரசாங்கத்தின் நயவஞ்சகக் கொள்கைதான் காரணமாகும். அழிக்கப்பட்ட மசூதிகள் பல அரசாங்க ஆதரவினால் மாதா கோவில்களாக மாற்றப்பட்டுவிட்டன.

—மதத்தைப் பொறுத்தவரையில் இப்படிச் செய்தால்தான் இப்போது முகிழ்த்து வரும் அராபியர் உணர்ச்சியையும், அதனால் அவர்களிடையே தோன்றக்கூடிய ஒற்றுமையையும் முளையிலேயே கிள்ளிவிடலாமென்று பிரான்ஸ் மனப்பால் குடித்திருந்தது.

மொழி

மொழித் துறையிலும் பிரெஞ்சுக்காரர்கள் தற்போதைய வட நாட்டு ஏகாதிபத்திய வாதிகளைப் போலவே கொள்கை வகுத்துக் கொண்டனர்.

அராபிய மொழியைப் பள்ளிகளில் போதிப்பதற்குப் பெருந் தடைகள் விதிக்கப்பட்டன. அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் அராபிய மொழி கற்றுக்கொடுக்

கக் கூடாது—எனச் சட்டம் இயற்றினர். துவக்கப் பள்ளிகளில் அராபிய மொழி சொல்லித் தருவதும் பலாத்கார முறையில் தடுக்கப்பட்டது. மீறி சொல்லித் தரும் ஆசிரியர்கள் நியாயம் சிறிதளவுமின்றி கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டனர்.

இதனால் அராபியக் குழந்தைகள் தங்கள் தாய்மொழியை ஏதோ ஒரு அன்னிய மொழியைப்போலவே கற்றுவருகின்றனர். பிரெஞ்சு மொழிதான் அவர்கள் சொந்த மொழி யென்று நியதியை ஏற்படுத்த அவர்கள் அரும்பாடுபட்டு வருகின்றனர்.

கல்வி

தாய்மொழி போதனை தடுக்கப்பட்டால் கல்வி வளர்ச்சி எங்ஙனம் ஏற்படும்? எனவே அல்ஜீரிய மக்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் தற்குறிகளாகவே இருக்கின்றனர். சுமார் இரண்டு மில்லியன் குழந்தைகள் பள்ளிக்கூடம் போக முடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. காரணம், அந்த மக்களிடையே நிலவிவரும் வறுமைதான்! சோற்றுக்கே வழியில்லாதபோது எந்தப் பெற்றோர்களால்தான் தங்கள் குழந்தைகளைக் கல்விச் சாலைக்கு அனுப்பிவைக்க முடியும்?

பொருளாதாரம்

காலனி ஆதிக்கத்தில் ஒரு நாட்டின் பொருளாதாரம் எப்படி இருக்கமுடியும்? பாவம்: அல்ஜீரியர்கள் ஏழ்மையில் உழலுகின்றனர்.

சாகுபடி செய்யக்கூடிய நிலத்தில் பெரும் பகுதிக்குக் குடியேறிய பிரெஞ்சுக்காரர்கள் சொந்தக்காரர்களாயிருக்கிறார்கள். அல்ஜீரியர்களில் சுமார் 0·2 சதவீதத்தினருக்குத் தான் சொந்தத்தில் அதிக நிலமிருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அந்த அளவுக்கு ஒண்டவந்த 'பிடாரிகள்' ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்!

அதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் சமாளிக்க முடியாத பிரச்சினையாக வளர்ந்து விட்டது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான அல்ஜீரியர்கள் நம் தமிழர்களைப் போலவே வயிறு வளர்ப்பதற்காக வெளி நாடுகளுக்கு—பெரும்பாலும் பிரான்சுக்குக் குடியேறுகின்றனர்.

அரசியல்

அல்ஜீரியாவை பிரெஞ்சுக்காரர்கள் ஒரு அன்னிய நாடாகவோ, அல்லது காலனி நாடாகவோகூட மதிக்கவில்லை. அதை பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஒரு மாகாணமென்றே சட்டம் இயற்றி வைத்திருக்கின்றனர். இந்தியா ஒரே நாடு என்று வாதிடுவதைப்போலவே அல்ஜீரியாவும் பிரான்சின் ஒரு அங்கமே என்று சொல்கின்றனர்.

சட்ட வரம்புக் குட்பட்ட விடுதலை இயக்கங்களை பிரெஞ்சு

அரசாங்கம் நசுக்கிவிட்டதால் நாளடைவில் அங்கே பலாத்கார வாதிகள் தோன்ற ஆரம்பித்த னர்.

1954-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதிதான் முதன் முதலாக பலாத்காரவாதிகள் போலீஸ் நிலையங்கள் அழித்து, ரயில்—தந்திப் பாதைகளைச் சிதைத்து தங்கள் போராட்டத் தைத் துவக்கினர். இதைத் தொடர்ந்து 'தேசிய விடுதலைப் படை'—'தேசிய விடுதலை முன் னணி' போன்ற அமைப்புகள் தோன்றி இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின் றன.

இவர்களில் சிலர் எகிப்து நாட்டில் தலைமறைவாக இருந்து தாயக விடுதலைக்குப் பணியாற்றுகின்றனர்.

அப்டிரஹிமான் கியோனே: (படம். 1) இந்த வாலிபர் ஒரு சமயம் அல்ஜியர்ஸ் நகரத்து மேயருக்கு உதவியாளராகப் பணியாற்றியவர்: இப்போது ஆயுதமேந்திய புரட்சிக்குத் திட்டங்கள் தீட்டித் தருகிறார்.

பேர்ஹாட் அப்பாஸ்: (படம். 2) இவர் 'அல்ஜீரியர் ஜன நாயக யூனியன்' என்னும் அமைப்பிற்குத் தலைவர். பிரெஞ்சு சிப்பாய்கள் இவரைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

பேன் பெல்லா: (படம். 3) இந்த யுவர்தான் 'தேசிய விடு தலை முன்னணி'யின் 'இராணுவ மூளை' என்றழைக்கப்படுகிறார். 1952-ம் ஆண்டு பிரெஞ்சு அர சாங்கம் இவருக்கு ஆயுள் தண் டனை கொடுத்தது. அன்று தப்பி யோடிய இவர் இன்னும் தலை மறைவாகவே வாழ்கிறார். இவ ரைப் பிடித்துக் கொடுத்தால் பிரெஞ்சுக்காரர்கள் 1000 பிராங்குகள் பரிசு தருவர்.

—இவர்களுள் ஒருவர்தான் நாளை விடுதலை பெற்ற அல்ஜீரி யாவின் நாசராக; மாசேதுங் காக விளங்கப் போகிறார்!

—(மூலம்: 'லைப்': 'ஜன')

தவறும் தண்டனையும்

ஏசு: கருணானந்தம்

கடைவீதி செல்லுகையில் கரிகாலன் வீட்டில்
  கதவிடித்தேன், பதிலில்லை; காதுவைத்துக் கேட்டேன்!
மடைமோதி உடைத்துவரும் வெள்ளம்போல் ஓசை—
  மனைவியுடன் போர்தொடுத்துக் கொண்டிருந்தான் போலும்!
"தடையேதும் கிடையாது; தாய்வீடு செல்!உன்
  தந்தைக்குத் தந்தியொன்று தந்திடுவேன், இன்று!
விடையேதும் தேவையில்லை! வெளியேறு, முன்னே!
  விடியாத மூதேவி! வீணான பீடை!"

திட்டியது தீர்ந்ததெனத் தட்டியழைத் தேன்நான்,
  தெருக்கதவைத் திறந்தவுடன் துவங்கிவிட்டான் மீண்டும்!
"இட்டிலியில் உப்பின்றிச் சுட்டுவிட்டாள்; மேலும்
  எண்ணையில்லை; சட்டினியில் எவ்வளவு காரம்!
பட்டினியால் வதைந்திடவா பெண்டாட்டி கொண்டேன்!
  பயனில்லா வாழ்வெதற்கு? நீயேசொல்!" என்றான்.
"அட்டியின்றித் துரத்திவிட்டால் அறிவுவரும்; யார்க்கும்
  அஞ்சாமல் செய்!"என்றேன்—அகன்றுவிட்டேன் பின்னே!

இரவுமணி எட்டிருக்கும் திரும்பிவரும் போது.
'எவ்வாறு தனித்திருப்பான் என்தோழன்? இல்லாள்
பிரிவுதனைத் தாளாமல் பெருந்துயரில் மூழ்கிப்
பித்தனைப்போல் தத்தளிப்பான் பேதை!'யென எண்ணிப்
பரிவுடனே கதவருகில் காலெடுத்து வைத்தேன்.
பதறிவிட்டேன், உட்புறத்திப் பழகும்ஒலி கேட்டு!
"சரி; அதனை நினைப்பதற்குத் தருணம்இது தானா?
தவறியவன் நானேதான்! தண்டனைக்குச் சித்தம்!

கன்னத்தில் அறைந்துகொண்டேன், மன்னிப்புக் கேட்டு!
காயத்தில் இதழொற்றி நோய்தீர்ப்பாய், கண்ணே!
என்னென்ன கற்றாலும், இல்வாழ்வின் தன்மை
இன்னதென உணராத முட்டாள்,என் நண்பன்!
அன்னவனின் சார்பில்ஒரு அறைபோட்டுக் கொள்வேன்;
அதன்வடுவும் துடைத்துவிடு மெதுவாக!"என்றான்!
மின்னலைப்போல் மறைந்திடுமோ காதலர்கள் ஊடல்?
மிகவெட்கித் தலைகவிழ்ந்தேன்; வேறென்ன செய்வேன்?

எரிமலை வெடித்தது

டைரக்டர் ஏ. காசிலிங்கம்

நண்பர்களிருவரும் பள்ளிக்கூடம் விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அது பரீட்சை நேரம்.

"டேய் மாணிக்கம்! எப்படியடா எழுதியிருக்கிறாய்? நான் இந்த வருஷமும் கோட் அடிக்க வேண்டியதுதான் போலிருக்கிறது. ஒன்றுமே புரியவில்லை: ஒரு கேள்விகூட."

"நான் மாத்திரம் என்ன! ஆனா எப்படியும் பாசாகி விடுவேன். பிறகு என்ன செய்வது என்பதுதான் தெரியவில்லை."

"உனக்கென்னடா, வீட்டிலே வேண்டிய சொத்திருக்கு. சும்மா இருந்தே சாப்பிட்டுக் கொண்டிருக்கலாமே! ஆமாம், மேல் கொண்டு படிக்கப் போவதில்லையா?"

"அதுதான் சித்திக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லையே! வீட்டிலே இருந்தா போதுமாம் — அனாவசியமாக ஏன் ரூபாயை செலவு செய்யணும்னு சொல்லுகிறாள்."

இந்தப் போக்கில் அவர்களது சம்பாஷணை சென்று கொண்டிருந்தபோது எதிரே சிலர் குடித்துக் கும்மாளமடித்துக் கொண்டு வருவது தெரிந்தது. மாணிக்கம் அந்தப் பக்கமாக திரும்பிப் பார்த்தான். முகத்தில் திடீரென்று ஒரு மாறுதல்!

"டேய், டேய், நடராஜா!

வாடா, நாம் இந்தப் பக்கமாக வீட்டுக்குப் போய் விடலாம்.''

அவனிடமிருந்து பதிலை எதிர் பார்க்காமல் பரபர வென்று இழுத்துக் கொண்டு சந்துப் பக்கமாகப் போனான் மாணிக்கம். நடராஜனுக்கு இது ஒன்றும் புரியவில்லை.

''மாணிக்கம், என்னடா இது. உன் முகம் பேயறைந்த மாதிரி இருக்கிறது!''

இன்னும் ஏதாவது கேட்டால் அழுதுவிடுவானோ என்றிருந்தது மாணிக்கத்தின் முகம். கவலையற்ற பையன், நல்லவன், திறமைசாலி, ஜாலி பேர்வழி- என்று பெயர் எடுத்த தனது நண்பன் இப்பொழுது சில நாட்களாக ஏன் இப்படி மாறி விட்டான் என்பது நடராஜனுக்கு புதிராகவே யிருந்தது. பக்கத்து வீடு-குழந்தைப் பருவத்திலிருந்தே ஒன்றாக ஓடியாடிப் பழகியவர்கள்— ''மாணிக்கமா? நடராஜனைகேட்டால் தெரியுமே!'' இது ஊர்ப் பெரியவர்களிடையே கிளம்பும் பேச்சு—அந்த நடராஜனுக்கே மாணிக்கத்தின் இந்த மாற்றம் குழப்பத்தை உண்டு பண்ணியது.

மாணிக்கம் ஏழை வீட்டில் பிறந்தவன். இன்றுகூட அவனது தாய் தந்தையர் அன்றாட சோற்றுக்கே தாளம் போட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் அவனோ பணக்கார வீட்டுக்கு தத்துப் புத்திரனாகப் போய்விட்டான். அவனது தாயின் ஒன்றுவிட்ட சகோதரி—பால்யத்திலேயே விதவையாகிவிட்டவள் — குழந்தையில்லாக் கவலையைப் போக்க இவனை ஸ்வீகரித்துக் கொண்டாள். பாவம்! ஆரம்ப காலத்தில் அவனும் மகிழ்ச்சியுடன்தான் காலங் கடத்தி வந்தான். ஆனால் வயது செல்லச் செல்ல தந்தையரைப் பற்றிய விபரம் தெரிய ஆரம்பித்தது அவனுக்கு. தான் புகுந்த வீட்டுக்கும், தான் பிறந்த வீட்டுக்கும் இடையே பாழ் வெளியொன்று பயங்கரமாக உருவாகியிருந்ததை உணர்ந்தான்.

தாய் தந்தையரிடம் பற்று கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வளரும். ஆனால் வளர்ப்புத் தாயிடம் இருந்த பாசம் ஏனோ அவர்கள் பேரில் மாணிக்கத்துக்கு வருவதில்லை. வயதறிந்த அவன் அவர்களோடு உணவருந்தி அறியான். ஒருநாள்கூட அவனைப் பெற்ற அம்மா அப்பாவுடன் சொந்த வீட்டில் தங்கியறியான். அவனை அறியாமலே அவனுக்கு தாய் தந்தையர் பேரில் ஏதோ ஒருவித பற்றுதலின்மை! வெறுப்பென்று சொல்ல முடியாது: அதை உதறி எறிய முயற்சிப்பான். முடிவதில்லை. ''ஏன் இந்த எண்ணம்? அந்த விதமாக வளர்த்து வரப்பட்டு விட்டேனா? சித்தி என்னை எவ்வளவு செல்லமாக வளர்த்து வருகிறாள்! எனக்கு என்ன குறை? சிறிது நேரம் நான் வீட்டில் இல்லாவிட்டால் துடிதுடித்துப் போய்விடுகிறாளே சித்தி! ஆனால் அப்பா அம்மா

இதை எப்படி சகித்துக் கொண்டிருக்கிருர்கள்? உண்மையில் என்னுடைய பிரிவால் அவர்களல்லவா அதிகம் அவதிப்பட வேண்டும்! என்னை சித்தியிடம் ஒப்படைத்துவிட்டு கல்லு போலல்லவா உட்கார்ந்திருக்கிருர்கள். அப்போது அவர்களுக்கு என் பேரில் பற்றுதல் இல்லையா?''—இப்படியும் ஓடும் சில சமயம் அவனது சிந்தனை.

ஆனல் தன் பேரில் அதிக அன்புசெலுத்தும் சித்தி, தனது தாய் தந்தையரை மட்டும் ஏன் வெறுக்கிருள்? பணக்காரி என்ற கர்வமா? ஏழைகளைக் கண்டால் ஒதுக்கித் தள்ளி எரிந்து விழும் நடராஜனின் அப்பாவைப் போன்று அவ்வளவு கெட்டவளா?—அப்படி நினைத்துப் பார்க்கவும் முடியாது ஆத்திரத்தால் துடிப்பான் மாணிக்கம். சித்தி கொடுமைக்காரி என்ற அந்த எண்ணமே அவனை சித்ரவதைக்குள்ளாக்கும்.

சித்தி நல்லவள்தான். பின் ஏன் அன்று ஏதோ நாலணு காசை அவளுக்குத் தெரியாமல் அப்பாவிடம் கொடுத்ததற்கு கோபித்தாள்! ஆனல் அவரிடம் கொடுத்த காசுகள்ளுக்கடைக்கல்லவா சென்றது! சித்தி சொன்னதும் சரியாகத்தானே போய்விட்டது—இப்படிக் குழம்புவான்.

சிறுவனு யிருக்கும்போது எண்ணுந்திறனில்லா திருந்தான். இப்போது இவைகளைப் பற்றி நினைக்கும்போது வேதனையால் உழல ஆரம்பித்தான்.

அவனது தந்தை குடிகாரர். சூதாடி. ஏழைத் தொழிலாளிகள் வறுமையை மறக்க-வயிற்றின் எரிச்சலை அடக்க-சாதாரணமாகக் கொள்ளும் முறைதான். ஆனல் மாணிக்கத்துக்கு அதை அந்த அளவுக்கு எடுத்துக் கொள்ள முடியாது போயிற்று. அன்று ஒரு நாள்—பள்ளிக்குத் துள்ளிச் செல்லும் பால வயதுப் பருவம்—ஆசையுடன் அவனது சித்தி அவனது கால்களுக்கு மணிக்கொலுசு அணிவித்திருந்தாள். அதைக் கழற்றிச் சென்று, விற்று விட்டார் தந்தை. அவன் சிறுவன் — அதைப்பற்றி எதுவும் புரியவில்லை. ஆனல் சித்தி அன்று கொண்ட ஆத்திரத்தைப் பார்க்க வேண்டுமே! யாருக்குத்தான் ஆத்திரம் வராது, கொலுசு விற்ற காசு சூதாட்டத்துக்கு பயன்பட்டது என்பது தெரிந்த போது?

இவைகளைப் பற்றி யோசிக்கும்போது தந்தை பேரில் மாணிக்கத்துக்கு ஒரே ஆத்திரம் கிளம்பும். ஆனல் அவரை எதிரே காணும்போது, ஏனே இவற்றை மறந்து விடுவான். தந்தையின் மீது வெறுப்பும் ஏற்படுவதில்லை. அதற்கு நேர்மாருக அவனது சித்திக்கு இவனது தாய் தந்தையர் என்றுலே பிடிக்காத நிலை ஏற்பட்டு விட்டது. சித்தியால் இவனது தந்தையின் வேண்டாத செய்கைகளை மன்னிக்க முடியவில்லை. அவளிடம் மன்னிக்கும்

சுபாவமும் இல்லாதது கண்டு மனம் புழுங்குவான். நாள் செல்லச் செல்ல பழிவாங்கும் முறையிலேயே சித்தி நடந்து வருவது கண்டு நடுங்கினான். இத்தனை சிறிய வயதிலேயே மன வேதனை அவனை வாட்ட ஆரம்பித்தது.

மாணிக்கத்தின் இந்த நிலை நடராஜனுக்கு புரியாததால் நண்பனை கேள்விக் குறியிட்டு நோக்கினான். மாணிக்கம் நண்பனது கையை விட்டு விட்டான். அவனது நடையில் ஒரு சோர்வு; உதட்டில் உதறல்; உணர்ச்சியை அடக்கப் பாடு படுகிறான் என்பது தெரிந்தது.

வழியிலிருந்த சிவன் கோயில் மண்டபத்திற்கு அழைத்துச் சென்று நண்பனை உட்கார வைத்தான் நடராஜன். சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. மரத்திலிருந்து உதிர்ந்த சருகொன்று மாணிக்கத்தின் முகத்தின்மீது உராய்ந்த வண்ணம் கீழே விழுந்தது. மென் காற்றில் அதனுடைய அசைவு துடிப்பை நினைப்பூட்டியது. முகத்தை மூடியவாறு கோ வெனக் கதறிவிட்டான் மாணிக்கம்.

"மாணிக்கம்! ஏன்ப்பா! என்ன? என்ன நடந்தது?"-நடராஜனின் குரல் நடுங்கி ஒலித்தது.

மாணிக்கத்தால் எதுவும் பேச முடியவில்லை. விம்மலை அடக்க பாடுபட்டான். இப்படி அழுததை நினைத்து வெட்கமடைந்தான். தொடர்ந்து அவன் பேரிலேயே அவனுக்கு ஒருவித கோபம் உண்டாகியது.

"என்ன மாணிக்கம், விஷயத்தைத்தான் சொல்லேன்."

"ஒன்றுமில்லை நடராஜா! ஏதோ ஒரு பைத்யக்கார நினைவு."

"பார்த்தாயா, என்னிடமே மறைக்கிறாயே!"

"அதெல்லாம் இல்லை. என்னைப் பற்றி எண்ணிப் பார்த்தேன். பொறுக்க முடியவில்லை."

"யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? இப்போது உனக்கு என்ன வந்து விட்டது?"

"எனக்கு என்ன வந்து விட்டது! ஒன்றுமில்லை. சாலையிலே பார்த்தாயா, யார் குடித்து கூத்தாடிக் கொண்டு வந்தாங்க என்று!"

"நான் சரியாகக் கவனிக்கவில்லையே!"

"கவனித்திருந்தால் இதைக் கேட்டிருக்க மாட்டாய். சாட்சாத் எங்க அப்பாதான் அந்தக் கும்பலிலே வந்து கொண்டிருந்தது"

அனுபவம்!

அனுபவம் என்பது புதுமாதிரியான உபாத்தியாயர்; அது பாடத்தைக் கற்றுக்கொடுத்த பின் பரீட்சையை வைப்பதில்லை; பரீட்சையின் மூலம் தான் பாடத்தைக் கற்றுக் கொடுக்கிறது!

''ஹா ! அப்படியா ? நான் கூட சந்தேகப்பட்டேன்!''

மாணிக்கத்தின் வேதனை தோய்ந்த முகத்தில் ஒரு வரண்ட புன்முறுவல் கூத்தாடி விட்டு மறைந்தது. நண்பனின் உள்ளக் குமுறலின் இரகசியத்தை உணர்ந்து கொண்டான் நடராஜன். மாணிக்கத்தின் தந்தை குடிகாரர் என்பதை கேள்விப்பட்டிருக்கிறுன். ஆனுல் இப்படி நேரிலேயே பார்த்து அதை உறுதிப்படுத்த வேண்டி வரும் என்று அவன் நினைக்கவில்லை. சிறிது அதிர்ச்சி அடைந்தது என்னவோ உண்மை; சமாளித்துக் கொண்டான்.

''போடா மாணிக்கம், இதைப் போய் பிரமாதப் படுத்திக் கொண்டு. எங்கப்பாவைப் பாரேன், எத்தனை பேர் குடியைக் கெடுத்திருப்பார், பணம் சம்பாதிக்கிறேன்-பணம் சம்பாதிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு! நான் அவருக்கு ஒரே பிள்ளைதானே! இதுவரை ஒருகாலணு கொடுத்திருப்பாரா, நான் ஆசையோடு ஏதாவது வாங்க வேண்டுமென்று கேட்டு! அன்று புட்பால் விளையாடும்போது புதுச் சொக்காய் கிழிந்து போனதே, அதற்கு எத்தனை அடி அடித்தார். எங்க அம்மா மாத்திரம் சமயத்தில் வந்து தடுக்கவில்லை என்ருல் அப்போதே 'குளோஸ்' ஆகியிருப்பான் உன் நண்பன். எங்க அப்பா இப்படி இருக்கிருரே என்று நினைத்து நான் ஒருநாள்கூட வருத்தப்பட்டது கிடையாதே. மீறி கோபந்தான் வருகிறது. அப்படியில்லையடா உங்கப்பா. உன்பேரில் எவ்வளவு ஆசையோடு இருக்கிருர்!''

நடராஜனுக்குத் தெரியும், மாணிக்கத்தின் தந்தை அவன் பேரில் எவ்வளவு பாசம் வைத்திருக்கிருர் என்பது. எங்காவது வழியில் சந்தித்து, மாணிக்கத்தைப் பற்றி ஒரு நாளாவது விசாரிக்காமல் இருக்கமாட்டார். சில சமயம் தன்னுடைய அப்பா அப்படி இல்லையே என்று பொருமைகூட கொள்வதுண்டு அவன்.

''அதுதானே நடராஜா, இந்த அவஸ்தைக்குக் காரணம். அவர் என்னுடைய தந்தை; நல்லவர்; ஆனுல் குடிகாரர்; சூதாடி! எனது சித்தியோ என்னை வளர்த்தவள். என்னுடைய தாய்; சந்தேகமில்லை. என் மேல் உயிரையே வைத்திருக்கிருள். ஆனுல் எனது தந்தையை வெறுக்கிருள் அவள். இடையில் நான். எனது தாய் தந்தையரோ பட்டினியால் துடிக்கிருர்கள். நான் உண்டு கொழுத்து உலாவுகிறேன். எப்படி நடராஜா இதை சகித்துக் கொள்வது? தாங்க முடியவில்லையே! சித்தியை விட்டு விட்டு அப்பா அம்மாவிடம் ஓடிவிடட்டுமா? நானும் அவர்களுடன் சேர்ந்து வறுமையை ருசி பார்க்கட்டுமா? தாங்குவாளா சித்தி? ஊரார்தான் ஒத்துக் கொள்வார்களா? சண்டாளன், நன்றியில்லாதவன், குடிகாரனுடைய மகன் என்பதை நிரூபித்து விட்டான்

பார்த்தாயா? — என்றுதானே வம்பளப்பார்கள்? பெற்ற பிள்ளையை ஏண்டா இப்படி விலை பேசி விற்பதுபோல் செய்து விடுகிறார்கள்..."

"என்ன மாணிக்கம் இது, பழையபடி வேண்டாததை யெல்லாம் நினைத்துக் கொண்டு...."

நடராஜனும் ஒப்புக்குத்தான் இதைக் கூறினான். அவன் உள்ளம் மாணிக்கம் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை எடுத்துச் சொல்லிக் கொண்டுதானிருந்தது. தனிமை நண்பனை வேதனைக் குள்ளாக்கும்—அவனை வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

மாணிக்கத்துக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருந்தாள் சித்தி. மகன் கையிலிருந்த புத்தகங்களை வாங்கி மேஜை மீது வைத்தாள். பலகாரம் உண்ணும்படி அன்புடன் உபசரித்தாள். சிறிது முன் நடந்த யாவற்றையும் மறந்து விட்டான் மாணிக்கமும். சித்தியின் அன்பு அவற்றை மறக்கும்படிச் செய்து விட்டது.

கால்பந்தை தூக்கிக்கொண்டு விளையாடப் புறப்பட்டான். இரண்டு மூன்று அடிகள்கூட சென்றிருக்க மாட்டான்; தெருக் கோடிச் சந்தில் யாரோ காத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. யாருடைய ஒவ்வொரு அசைவும் அவனுடைய மனதில் படம் பிடிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த மனிதருடைய உருவம்தான் அது.

ஹாலிவுட் சினிமா முதலாளி ஒருவர் நடிகையிடம்: உங்கள் கல்யாணத்துக்கு வரமுடியாமல் போய் விட்டது. மிகவும் வருந்துகிறேன்; மன்னித்து விடுங்கள்!

நடிகை: பரவாயில்லை! என் அடுத்த கல்யாணத்துக்காவது நிச்சயம் வாருங்கள்!

—'இல்லஸ்டிரேடட் வீக்லி'

ஆம், அவனது தந்தைதான் அங்கு நின்று கொண்டிருந்தார். மறுகணம் மகிழ்ச்சி ஓடி ஒளிந்தது அவனை விட்டு. கால்களோ தந்தை நிற்கும் இடத்துக்கே அவனை இழுத்துச் சென்றன. திரும்பி வீட்டுக்குப் போய் விடவேண்டுமென்ற எண்ணந்தான்; ஏனோ அது முடியவில்லை.

அவர் அங்கு நின்ற தோரணை ஏதோ உதவி கோரித்தான் வந்திருக்கவேண்டும் என்பதை அறிவுறுத்தியது. ஆனால் இவன் என்ன உதவி செய்ய முடியும்? மாணிக்கம் தனது மூளைக் குழப்பத்துக்கு முடிவு காணும்வரை அவர் பொறுத்துக் கொண்டிருக்கவில்லை. மகன் அருகே வந்ததும் பரபரப்புடன் நெருங்கி வந்து கேட்டார்: "தம்பி! சித்தியிடம் போய் அவசரமா ஒரு ரெண்டு ரூபா வாங்கிகிட்டு வா. சின்னத் தம்பிக்கு ஜுரம் அடிக்குது"

இந்த வார்த்தைகளில் நடுக்கம் இருந்தது. அதே நேரத்தில் சித்தியிடம் போய் வாங்கி வா என்பதில் ஒரு அழுத்தமும்

இருந்தது. சித்தியிடம் போய் கேட்கச் சொல்லுகிறரே. வெட்கமில்லையா அவருக்கு? ரோஷம் வேண்டாமா?—இது மாணிக்கத்தின் மனதில் ஓடிய எண்ணம். பிறகுதான் அவனுக்குத் தம்பியைப் பற்றிய நினைவு எழுந்தது.

அவனது உடன் பிறப்பு மூன்று பேர். மூவரும் அவனுக்கு இளையவர்கள்தான். இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும். கடைக்குட்டி தான் பையன். அவனுக்கு நான்கு வயதிருக்கும். அவன் தான் இப்போது சுகமில்லா திருக்கிறன்.

"தம்பிக்கு ஜுரமா? பக்கத்தில்தானே டாக்டர் இருக்கிறர். எடுத்துக் கொண்டு போய் காண்பிக்கக் கூடாது?"

தந்தை அதற்கு பதில் சொல்லவில்லை, அவர் பணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார்.

மாணிக்கம் ஓடினன் அவனது சொந்தத் தாய்வீடு நோக்கி. அங்கே அவனது தாய் மகனை மடியில் கிடத்தியவாறு சோகமே உருவெடுத்து உட்கார்ந்திருந்தாள். கண்களில் நீர் வடிந்து கொண்டிருந்தது. மாணிக்கம் அங்கு வந்ததும் நிமிர்ந்து ஒரு முறை பார்த்தாள். பிறகு குனிந்து கொண்டாள். சம்மட்டியால் அடித்தது போன்று இருந்தது மாணிக்கத்துக்கு. இந்த மூத்த மகனை இழந்துவிட்டோம் என்ற முடிவுக்கு அந்த ஏழைத் தாய் வந்து நீண்ட நாட்களாகி விட்டன.

மாணிக்கம் தம்பியை குனிந்து நோக்கினன். அரைக் கண் பார்வை; இமைகளால் கண்களைத் திறக்கவும் முடியாமல், மூடவும் முடியாமல் அவஸ்தைப்படும் சோக நிலை. தொண்டையிலிருந்து "கர்...கர்" என்ற சப்தம். உதட்டோரத்தில் உமிழ் நீர் நுரையிட்ட வண்ணம் கசிந்து கொண்டிருந்தது. சில வினடிகளுக்கொரு தரம் விக்கல் போன்ற ஒரு இழுப்பு. சாவதுவரை மாணிக்கம் இந்தக் காட்சியை மறக்க முடியாது. ஸ்தம்பித்து அப்படியே நின்றுவிட்டான்.

அந்தக் குறுகிய இடத்தில் ஏழெட்டு பெண்கள் உட்கார்ந்திருந்த போதிலும் மயான அமைதி குடிகொண்டிருந்தது. மாணிக்கத்தின் வரவு அந்த அமைதியைக் குலைக்கவில்லை.

வண்டொன்று ரீங்காரமிட்டு சுழன்று வாயிற் கதவின் மேல் போய் மோதியது. அந்த சப்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்தவன். அந்த இடத்தில் மாணிக்கம் ஒருவன்தான்.

திடீரென்று அவனுக்கு அங்கு தனித்து நிற்பதாக உள்ள ஒரு உணர்வு ஏற்பட்டது. "நான் ஒதுக்கப்பட்டவன். இவர்கள் எனது தாய், தந்தை, சகோதரி, சொந்தக்காரர்கள் அல்ல. இவர்களுக்கும் எனக்கும் உறவு கிடையாது. என்னிடமிருந்து வெகு தூரம் சென்றுவிட்டார்கள் இவர்கள். இல்லை இல்லை,

காலஞ்சென்ற மார்க் ட்வைன் என்ற அமெரிக்க எழுத்தாளர் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகள் எழுதுவதில் தலை சிறந்தவர். அவர் ஒரு சமயம் இந்தியாவுக்கு வந்து இந்திய ரெயில்வேக்களில் பிரயாணம் செய்தார். இந்தப் பிரயாண அனுபவங்களைப் பின்னர் கட்டுரையாக எழுதினர்:

"இந்திய ரெயில்வேக்களில் முதல் வகுப்பில், ரெயில்வே கார்டைப் பிரயாணிகளின் அவமதிப்பாய் நடத்துகிருர்கள்: மூன்ரும் வகுப்பிலே, பிரயாணிகளை கார்டு அவமதிப்பாக நடத்துகிருர். இரண்டாம் வகுப்பிலோ பிரயாணிகளே, ஒருவரை ஒருவர் அவமதிப்பாக நடத்துகின்றனர்"

நான் இவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டேன்."-மாணிக்கத்தின் நினைவு இந்த விதமாக ஓடியது.

குழந்தையின் கண்டத்திலிருந்து வந்த "கர்...கர்" என்ற சப்தம் மெதுவாக ஓய்ந்து கொண்டிருந்தது. பின்புறம் யாரோ விம்மி யழும் குரல் கேட்டது. அவனது தந்தை வாயிற் கதவில் சாய்ந்து அழுது கொண்டிருந்தார். இத்தனை பெண்களுக்கிடையில் தான் வாய்விட்டுக் கதறுகிருேமே என்று வெட்கியோ என்னவோ, மேல் துண்டால் வாயை மூடிக் கொண்டிருந்தார்.

அந்த அழுகை சப்தம்கூட அந்த இடத்தின் அமைதியைக் குலைத்துவிடவில்லை. அதுவும் சிறிது சிறிதாக அடங்கியது. அதோடு "கர்...கர்"என்ற சப்தமும் தொலை தூரத்துக்குச் சென்று கொண்டிருந்தது.

அப்போது அவனது தந்தை மெதுவாக வெளியே நழுவினர். மாணிக்கமும் பின் தொடர்ந்தான். வெளியே வந்தானே இல்லையோ வெறி கொண்டவன்போல் ஓடினன்.

மாணிக்கம் சித்தியின் முன்பு இரைக்க இரைக்க ஓடிவந்து நின்ருன். அவனது முகத்தைக் கண்டு திடுக்கிட்டாள் அவள். பதறியவாறு "என்ன தம்பி? என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"சித்தி! ஒரு அஞ்சு ருபா உடனடியா வேணும்!"

இயந்திரம்போல் வாயசைத்தான் மாணிக்கம். அவனது குரலிலிருந்த குமுறல் சித்தியை என்னவோ செய்தது. ஆனல் அதை வெளிக்குக் காட்டாது, "ஏண்டா தம்பி! இதுக்கு ஏன் இப்படி பதறிப்போய் வர்ரே?" என்று சாதாரணமாகக் கேட்டாள்.

"சீக்கிரம் கொடு சித்தி!"

"ஆமா, எதுக்கு உனக்கு பணம்?"

"சின்ன தம்பிக்கு சுகமில்லை; பார்க்க பயமாயிருக்கிறது. டாக்டரைக் கூப்பிடணுமாம். பணம் வேணுமாம். அப்பா கேட்டார்."—படபட வென்று

பேசினுன். அப்பா கேட்டார்— என்ற வார்த்தை வெளி வந்ததோ இல்லேயோ, சித்தியின் முகத்தில் குரோத உணர்ச்சி வெளிப்படுவதைக் கவனித்தான். "அப்பா கேட்டார்" என்ற வார்த்தையை இவனும் சொல்லியிருக்க வேண்டாம்.

"இங்க என்ன பணங் கொட்டிக் கிடக்குதுன்னு நினேச்சுட்டாஞ உங்கப்பன்!"

இது மாணிக்கம் எதிர்பார்த்ததுதான். ஆனுலும் தாங்க முடியவில்லே அவனுல். சித்தியை எதிர்த்து இதுவரை வாதாடியும் அறியான். அதனுல் உடன் பதில் சொல்லவும் முடியவில்லே. மரம்போல் நின்றுன். கண் கலங்க ஆரம்பித்தது தனது ஆசை மகனே இந்த நிலேயில் பார்க்க சகிக்காமல் விருட்டென்று உள்ளே போய் விட்டாள் சித்தி. அவனிடமிருந்து ஏதோ ஒன்று கைதவறி அதள பாதாளத்திற்கு உருண்டு செல்வது போன்ற உணர்ச்சி! "அண்ணுச்சி! அண்ணுச்சி!" என்ற குரல் அவனே விழிப்புறச் செய்தது. திரும்பிப் பார்த்தான். வீட்டு முற்றத்தில் அவனது இளேய சகோதரி நின்று கொண்டிருந்தாள்.

"அண்ணுச்சி, தம்பி போயிட்டான்!"

விம்மல்களுக்கிடையே வெளி வந்த இந்த வார்த்தைகளேக் கேட்டதும் "ஹா" வென்று அலறியேவிட்டான். உள்ளே சென்ற சித்திகூட என்னவோ ஏதோ என்று துடிதுடித்தவாறு வெளியே வந்துவிட்டாள். அவ்வளவு பயங்கரமாக இருந்தது மாணிக்கத்தின் கண்டத்திலிருந்து வெளிவந்த அந்தக் கூக்குரல்!

"என்னடா தம்பீ? என்ன நடந்தது?" — இது சித்தியின் பதை பதைப்பு!

ஏறெடுத்து நோக்கினுன். அந்த நோக்கிலிருந்த ஏளனம், வெறுப்பு, ஆத்திரம்—சித்தியை இரண்டடி பின்னுல் நகரும் படிச் செய்துவிட்டது.

மாணிக்கத்தின் இளேய சகோதரி—சிறுமி—ஏம்தா ஒரு பயம் அவளேயும் அந்த இடத்தை விட்டே ஓடச் செய்தது.

சித்தி தன்னே சுதாரித்துக் கொண்டு மகனிடம் பேச முயற்சித்தாள். ஆனுல் திரும்பிக்கூட பார்க்காமல் தெரு வழியாக அவன் சென்று கொண்டிருப்பதைத்தான் அவளால் பார்க்க முடிந்தது.

மகன் சென்ற திசை நோக்கி நின்று கொண்டிருந்தாள்.

"மைனி! மாணிக்கத்தின் தம்பி செத்து விட்டானுமே! ஏன்? என்ன செய்துகிட்டிருந்தது?"—பக்கத்து வீட்டுப் பார்வதி கேட்டுக் கொண்டே வந்தாள்.

"என்ன? என்ன? செத்து விட்டானு?"—சித்தியின் உடம்பு முழுவதும் நடுங்கியது.

"இப்பதான் நாகம்மையக்கா சொல்லிகிட்டு, அங்கே தான் போறு—நீயும் வா மைனி, போயிட்டு வந்துடுவோம்."

உணர்ச்சியில்லாது அவனுடன் சென்ருள்.

மாணிக்கம் அவனது தந்தையினது வீட்டையடைந்த போது, உள்ளேயிருந்து அழுகைச் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பெண்களின் ஒப்பாரி முழக்கத்தினிடையே அவனது சொந்தத் தாயின் கூக்குரல் தெளிவாகக் கேட்டது.

எங்கே யெல்லாமோ சுற்றிவிட்டு அப்போதுதான் அங்கு வந்து சேர்ந்தார், அவனது தந்தை. குடிகாரர்கள் முகத்தில் கூட இவ்வளவு பெரிய சோகம் குடிகொள்ள முடியும் என்பதை அந்த முகத்திலிருந்து தான் தெரிந்து கொண்டான்.

''தம்பீ! சித்தி ரூபா கொடுத்தாளா ?''-மௌனம்சாதித்தான் மாணிக்கம்.

''யாரை யெல்லாமோ கேட்டு விட்டேன். ஒருத்தரும் தர மாட்டேன்னுட்டாங்க. அடக்கம் செய்யக்கூட வழியில்லே.''

எப்படி யிருக்கும் மாணிக்கத்துக்கு! ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவாறு வீடு நோக்கிச் சென்ருன்.

சித்தி வீட்டில் இல்லே.

அறைக் கதவு பூட்டப்பட்டிருந்தது. சாவியைத் தேடி எடுத்து கதவைத் திறந்தான். பணப் பெட்டியும் பூட்டித்தான் கிடந்தது. சாவி யிருக்கும் இடத்தில் சென்று பார்த்தான். சாவி அங்கு இல்லே! எப்போதும் அங்குதான் இருக்கும். அன்று என்னவோ சாவியை சித்தி கையோடு கொண்டு போயிருக்கிருள் என்று நினேத்தான். பூட்டை உடைக்க முயற்சித்தான். முடியவில்லே.

மாடிக்கு ஓடினுன். மேஜை அறையில் பணம் வைத்திருப்பாள் சித்தி—அதையும் திறந்து பார்த்தான். சில்லரைத் துட்டு தான் கிடந்தது. சேர்த்து எண்ணிப் பார்த்தான்—எட்டே காலணு இருந்தது. வெறுப்பால் அவற்றைத் தூர விட்டெறிந்தான். அந்த சில்லரைக் காசுகள் ஏற்படுத்திய ஒலி அவனே சித்திரவதைக் குள்ளாக்கியது.

அப்படியே உட்கார்ந்தவன் விம்மி அழ ஆரம்பித்தான்.

நேரம் சாய்ந்துவிட்டது என்பதையும் அவன் உணரவில்லே.

இந்தியாவில் ஆங்கில ஆதிக்க நிர்மாணிகளில் ஒருவரான ராபர்ட் கிளேவ், சென்னேயில் கிழக்கிந்தியக் கம்பெனியில் குமாஸ்தாவாக பணியாற்றியபோது நடைபெற்ற ஒரு சம்பவம் :

கிளேவ் மேலதிகாரி ஒருவரிடம் சண்டை போட்டுவிட்டார். விபரமறிந்த கவர்னர், 'கிளேவ் மேலதிகாரியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்று கட்டளேயிட்டார். பிறகு, இந்த சம்பவத்தை மறந்து, மீண்டும் நண்பர்களாக வேண்டும் என்றெண்ணிய அந்த மேலதிகாரி, கிளேவை விருந்துக்கு அழைத்தார்.

"உம்மிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்—இதுதான் கவர்னர் கட்டளே ! விருந்துண்ணும்படி அவர் ஆணேயிடவில்லே''என்ருராம் கிளேவ் கோபத்துடன் !

கீழே சித்தியின் சந்தடி கேட்டது. அவனது உணர்வும் சலன மடைந்தது. மெதுவாக எழுந்து வந்தான்.

பின் கட்டுக்குச் சென்று கொண்டிருந்த சித்தி திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு ஒரே திகைப்பு!

"மாணிக்கம்! நீ போகவி யாடா?"

பதில் பேசவில்லை. அவளையே வெறித்து நோக்கினுன்.

"என்னுப்பா இது இப்படிப் பார்க்கிறே?"-அவளது உடம்பு நடுங்கியது.

"இப்போது உனக்கு திருப்தி தானே சித்தி? பூர்ண திருப்தி தானே?"

மாணிக்கத்தின் குரல் வெடித்து அலறியது.

"என்ன தம்பீ சொல்றே?"

"என்ன சொல்லுகிறேன்? உன் படுவாவித்தனத்துக்கு எனது உடன் பிறப்பு பலியாகி விட்டான்னு சொல்லுகிறேன். நீ எனக்குத் தாயா? இல்லை, இல்லை; பேய்! தான் பெற்ற பிள்ளையையே உன்னிடம் ஒப்படைத்தாரே ஒரு ஏழை, எத்தனை நாளாகக் காத்திருந்தாய் அவரை இப்படிப் பழிவாங்க வேண்டுமென்று? பெண்ணுக இருக்கிருயே,உனக்கு ஈவு இரக்கம் எதுவுமே கிடையாதா?"

இதைத்தான் சொல்லுவது: இதுதான் சொல்லலாம்-என்ற வரம்பு முறையற்று ஏதேதெல்லாமோ ஆத்திரத்தில் உளறிக் கொட்டினுன்.

கூக்குரல் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் கூடி விட்டனர். சிலர் அவனை சமாதானப்படுத்தவும் முயற்சித்தனர். எதுவும் முடியாது போயிற்று. அவனதுசொல்லம்புகள் ஒவ்வொன்றும், இந்த உலகத்தில் தனக்கிருப்பது எல்லாம் அவன் ஒருவன்தான் என்று நம்பி வாழ்ந்து வந்த சித்தியை சல்லடைக் கண்களாகத் துளைத்தெடுத்தன.

"பிள்ளையைப் பெற்ற தாய்மார்களே! உங்கள் கால்களில் விழுகிறேன். உங்கள் குழந்தைகளை ஒருபோதும் விலைக்கு விற்றுவிடாதீர்கள். உங்களால் காப்பாற்ற முடியாவிட்டால் கழுத்தை நெறித்துக் கொன்று போடுங்கள். இல்லை,ஆற்றிலோ கிணற்றிலோ தள்ளிவிடுங்கள். அதுவும் முடியாவிட்டால் ஒரு துளி விஷம் போதும்-உங்களது அருமருந்தன்ன குழந்தைகளை வாழவைக்க — மனங் குமுறி வதைபட்டுச் சாகாமலிருக்க."

சித்தி தனது நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"போகிறேன் சித்தி—உனது நினைவுகூட என்னைப் பிடிக்க முடியாத இடத்துக்குப் போகிறேன்!"

அந்த இடத்தைவிட்டு ஓடியே போனுன்!

மாணிக்கத்தின் குரலும் உருவமும் மறைந்தது. அதே சமயம் சித்தியின் உயிரற்ற உடலும் நின்ற நிலையிலிருந்து துவண்டு விழுந்தது!

கைக் குழந்தையொன்று வீறிட்டலறியது!

●

பாறாங்கல்
செ.
கே.எ.மதியழகன்
பிஎ

பேராசிரியர் ஐம்புலிங்கம் சட்டக் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. இன்னும் இரண்டொரு ஆண்டுகளில் மாணவர்கள் பிரிவுபசார விருந்து நடத்துவார்கள். அத்துடன் எல்லாம் முடிந்துவிடும். கல்வி உலகில் பேராசிரியர் ஐம்புலிங்கத்தைத் தெரியாதவர்களே கிடையாது. பல்கலைக் கழக வட்டாரத்திலே, தனக்கென்று அலாதியான பெருமையை நிலைநாட்டிக் கொண்டிருந்தார். குழைவாலும், பிறருக்கு துவண்டு கொடுக்கும் சுபாவத்தாலும் அவருக்கு அந்த நிலை வரவில்லை. அவரது அறிவாற்றலின் முன்பு அனைவரும் தலைவணங்கினர். அவரிடம் பாடம் கேட்ட பலர் ஐகோர்ட் நீதிபதிகள், பிரபல வக்கீல்கள். மந்திரிமார்களாயும் இருந்திருக்கின்றனர். அவர் எழுதிய சட்டப் புத்தகங்கள், எல்லா வக்கீல்மார்களின் அலமாரிகளிலும், நீதிபதிகளின் மேஜைகளிலும் கிடக்கின்றன. அதனைப் படித்தே, ஆயிரம், இரண்டாயிரம் என்று ஒரு தினத்தில் சம்பாதிக்கும் சாமர்த்திய வக்கீல்களை, அவரது மனைவி சண்பகவடிவு அம்மாள், அடிக்கடி அவருடன் சம்பாஷிக்கும் போது எடுத்துரைக்கிறாள். அந்த அம்மாள்தான் என்ன செய்வார்கள்! புருஷனை ஊரெல்லாம் சட்டக் கடல் என்றுதான் புகழ்கிறது. அதனால் அவள் வாழ்வு பிரகாசமாகவா ஆகிவிட முடியும்? ஆயிரமோ, ஐநூறோ வாங்கிக் கொண்டு எத்தனையோ நூல்களை புத்தக வியாபாரிக்கு பேராசிரியர் ஐம்புலிங்கம் கொடுத்தார். அவர்களுக் கெல்லாம் பளபளப்பான பங்களா வாழ்வு கிடைத்தது. சண்பக வடிவு அம்மாள், இருபத்தைந்து வருடங்களாக வாடகைக்கு குடித்தனம்தான் செய்கிறாள். அவள் வாழ்வில் வளர்ச்சி ஒன்றும் காணோம். பேராசிரியருக்கோ, சம்சாரத்தைப் பற்றி கவலையில்லை. சட்ட சமுத்திரத்திலே மூழ்கி விடுகிறார். உலகமே தெரிவதில்லை. அம்மையாரிடத்திலேயே குடும்ப அரசியலின் தலைமைப் பதவியை ஒப்படைத்திருந்தார். கல்லூரியில் மாணவர்களுக்கு போதனை, வீட்டிற்கு வந்தால் சட்டப் புத்தக ஆராய்ச்சி—இரண்டுதான் இருபத்தைந்து வருடமாக அவரது ஓய்வில்லாத அலுவல்கள். அம்மையாரின் முகத்தில் விசனக் கோடுகள்...குடும்பத்தின் பொறுப்பை தாங்கித் தாங்கி ஒளியிழந்த மக்கிப்போன கண்கள்...'சர்க்கரை விலை இந்த வாரம் நாலணா குறைந்திருக்கிறது. விறகு விலை எட்டணா மலிவாகியிருக்கிறது.''—இவைதான் அவள் புருஷனிடம் பேசும் உரையாடல்கள். அப்போதுதான் அவள் முகத்தில் புன்னகை அரும்புகிறது. மற்றபடி இரும்பாகி விடுகிறாள். பேராசிரியருக்கு பொருள் புரிகிறது. அவர்தான் நடைமுறை உலகில் இல்லையே: தனது அறிவுலகக் கற்பனையில் ஆழ்ந்து விடுகிறார்.

அன்றைய தினம் சட்டக் கல்லூரியில் அவர் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. மாணவர்கள் அவரது விரிவுரையில் லயித்திருந்தனர். எவ்வளவு சிக்கலான பிரச்சினையையும், அனுயாசமாக எடுத்துச் சொல்லும் கலையை அவர் கற்றிருந்தார். அந்த நிலை சட்டக் கல்லூரிக்கு ஒரு விதி விலக்கு. மற்ற ஆசிரியர்கள் இதனைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். சாதாரணமாக, கல்லூரிகளில் பாடம் நடந்து கொண்டிருக்கும். ஒரு மாணவன் தனக்கு பிரியமான நாவலை விரித்துப்படித்துக்கொண்டிருப்பான். இன்னொருவன் ஆசிரியர் போல், பென்சிலால் சித்திரம் தீட்டிக் கொண்டிருப்பான். வேறொருவன், ஏதோ சம்பவத்தை நினைத்துக்கொண்டு, தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருப்பான். மற்றொருவன், வகுப்பு அறையின், உள் கூரையில் சாவதானமாய் அமர்ந்து காதல் இரகசியம் பேசும் குருவிகளில் தனது கண்ணையும் கருத்தையும் மிதக்க விட்டிருப்பான். இந்தக் காட்சிகளை பேராசிரியர் ஜம்புலிங்கம் வகுப்புகளில் காணமுடியாது.

காசி தீர்த்தம்!

'கஸ்டம்ஸ்' ஆபிசில் ஒருநாள் பிரயாணி ஒருவர் சோதிக்கப்பட்டார்.

"இந்த பாட்டிலில் என்ன இருக்கிறது?"

"காசி தீர்த்தம்"

கஸ்டம்ஸ் அதிகாரி பாட்டிலைத் திறந்து முகர்ந்து பார்த்தார்.

"ஆ! இதில் ஒயின் அல்லவோ இருக்கிறது...?"

"ஆகா! தீர்த்தத்தை ஒயினாக மாற்றிய என்னப்பன் காசி விசுவநாதன் அருளே அருள்!"

—இதைக் கூறிவிட்டு அந்தப் பிரயாணி வடக்கு பக்கம் திரும்பிக் கொண்டு கன்னத்தில் அடித்துக் கொண்டார்.

அன்றைய தினம் அவர் சொல்லிக் கொண்டிருந்த விஷயம் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் என்பதைப் பற்றி. எந்தெந்த நாட்டில், அடிப்படை உரிமைகள், எவ்வெவ் வகையில் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளன என்பது ஒப்பு நோக்கி, உதாரணங்கள் பறிமாறிக் கொண்டிருந்தார். அப்போது அவர் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள்: ''ஜீவாதார உரிமையாம். ஜீவாதார உரிமை வாய்ப் பந்தல்; வர்ண ஜாலம். சோவியத் ரஷ்யா—அங்கேயும், அந்த நாட்டு அரசியல் சட்டத்திலும் அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயம் உள்ளது. எல்லா குடிமகனுக்கும் வாழ உரிமை உண்டு. வேலை கேட்க உரிமை உண்டு. உழைக்க உரிமை உண்டு. வேலை கொடுத்தே ஆகவேண்டும். இல்லையென்று புறக்கணிக்கமுடியாது. பிச்சை

யெடு, சோம்பேறியாக உலவு— என்று விட்டு விடாது. ஆனல் இங்கோ, இந்த க்ஷேம நல சர்க்கார் எல்லோருக்கும் வேலை கொடுக்க முயலுமாம். அது சர்க்காரின் அன்பு இதயத்தின் அபிலாஷையாக இருக்குமாம். அர்த்தமென்ன தெரியுமா?

"அங்கே அடிப்படை உரிமை — அதனைத் தட்டிக் கேட்கலாம்.

"இங்கே அபிலாஷை. அதாவது அவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆசையை நிறைவேற்றுவார்கள் என்று காத்திரு. எங்கே என் உரிமை? இதோ வலிவு மிக்க கரங்கள்—வைர உடல்! வயிற்றுக்கு உணவு தேவை, என் உழைப்பை காணிக்கை யாக்குகிறேன்— என்று எவனும் கோர உரிமை கிடையாது!" — பேராசிரியரின் கண்களில் கனல் தெரித்தது.

நான் கதவோரம் காலரியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். திரும்பிப் பார்த்தேன். எனக்கு பக்கத்தில் ஒரு வாலிபன், பதினெட்டு வயதிருக்கும்—பஞ்சடைந்த கண்கள்—பரட்டைத் தலை—பரிதாபம் நிறைந்த பார்வை—அழுக்குப் படிந்த துணி—இவைகளுடன், வகுப்பிற்குள்ளே நின்று கொண்டிருந்தான். பேராசிரியர் அமர்ந்திருந்த இடத்திலிருந்து பார்த்தால் அவன் நிற்பது தெரியாது. அவர் விரிவுரையிலிருந்து எனது கவனம் அறுந்தது. வாலிபனைப் பார்த்தேன். "என்ன வேண்டும்?" என்றேன்.

"ஒரணு" என்றான். அப்போது தான் எனக்குப்புரிந்தது. பிச்சையெடுக்கும் ஸ்தலங்கள், பஸ் ஸ்டேண்ட், ரயில் பெட்டி, ஆலய வாயில், ஹோட்டல் முன்புறம் ஆகியவையோடு, சட்டக் கல்லூரி வகுப்பறைவரை வந்துவிட்டது என்ற உண்மை. அவன் அந்த நேரத்தில் அங்கு நின்றது எனக்குப் பிடிக்கவில்லையென்றாலும், காவலையும் கடுஞ் சுவரையும் தாண்டி, அவன் அங்கு நுழைந்த தைரியத்தை உன் உள்ளம் எனக்குத் தெரியாமலேயே வாழ்த்திக் கொண்டிருந்தது. "ஒரணு இல்லை" என்றேன். அவன் போவதாயில்லை. பேராசிரியர் தொடர்ந்து சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். "முன்னல் போய் பெரியவரைக்கேள்" என்றேன். "பயமாயிருக்கிறது" என்றான். நான் கவனிக்காது இருந்தேன். அவன் அசைவதாகக் காணும். "அரயணுவாவது கொடுங்கள்" என்றான். என்னல் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனது நிலை எனது நெஞ்சில் முள் போல் தைத்தது. நிஜமாகவே என்னிடம் ஒரணு இல்லை; ஐந்து ரூபாய் நோட்டுத்தான் இருந்தது. எனது மன நிலையில் 'இந்தா, வைத்துக்கொள்' என்று நீட்டினேன். அவன் நான் கேலி செய்கிறேன் என்று நினைத்திருக்க வேண்டும். கொஞ்சம் தயங்கினன். "நிஜமாகத்தான்!" என்றேன். மருட்சி நிறைந்த கண்களோடு கரத்தை நீட்டினன். அந்த நோட்டை வாங்கும்போது அவன் கரம் நடுங்கியது. அவன் மறைந்தான். பேராசிரியர் ஐம்பு

லிங்கத்தின் சண்ட மாருதத்தில் நான் ஒன்றினேன்.

❊

ஒரு ஆண்டிற்குமேல் உருண்டோடியது. இந்த நிகழ்ச்சியே எனது நினைவுத் திரையிலிருந்து அழிந்து விட்டது. ஒருநாள் மாலை-ஹைகோர்ட்எதிரேயுள்ள பஸ் ஸ்டாண்டில் தியாகராய நகர்போகும் பஸ்ஸில் ஏறினேன். ஒரே கூட்டம். உட்காரும் இடமெல்லாம் நிறைந்து விட்டது. இடை வெளியில் இருக்கும் இடத்தை வீணாக்குவது கூடாது என்பதுபோல் நடுவிலே ஓடும் இரும்புக் கம்பியை பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தனர் பலர். அவர்களில் நானும் ஒருவன். ஒவ்வொரு நிலையையும் தாண்டி ஒருவாறாக பஸ் தியாகராய நகரை அடைந்தது. கீழே இறங்கினேன். நான் போக வேண்டிய நண்பரின் இல்லம் எதிரே இருந்தது. ஒரு சோடா குடித்து விட்டுப் போவோம் என எதிரேயுள்ள வெற்றிலை பாக்குக் கடை முன் நின்றேன். பாக்கெட்டில் என் கை சென்றது.சில்லரைகொடுப்பதற்காக. பாக்கெட் தான் இருந்தது. பர்சைக் காணோம். விஷயம் விளங்கியது. முகத்தில் அசடு வழிந்தது. வங்கக் கடலில் வீசியெறியப்பட்ட மோதிரம் திரும்பி வந்து கரத்திலா மின்னப்போகிறது? இன்றைய தினம்'பிக்பாக்கெட்காரனு'க்கு அதிர்ஷ்ட தினம். ஒரு நூறு ரூபாய் நோட்டு. சில்லரையாக ஐந்து, ஆறு ரூபாய்கள்— போதாதா, என்ன? அதைப் பெறுவதற்கு, என். ஜி. ஓ. ஊழியர் மாதமெல்லாம் செக்கு மாடு போல் உழைக்கிறார். ஒரு பத்து ரூபாய்கூட சேர்த்து கொடுக்கக் கூடாதா என்றால் மந்திரிமார்கள் தர்மோபதேசம் செய்கின்றனர். வெட்கம் வேறு என்னை பிய்த்துத் தின்றது. நண்பர் வீட்டிற்குச்செல்லும் யோசனையை விட்டு விட்டேன். திரும்பினால் போதும் என்ற சஞ்சலம். பஸ்ஸிலே திரும்ப நாலணா வேண்டும். அதுதான் என்னிடம் இல்லையே! ஒரு யோசனை பிறந்தது. நாலணா இல்லாவிட்டால் என்ன? பஸ்ஸில் போகத்தான் நாலணா வேண்டும். டாக்ஸியில் போக அதுவும் தேவையில்லையல்லவா? எதிரே இருந்த டாக்ஸியில் ஏறினேன்.

❊

ஒருவாறு டாக்ஸிகாரனை அனுப்பிவிட்டு படுக்கையில் படுத்தேன். உடலும் மனமும் அலுப்பாக இருந்தது. இருக்காதா என்ன? அதற்கு முன்பு இப்படி பணத்தை பறிகொடுக்கும்

○○○

பேச்சு சுதந்தரம் ஒரு பலமான பாதுகாப்பாகும். ஏனெனில் முட்டாளுக்குக்கூட பேச்சு சுதந்தரம் கொடுத்து, பேச வைத்து, அவனை முட்டாளென்பதை உலகுக்கு விளம்பரப்படுத்தி விடலாமே!

—உட்ரோ வில்சன்.

○○○

சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்ட தில்லை. நண்பர்கள், இத்தகைய ஆபத்துக்களின் அகப்பட்டு அவர்களின் அனுபவங்களைச் சொல்லும் போதெல்லாம் சிரித்திருக்கிறேன். அது வேறு எனக்குச் சிரமமாக இருந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டேன். ஆனாலும் தூக்கம் வரவில்லை. அறையின் கதவு பாதி திறந்து கிடந்தது. யாரோ உள்ளே நுழைந்துவிட்டு அவசர அவசரமாக வெளியே செல்லும் காலடிச் சத்தம் கேட்டது. ''யாரது?'' என்றேன். திடுக்கிட்டு தேள் கொட்டியவன் போல் அவன் விழித்தான். அவனைவிட நான் திடுக்கிட்டுப் போனேன். சட்டக் கல்லூரியில் அன்று என்னிடம் ஐந்து ரூபாய் பெற்ற அதே வாலிபன். ஆனால் வித்தியாசமான முகத்தோற்றம். கண்களிலே ஒரு வெறுப்பு: சமுதாயமே பகைவன் போன்ற பார்வை! ''நீ எங்கே, இங்கே?'' என்றேன். ''தங்களுடைய பர்ஸ்'' என்று சொல்லிவிட்டுத் திணறினான். அவன் கண்கள் எனது காலடிக்குச் சென்றது. நான் இழந்துவிட்ட பர்ஸ் படுக்கையிலேயே கிடந்தது. நான் கவனித்தேன். முதல் அடுக்கில் எனது போட்டோ, என் அறையின் முகவரி, அப்படியே இருந்தது. நான் யூகித்தேன். வழியிலே எங்கேயாவது கிடந்திருக்கும், புகைப் படத்தையும், முகவரியையும் பார்த்து விட்டு இந்த நல்லவன் என்னிடம் சேர்க்க வந்திருக்க வேண்டும்! அப்படியானால், என் கண்ணில் படாமல் போய்விடுவதற்கு ஏன் அவ்வளவு அவசரம் அவனுக்கு? இருந்தாலும் கேட்டு வைத்தேன்—''வழியில் எங்காவது கிடந்ததா? அதனைப் பார்த்து என்னிடம் சேர்க்க வேண்டுமென்று......'' என்று விழுங்கினேன். இந்த வார்த்தைகளை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் கண்களில் நீர் துளிர்த்தது. அவனால் பேச முடியவில்லை. எப்படியோ சமாளித்துக் கொண்டு பேச முயன்றான். அவன் கூறியவை அவன் என்னிடம் ஐந்து ரூபாய் பெற்றுக் கொண்டதிலிருந்து நடைபெற்ற அவனது வரலாற்றுத் துணுக்குகள்! எனது கேள்விக்குப் பதிலிறுக்கவில்லை. ஆனால் அவன் கூறியவற்றில் எனது கேள்விக்கு மட்டுமல்ல; சமுதாயத்தின் கோர நோயுக்கே விடையிருந்தது.

''மன்னிக்க வேண்டும்! நீங்கள் மன்னித்தால்தான் எனக்கு மன நிம்மதி. உங்கள் ஐந்து ரூபாயைப் பார்த்ததும். எப்படியாவது ஊருக்குப் போய்விட வேண்டும்; அதற்கு ஒரு டிக்கட்டிற்கு ஆகுமே; அங்கே கௌரவமாய் கழனியில் பிழைத்துக் கொள்வோம்-என்றுதான் வெளியே வந்தேன். மூன்று நாள் முழுப் பட்டினி. இரண்டு வாழைப் பழமாவது சாப்பிடுவோம் என்று கடைக்காரனிடம் நோட்டை நீட்டினேன். என்னுடைய துரதிர்ஷ்டம் அவனிடம் சில்லரையில்லை. பக்கத்துக் கடையில் வாங்கச் சொன்


Che

ஞன் கடைக்காரச்சிறுவனிடம். என்னுடைய பரிதாபத் தோற்றம்-ஐந்து ரூபாய் நோட்டு-இந்தக் காட்சி எதிரேயுள்ள போலீஸ்காரனின் கண்களில் தென்பட்டு விட்டது. "ஏது ஐந்து ரூபாய்?" என்றுன். நான் கூறிய சமாதானம் மேலும் அவனுடைய சந்தேகத்தை அதிகரித்தது. விளைவு பண்ருட்டியில் இருக்க வேண்டிய நான், என் வாழ்நாளில் என்றும் சந்திப்போம் என்று கனவுகூட கண்டிராத லாக்கப், கோர்ட், கைதிக் கூண்டு, சிறைச்சாலை அறை— ஆகியவைகளை மளமள வென்று இரண்டு நாட்களில் சந்தித்தேன். நான் வெளியே வரும் போது வேறு மனிதனுக வந்தேன். உள்ளே சில நண்பர்கள்; இங்கே கிடைக்காத அனுதாபத்தை சிறையிலே பெற்றேன். வெளியே வந்தபோது அவர்களில் ஒருவனுனேன். இப்போது நான் எவரையும் பிச்சை கேட்க மாட்டேன். நானே வீசி எறிகிறேன். அடிக்கடி அகப்பட்டுக் கொள்வோம். சிறைவாசம், விடுதலை, வேட்டை, தண்டனை—இவையெல்லாம் எங்களுக்குப் பழக்கமான நிகழ்ச்சிகளாய் விட்டன. நீங்கள் பணம் கொடுத்த போது டிக்கட் வாங்கித்தான் ரயிலில் போக வேண்டுமென்ற மன நிலை. இப்போது ரயிலில் போனுல் டிக்கட் வாங்க மாட்டேன்; வாங்க வேண்டுமானுலும் பணம் கிடைக்கும்; பெற்று விடுவேன். ஆனுல் ஊருக்குப் போக வேண்டுமென்ற ஆசை எழவேயில்லை. அதனை கருத்தில் கொண்டேன். வாழ வழி கேட்டேன். யாரும் வகை செய்யவில்லை. நானே வழி அமைத்துக் கொண்டேன். இழிவானதுதான். ஆனுல் நாணுக விரும்பிப் பெற்றதல்லவே! என் மீது நிர்ப்பந்திக்கப்பட்டது. எனது துர்பாக்கியம் தங்கள் பர்ஸ்தானு அகப்பட வேண்டும்! தங்கள் புகைப் படத்தைக் கண்டவுடன் அதிர்ச்சி — பக்கத்திலே முக வரியைப் பார்த்தவுடன் கொஞ்சம் மகிழ்ச்சி. நூறு ரூபாய் நோட்டு பெரும் பாருங்கல் போல் இருந்தது. எப்படியும் சேர்த்துவிட்டால் சுமை இறங்கும்போல் இருந்தது. ஓடோடி வந்தேன். எவனுவது போலீஸ்காரன் பார்த்தால், இன்றைய தினம் ஒரு கேசும் அகப்படவில்லையே, இவனை அனுப்புவோம்-என்று இரை கிடைத்ததாக மகிழ்வான். நான் வருகிறேன், மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கொண்டே விரைவாக வெளியே போனுன்.

பெரு வெள்ளம் அறை முழுதும் நிரம்பி விட்டதுபோல உணர்ச்சி எனக்குப் பட்டது. ஒரு நிமிடம் கூட முடிந்திருக்காது; அவனை அழைக்கலாம் என்று வெளியே வந்து பார்த்தேன். அந்த மாய்மாலக்காரன் என் கண்களிலிருந்து எங்கேயோ மறைந்து விட்டான். போலீஸ்காரனின் கண்களுக்கே திரைபோடும் திறமை பெற்றிருந்த அவன், எனது பார்வையிலிருந்து மறைந்தது எனக்கு வியப்பளிக்கவில்லை! ●

மருந்தே இல்லாத வியாதி!

ஆ....ஆ....ஆச்—இந்தக் கண நேரத்தில் கணக்கெடுத்தால் இது போன்ற தும்மலால் பிரிட்டன் முழுவதும் சுமார் 1,000,000 பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தும்மலை அடையாளமாகக் கொண்டிருக்கிற ஜலதோஷம் என்கிற இந்தப் பொல்லாத நோய் காரணமாக பிரிட்டனுக்கு 5,000,000 வேலை நாட்கள் பாழாகின்றன. 50,000,000 பவுன்கள் சம்பளத் தொகை வீணுகிறது. இதன் மூலம் நாட்டின் உற்பத்தியும் கெடுகின்றது!

பனிக் காலத்தில்தான் எல்லோருக்கும் ஜலதோஷம் வருகிறது—என்பது அவ்வளவாக உண்மையல்ல. பனிக்கட்டியிலேயே வாழும் எஸ்கிமோக்களுக்கு ஜலதோஷம் என்ருல் என்னவென்றே தெரியாது. வெள்ளை மனிதன் அங்கு சென்று இந்த வியாதியைப் பரப்பிய பிறகுதான் அவர்களையும் இது தொத்திக் கொண்டது.

பெரும்பாலும் இந்த வியாதி இன்னெருவருக்கு ஜலதோஷக்காரராலேயே மற்றவரைத் தொத்துகிறது.

அப்படியானல் ஜலதோஷம் வந்தவர்களோடு நெருங்கி இருப்பதினுலேயே இந்த வியாதி வந்து விடுமா?—என்று கேட்கிறீர்களா? ஆமாம்; 50 சதவீதம் அப்படித்தான். அந்தச் சமயத்தில் உங்கள் உடலில் 'தடுப்புச் சக்தி' குறைவாக இருந்தால் ஜலதோஷக் கிருமிகள் நிச்சயம் உங்களை ஆட்கொண்டு விடும். பொதுவாக கிருமிகளைத் தடுக்கும் சக்தி சமநிலை சாப்பாட்டின்மை காரணத்தாலும், குறைந்த அளவு ஓய்வு எடுத்துக் கொள்ளும் காரணத்தாலும் குறைகிறது.

ஜலதோஷம் எப்போது தெரியுமா, வேகமாகப் பரவும் தொத்து நோயாக இருக்கிறது? வியாதி பிடிக்குமுன் தன்னை என்னவோ செய்வதாக வியாதியஸ்தன் உணருவான்; அடிக்கடி, காரணமின்றி தும்மல் வாட்ட ஆரம்பிக்கும்! இந்த நேரம்தான் கிருமிகள் பரவுவதற்கு அதிக வன்மையைப்

பெற்றிருக்கின்றன.

ஒரு சராசரி மனிதருக்கு ஆண்டுக்கு மூன்று தடவை ஜலதோஷம் வருகிறது. ஒரு சராசரி தொழிலாளி ஆண்டுக்கு இரண்டரை வேலை நாட்களை இந்த வியாதி காரணமாக இழக்கிருன். பிரிட்டனில் பிப்ரவரி போன்ற மாதங்களில் தான் ஒரே சமயத்தில் 1,000,000-க்கும் மேற்பட்டவர்கள் இந்த வியாதி காரணமாக வாடுகிருர்கள்.

அவ்வாருனல் இந்த வியாதிக்கு மருந்துதான் என்ன? "ஜலதோஷக்காரனுக்கு சாப்பாடும், ஜுரக்காரனுக்குப் பட்டினியும்" —என்ற பழமொழிப்படி அதிகமாகச் சாப்பிட்டு விடாதீர்கள். ஜீரணமாகிற அளவுக்கு சாப்பிட்டாலே போதுமானது.

பின் மருந்து...?

இனிமேல் கண்டுபிடித்தால் தான்! அதுவரை எல்லா வியாதிகளுக்கும் உள்ளதைப் போல நன்ருக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்! ●

சினிமா நடிகர்; பாடகர்; போன்றவர்களின் தொழிலுக்கு ஜலதோஷம் மகத்தான எதிரியாகும். இதனுல் ஏராளமான பொருள் விரயமும், காலதாமதமும் ஏற்படுகிறது. எனவே எப்படியாவது அவர்கள் சீக்கிரம் அந்த வியாதியை விரட்டியடிக்க படாதபாடு படுகிருர்கள்.

● டினு ஷோர் என்னும் பிரபல நட்சத்திரம் தொழில் புரியச் செல்லு முன்பு சிரசாசனம் புரிகிருர், ஜலதோஷத்தைத் தடுப்பதற்காக!

● கிரிகரி பெக் என்னும் பிரசித்தி பெற்ற நட்சத்திரம் ஜலதோஷம் வந்தால் சோடாவின் பை—கார்பனேட்டைக் குளிர் நீரில் கலக்கி நாளொன்றுக்கு மூன்று தடவை சாப்பிடுகிருர். படுத்துக் கொண்டு தலையைத் தூக்கியவாறே மூச்சு வாங்கி சுத்தமான எலுமிச்சை ரசத்தை வாயில் ஊற்றிக் கொண்டு நன்ருகக் கொப்பளிக்கிருர். அப்படிக் கொப்பளிக்கும் போது 'ரோ' என்று சப்தம் போடுவார். அப்போதுதான் எலுமிச்சை ரசம் தொண்டைக் குழியில் நன்ருகப் படுமாம்.

● எட்வர்ட் ஜி. ராபின்சன் என்னும் நடிகரோ அதிக உயரத்தில் பறக்கும்போது மூக்கு அடைப்பினுல் தொந்தரவு ஏற்படுவதில்லை—எனக் கண்டு, அதன்படியே ஜலதோஷம் வந்தால் ஆகாய விமானச் சவாரி புரியத் தொடங்கிவிடுகிருர்.

● வான் ஹெப்லின் என்பவர் 'டெக்னி கலர்' படமெடுப்பதற்காக உபயோகிக்கப்படும் சக்தி மிக்க மின் விளக்குகளின் முன்னுல் உட்கார்ந்து கொண்டு ஜலதோஷத்தின் கொடுமையைக் குறைத்துக் கொள்கிருர்.

டாக்டர் முருகேசனைப் பார்த்தது முதல் அவரை தன் மருமகனை ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டார் சீமான் சுப்பிரமணிய செட்டியார்! அதற்காகவே அவரோடு நெருங்கிப் பழகினார். தன் செல்வாக்கையும், தேங்கியுள்ள செல்வத்தையும், தன் ஒரே மகள் மல்லிகா என்பதையும் டாக்டருக்கு மறைமுகமாக, ஆனால் அடிக்கடி நினைவு படுத்தி வந்தார். தன் எண்ணத்தை வெளியிட சந்தர்ப்பம் எதிர் பார்த்திருந்த செட்டியார் மெள்ள வேறொரு ஆள் மூலம் வெளியிட்டார்!

டாக்டர் தயங்குகிறார் என்று கேள்வியுற்றதும் தந்திரமாக பங்களாவிற்கு அழைத்துச் சென்று இரும்புப் பெட்டியைத் திறந்து காட்டினார்! குவிந்து கிடக்கும் பொருளைக் காட்டி 'தன் மருமகனுக்கே சொந்தம்' என்று சொல்லாமல் சொன்னார்!

முதலில் மறுத்த முருகேசனுக்கு இரும்புப் பெட்டி இன்பக் காட்சிகள் பல காட்டி தளரச் செய்து விட்டது! இரும்புப் பெட்டிக்கும் தனக்கும் உள்ள இடைவெளியை தாலிக் கயிறு எனும் பாலம் கொண்டு இணைத்து விட்டால் இன்பபுரி எளிதில் கிட்டிவிடும் என்பதை உணர்ந்தான். தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டான்! இரும்புப் பெட்டிக்கும் தனக்கும் இடையில் உள்ள திருமண வாயிலுள் மல்லிகாவின் கரம் பற்றி நுழைய இசைந்து விட்டான். எனினும் அவன் நெஞ்சில் ஒரு பெரும்

மகிழ்வுடன் வாழ...

ஊழியன்: நீங்கள் சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டும், சார்! அப்போதுதான் நான் கல்யாணம் செய்து கொள்ள முடியும்!

முதலாளி: அப்படியா? சரி; நீ சந்தோஷமாக வாழ வேண்டுமா? வேண்டாமா?

ஊழியன்: வேண்டும்!

முதலாளி: அப்படியானல் இந்தச் சம்பளத்துக்கே வேலை பார்த்துவா!

காலை மண விழாவிற்கு ஏராளமானவர்கள் வந்திருந்தனர். குவிந்த வாழ்த்துக்களும் மண விழா பரிசுகளும் ஏராளம்! பாராட்டுரை பலர் வழங்கினர். கைகுலுக்கி வாழ்த்தியோர், மாலை சூடி மரியாதை செலுத்தியோர் ஏராளம்! எங்கும் சிரிக்கும் குரல்கள் எதிரொலித்தன...எங்கும் மலர்ந்த முகங்கள் தோன்றின! ஆயினும் மாப்பிள்ளை... வருந்தி சிற்சில சமயங்களில் சிரிப்பை வரவழைத்தாரே யொழிய, அவர் உள்ளத்தில் தோன்றிய புயல் ஓயவில்லை! மனதைக் காட்டும் கண்ணடி முகம்...அது காட்டியது அவர் உள்ளத்தில் உள்ள இருளை! எனினும் அதை எவரும் கவனித்தார்களில்லை!

போராட்டப் புயல் எழும்பியது. புயலின் காரணம் எவரும் அறியார்! எனவே திருமண ஏற்பாடுகள் துரிதமாய் நடந்தன!

ஏழிசை மன்னரின் இன்னிசை விழாவும் திருவிதாங்கூர் திலகங்களின் நடன விருந்தும் நடைபெற ஏற்பாடாகியது. அழைப்பிதழ்கள் அச்சகத்தைவிட்டு வெளி வந்து சீமான்களின் கரங்களில் சேர்ந்தன. விழாக் கோலத்தை பணபலம் கொண்டு உண்டு பண்ணினுர் செட்டியார்!

திருமண நாள் நெருங்கியது! செட்டியாரின் இல்லமே மகிழ்ச்சியின் தொட்டிலாகத் தோன்றியது. டாக்டரைப் பல நண்பர்கள் பாராட்டினர்!......கிண்டல் பேசி நகைத்தனர்! சிலர் பொருமைகூட கொண்டனர்! ஆயினும் டாக்டரின் உள்ளத்திலே மகிழ்ச்சியில்லை! மாருக அவரது மனம் குற்றவாளியின் நெஞ்சம்போல் இருள் சூழ்ந்திருந்தது!

மாலையிலே இசை விழாவும் நடன விருந்தும் நடைபெற்றன! 'ஆசை முகம் மறந்து போச்சே' என்று இசைவாணர் பாடும்போதும், 'மீனவர் நடனம்' மலையாளச் சகோதரிகள் ஆடும் போதும் டாக்டரின் கன்னங்களில் கண்ணீர் புரண்டது! அதைப் பலர் பார்த்தனர்......ஆனந்தக் கண்ணீர் என்று எண்ணினர்!

டாக்டர் தன் திருமணத்தையொட்டி ஒருவாரம் 'லீவ்' எடுத்திருந்தார். எனினும் அவரது உள்ளத்தே உலாவிய போராட்டம் புது மனைவியோடு

கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்க விடவில்லை. உடனே தன் லீவை ரத்து செய்து கொண்டு வேலையில் சேர்ந்தார்! தன் நெஞ்சில் உள்ள நெருப்பின் சூட்டைத் தாங்க முடியாது பொழுதை வேறு வழியில் கழிக்க ஓடினார்! அங்கே...... சர்க்கார் மருத்துவமனையில் இவரின் வருகைக்கு இரு பிணங்கள் காத்திருந்தன. பரிசோதனைக்காக போலீசாரால் கொண்டு வரப்பட்டிருந்தன அவைகள்! பிணங்களை அறுப்பதுதான் டாக்டர்களின் சாதாரண வேலையாயிற்றே! உடனே டாக்டர் முருகேசன் பிணங்கள் போடப்பட்டுக் கிடந்த அறைக்குப் புறப்பட்டார். அறையுள் நுழைந்தார். துணி போட்டு மூடப்பட்டிருந்தன! நெருங்கினார்...ஒரு பிணத்தின் முகத்தைத் திறந்தார். புலியை நேரில் நடுக் காட்டில் சந்தித்தாற்போல் அலறினார் டாக்டர்!

"துரோகி! ஏனடா அப்படிப் பார்க்கின்ருய்? நான் இறந்ததன் காரணத்தைக் கண்டு பிடிக்கவா வந்தாய்? எப்படி இறந்தேன்" என்று என் கழுத்தில் ஏற்பட்டுள்ள காயங்கள் சொல்லும்! அதை உலகிற்கு நீ சொல்லிவிடுவாய்! ஆனால் ஏன் இறந்தேன் என்பதை உன்னால் சொல்ல முடியுமா?..சொல்ல முடியாது.....சொல்லவும் மாட்டாய்! ஆனால் உனக்குத் தெரியும்!... கயவனே! ஆசை வார்த்தைகளைக் கொட்டி பாசத்தை வளர்த்துவிட்டு இறுதியில் மோசம் செய்தாயே...நீயும் ஒரு மனிதனா? ஏழையின் மகளாகத் தான் பிறந்தேன்......ஆனால் பெண் குலத்தின் நேர்மைப் பாதையிலிருந்து நழுவவில்லை! பாரடா என்னை...பார் என்னை... சத்தியத்திலிருந்து தவறுவதை விட சாவே தித்திப்பானது என்று கருதிய என்னைப் பார்! 'உனக்காக உயிர் விடுவேன்' என்று நீ சொன்னாய்; ஆனால் உனக்காக உயிர்விட்ட என்னைப் பார்!......'ஏழை நான்' என்றேன்!...'முள்ளில் ரோஜா' என்ருய்! இந்த ரோஜாவைக் கசக்கி வீசிவிட்டு மாளிகை மலர் நாடி ஓடிவிட்டாய்! நீ வீசிய மலர் நான் மரணத்தின் வாசலில் வீழ்ந்துவிட்டேன்! அன்பைக் கொன்றவனே! 'காதல் சாகா வரம் பெற்ற

சஞ்சீவி' என்றாய்......எனக்கு அது நஞ்சாகிவிட்டது!...'ஏற்ற தாழ்வு அதற்கில்லையடி' என்றாய்...என்னைத் தூக்குக் கயிறு தேட துரத்திவிட்டாய்! 'கலங்காதே! கைவிடமாட்டேன்!' என்றாய்...இதோ, இன்று என் பிணத்தை அறுத்து பரிசோதனை செய்ய வந்து விட்டாய்!... அறு....அறு......அறுத்துப்பார்! சில்லிட்டுப் போயுள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் 'அத்தான் ... அத்தான்' என்று சொல்லும்! இறக்கமற்றவனே! ...நான் செத்துவிட்டேன்...... எனினும் உன்மீதுவைத்த ஆசை இன்னும் சாகவில்லை! வறுமையில் கிடந்த என்னை, 'வளமை புரி வா' என்று சொல்லி அழைத்துச் சென்று மரணக்குழியில் தள்ளிவிட்டாயே! தின்பண்டம் தருவதாய் சொல்லி அழைத்துப்போய் குழந்தை கழுத்தில் உள்ள நகையைப் பறிக்கும் கள்வன் உன்னினும் ஆயிரம் மடங்கு மேல்! ஒரு நகை போனால் வேறு நகை வாங்கிக் கொள்ள முடியும்! ஆனால் பெண்களின் இணையற்ற ஒரே ஆபரணம், அதையே நீ கொள்ளை கொண்டு விட்டாய்! பின் ஏது எனக்கு வாழ்வு?... வாழ்ந்திருக்க முடியும் உன்னைப் போல் குரங்கு புத்தி எனக்கிருந்திருந்தால்! இல்லை......... சீமான் உன்னை விலைகொடுத்து வாங்கி விட்டார்...ஆனால் என் கற்பு விலையில்லா மாணிக்கம்! நற்குணவானே, அன்றி நயவஞ்சகனே...ஒருவனிடம் ஒப்படைத்து விட்டேன்! அதை வேறொருவனுக்கு காணிக்கையாக்க விரும்பாததால் இன்று பிணமாகிவிட்டேன்! காதலுக்கும் சாதலுக்கும் இடையிலே இருந்த அன்புத் திரையை கிழித்து விட்டாய்! என் மடியிலே நீ படுத்திருந்தபோது இந்த ஏழைப் பெண்ணின் இதயத்தே எழும்பிய ஆசைக் கோயில்களை 'துரோகம்' எனும் சம்மட்டி கொண்டு அடித்து தூள் தூளாக்கி விட்டாய்! நம் காதலுக்கு சாட்சியாக இருந்த தென்றலும் வெண்ணிலாவும் என்னைச் சாகச் சொல்லி விட்டன! பெண்களுக்கு இயற்கையாக இருக்கும் 'பலவீனம்' என்னை இக் கதிக்கு ஆளாக்கி விட்டது! ஆண்களை விட்டு நீங்காத வஞ்சக குணம் உன்னை சீமானின் மருமகனாக்கிவிட்டது! இந்த ஏழைப் பெண்ணின் மரணத்தில் உனக்கு சுகம் கிடைக்குமானால் அதை அனுபவித்துக்கொள்!......என் கல்லறைமீது உன் 'சொர்க்கம்' அமையுமானால் நான் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன்!"

என்று அந்தப் பிணம் வாய் திறந்து பேசவில்லை; எனினும் அதன் பார்வை இவைகளைச் சொல்லியது! அந்தப் பிணம்தான் டாக்டரின் உள்ளத்தே பெரும் புயலை எழுப்பியிருந்த 'பார்வதி'! தேம்பித் தேம்பி அழுதார் டாக்டர் முருகேசன்! கண்ணீர் கவலையின் பாரத்தைக் குறைக்கும்! ஆனால் கடந்த காலத்தை திருத்தியமைக்காது!

டாக்டர் திரும்பினார் மறு பக்கம்......மற்றொரு பிணம்... முகத்தை மறைத்திருந்த



துணியை நீக்கினார்...ஓர் இளைஞன் .... இருபத்தைந்தைத் தாண்டியிருக்க முடியாதகாளை. டாக்டர் பார்த்தார்...எங்கோ... எப்போதோ......பார்த்த நினைவு வந்தது. அவர் சிந்தனை எங்கோ இழுத்துச் சென்றது. மின்னல் போல் மறதியைக் கிழித்துக் கொண்டு நினைவு வந்தது அவருக்கு.

"இந்த இளைஞன்தான்—அன்றொரு நாள் வந்து காலைப் பிடித்துக் கொண்டு கதறினான்...... கொடிய மருந்து கேட்டான்... டாக்டர் எவ்வளவோ மறுத்தும், 'கருவைக் கலைக்காவிடில் இரு உயிர்கள் போய்விடு' மென்றான்...கண்ணீர் விட்டான்...... கடைசியில் அம்மருந்தை வாங்கிச் சென்றான். இவனேதான்... இவன் ஏன் செத்தான்? ஒரு வேளை அம்மருந்து வேலை செய்யத் தவறி விட்டதோ........." என்று எண்ணினார்! ஆடைகளை நீக்கினார், அறுத்து பரிசோதித்திட. அப்போது சீட்டு ஒன்று அவன் மடியிலிருக்கக் கண்டார்...எடுத்தார் ... பிரித்தார்...!

"நானாக தற்கொலை செய்து கொள்கிறேன்! வேதனையால் விரட்டப்பட்ட எனக்கு நான் புசிக்கும் நஞ்சு, தேன் போல் தோன்றுகிறது. அந்த அளவிற்கு நான் வஞ்சிக்கப் பட்டு விட்டேன்! இளமையிலேயே மரணத்தை விரும்பி அழைக்கின்றேன் ....., காரணம் வேதனை தாங்கிய இருதயத்தோடு மேதினிமீது உலவுவதைவிட மண் குழியிலே நிம்மதியாய் உறங்க முடியும் என்ற நம்பிக்கைதான்! குஷ்டம் பிடித்தவன்கூட வாழ விரும்புகிறான்...எனக்கு அந்தப் பற்றே அற்றுவிட்டது. ஏன்? நான் சந்தித்த தோல்வி! இத்தகைய தோல்வியை என்போன்ற இளைஞர்கள் எத்தனையோ பேர் சந்தித்திருக்கின்றனர்; அவர்களெல்லாம் என் முடிவிற்கு

வந்தனரில்லை. ஆயினும் எனக்கு வேறு வழியில்லை! எனவேதான் இம் முடிவு கொண்டேன்!

"காதற்தோல்வி—ஆம். இது தான் நான் சந்தித்த தோல்வி. நான் ஏழைதான்......எனினும் என் கையில் ஒரு மாடப்புரு கிடைத்தது! கொஞ்சினேன்... எனக்கு இன்பத்தை அள்ளி அள்ளித் தந்தது. ஆசை முழுவதையும் அடிமை கொண்ட அப்புரு இன்று வேறொருவன் கரத்தில் போய்ச் சிக்கிவிட்டது. என் செய்வேன்?

"எனக்கும் அவளுக்கும் இடையிலிருந்த தூரம் சாதாரணமானதன்று! ஏழை—பணக்காரி! இந்த இடைவெளியினைத் தான் 'காதல்' எனும் பாலம் கொண்டு இணைத்தோம். 'காலம்' அதைத் தூள் தூளாக்கி விட்டது!

"எங்கள் காதல் இளமையிலிருந்து வளர்ந்தது. அதன் அத்தாட்சியாக அவள் கருவுற்றாள்! அதைக் கலைக்க எந்த டாக்டரிடம் மருந்து வாங்கினேனோ அதே டாக்டரை அவள்......"

டாக்டரால் மேற்கொண்டு படிக்க முடியவில்லை...எப்படி முடியும்? அவர் குற்றத்தின் எதிரொலியல்லவா அது!

•

மன்னிப்பு!

உட்டா பல்கலைக் கழகத்துச் சட்டப் பேராசிரியர் ஒருவர் வேடிக்கையுடன் பிறருக்கு வேதனையையும் குழைத்துக் கொடுப்பதில் வல்லவர். ஒருநாள் கர்ப்பவதியைப் பற்றிய வழக்கு ஒன்றினைச் சொல்லுமாறு ஒரு மாணவியைக் கேட்டார்.

அந்த மாணவியோ 'கர்ப்பம்' என்ற வார்த்தையைச் சொல்ல வெட்கப்பட்டு, "உடல் நலக்குறைவால் வருந்திய பெண்" என்றே கூறிவந்தார்.

கோபமடைந்த பேராசிரியர் உடனே அந்தப் பெண்ணை நோக்கி "அன்புள்ள மாணவியே! உன்னுடைய தாய் கர்ப்பவதியாய் இருந்தார்; உன்னுடைய பாட்டி காப்பவதியாய் இருந்தார்; நாளை ஆண்டவனின் அருளாலும், ஒரு வாலிபனின் உதவியாலும் நீகூட கர்ப்பவதியாகலாம்," என்று சப்தமிட்டார்.

மறுநாள் அந்த மாணவியின் தாய் பேராசிரியர் இதற்கு வகுப்பறையில் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று வற்புறுத்தினர்.

மறுநாள் பேராசிரியர் இப்படி மன்னிப்பு கேட்டுக் கொண்டார்: "நேற்று கூறியவைகளுக்கு நான் மிகவும் வருந்துகிறேன். சம்பந்தப்பட்ட மாணவி இனி எப்போதுமே கர்ப்பவதியாயிருக்க மாட்டார் என்றும் நம்புகிறேன்!"

—ஆர். டி.



தேள்கள் - பலவிதம்!

நம் வீடுகளில் நடமாடும் ஜந்துக்களுக்குள் தேள் விஷத் தன்மையுள்ளது. இது சிலந்தியின் இனத்தைச் சேர்ந்தது.

தேள்களைப் பாலைவனக் குழந்தைகள் என்று கூறலாம். தண்ணீர் இல்லாமலேயே பல மாதங்கள், ஏன் பல வருஷங்கள்கூடத் தேள்கள் காலந்தள்ளும். அவை தங்களுக்கு வேண்டிய தண்ணீரைத் தாங்கள் உணவாகக்கொள்ளும் பூச்சிகள், பூரான்கள், சிலந்திகள், கரப்பான்கள் இவற்றினிடமிருந்து பெறுகின்றன.

தேள்கள் எல்லாம் மாமிச பட்சிணிகள். மெதுவாக ஆற அமரத்தான் ஆகாரத்தை உண்ணும். கரப்பான் பூச்சியினுடைய சத்தை உறிஞ்சக் குறைந்தபட்சம் ஒரு மணியாவது ஆகும். தேள்கள் தங்கள் இரைகளின் திரவமான ருசியுள்ள ரசத்தைத்தான் விரும்புகின்றன; திடபாகங்களை விரும்புவதில்லை. அப்படி சத்து மட்டும் உறியப்பட்ட பூச்சிகளின் வெறும் கூடுகளை நாம் பல இடங்களில் அடிக்கடி காணலாம்.

சிறிய பூச்சிகள், புழுக்களாக இருந்தால் அவற்றைக் கொட்டி கொலை செய்து உண்ணுவதில்லை. இடுக்கிகளால் பிடித்து, கிழிக்கும் உறுப்புக்களினால் கிழித்து சாரத்தை மட்டும் உண்ணும். இரை பெரியதாக இருந்தாலும் வலிமையாக இருந்தாலும் திமிறினாலுந்தான் கொட்டும். அனாவசியமாகக் கொட்டுவதில்லை. ஆகாரம் அகப்படாவிட்டால் தேள்கள் ஒன்றை ஒன்று தின்றுவிடும்.

அப்படிப் பட்ட சம்பவம் ஒன்றை உதாரணத்திற்குத் தருகிறோம்.

ஒரு சமயம் ஒரு விஞ்ஞானி ஒரு கூட்டில் 200 தேள்களை வளர்த்து வந்தார். அவர் அவசர காரியமாக வெளியூர் சென்று சில நாட்களுக்குப் பின் ஊர் திரும்பியவுடன், கூட்டில் ஒரே ஒரு கொழுத்த பருத்த வலுத்த தேள் மாத்திரந்தான் இருந்ததாம். அதைச் சுற்றி மற்றத் தேள்களின் ஓடு

‘கொட்டினால் தேள்; கொட்டா விட்டால் பிள்ளைப் பூச்சி’ என்ற பழமொழி அறிவிக்கும் தேளின் விஷ வேலையை! அந்தத் தேளின் வாழ்க்கையை விளக்கும் இந்தக் கட்டுரை, சிங்கை ‘தமிழ் முர’சில் தோழர் எஸ். மகாலிங்கம் எழுதியதின் சுருக்கம்.

களும், மிச்சம் மிகுதியும் இருந்தனவாம்.

தேள்கள் சாதாரணமாகச் சேர்ந்து வாழ்வதில்லை; ஆணும் பெண்ணும் சேரும் பொழுதும், அல்லது ஒரு தேள் மற்றொரு தேளை உண்ணும் பொழுதுந்தான் இரண்டு தேள்களைச் சேர்ந்தாற்போல் பார்க்கலாம்.

தேளின் கொடுக்கு வளைந்து நுனி மிகக் கூர்மையாக இருக்கிறது. அதனுள் விஷத்தைச் சுரக்கும் இரண்டு விஷச் சுரப்பிகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து விஷம் சுரக்கிறது. தேள் கொட்டும் பொழுது கொடுக்கின் நுனி மேலே சென்று முன் பக்கம் இழுக்கப்படும். அப்பொழுது கொடுக்கில் உள்ள சதைகள் சுருங்கி அமுக்குவதினால் விஷம் விஷப் பையிலிருந்து வெளிப்படுகிறது. அந்த விஷம் இரண்டு மிகச் சிறிய துவாரங்களின் வழியாக முள் குத்திய காயத்தினுள் சுரீரென்று 'இஞ்செக்ஷன்' செய்யப்படுகிறது. அப்பொழுது நெருப்புப் பட்டாற்போல் ஓர் உணர்ச்சி ஏற்படும். உடனே உபத்திரவங்கள் எல்லாம் தொடங்கிவிடும். காரணம், விஷம் ரத்தத்துடன் கலப்பதே.

கொட்டின இடத்திற்கு மேலே மெல்லிய கயிற்றினால் நன்ருக இறுகக் கட்டிவிட்டு அந்த இடத்தில் அம்மோனியா கரைசலை வைத்துத் தேய்த்தாலோ, உப்பையும் வெங்காயத்தையும் வைத்துத் தேய்த்தாலோ, வாழைப் பாலையோ பூவன் பழத்தை அறுத்தோ கொட்டு வாயில் தேய்த்தாலோ வலியும் கடுப்பும் நின்றுவிடும். எரிச்சலையும் கடுப்பையும் தவிர்க்க 'ஐஸ்'கட்டியைக் கொட்டுவாயில் வைப்பது நல்லது.

பெரிய ஜாதித் தேள்களை விடச் சிறிய ஜாதித் தேள்களுக்குத்தான் விஷம் அதிகம். ராஜாத் தேள் என்று ஒரு சிறிய தேள் இருக்கிறது. சற்று வெண்மையாக இருக்கும். பெரிய தேள் மீது சவாரி செய்து கொண்டு வரும். இந்த ராஜாத் தேள் ஒரு கருங்கல்லைக் கொட்டினுல் அது இரண்டாக வெடித்துவிடும் என்று சொல்வார்கள். மனிதனைக் கொட்டினுல் சாவு திண்ணம்.

அடிக்கடி ஒருவன் தன் உடலில் தேளைக் கொண்டு கொட்டிக் கொள்ளச் செய்வதனுல் அவன் உடலில் சிறிது சிறிதாகத் தேளின் விஷம் ஏறி அவன் ரத்தத்தில் எதிர் விஷம் உண்டாகி விடுகிறது. அவனைத் தேள் கொட்டினுலும் பாதிக்காது. கர்ப்பந்தரித்துள்ள ஒருத்தியைத் தேள் கொட்டிவிட்டால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு எக்காலத்தில் தேள் கொட்டினுலும் ஒருவித அபாயமும் ஏற்படாது என்பது ஆதாரமற்றது.

நெருப்புச் சூழ்ந்து விட்டால் தேள்கள் தற்கொலை செய்து கொள்ளும் என்ற தவருன அபிப்பிராயம் இருந்து வருகிறது.

நெருப்புச் சூழ்ந்தால் மற்றப்

பிராணிகளைப்போல் தேளும் மூர்ச்சை அடையும்.

அதிகச் சூடு தேள்களைப் பாதிக்கும். ஆகையினுல் அவை இருண்ட நிழலுள்ள இடங்களையேபெரிதும் விரும்புகின்றன.

தேளின் விஷம் தேளையே பாதிக்காது. மற்றொரு தேளையும் பாதிக்காது. முரட்டுத்தனமாக ஒன்ரோடு ஒன்று சண்டை போடும் பொழுதும், பெரிய கைகளை உபயோகிக்கின்றனவே தவிர கொட்டிக் கொள்வதில்லை. இரண்டு ஆண் தேள்களுக்கிடையே ஒரு பெண்ணை யார் அடைவது என்பதைக் குறித்தோ இரையை யார் அடைவது என்பதைக் குறித்தோ கடும் யுத்தம் நடக்கும். தோல்வியடைந்த தேள் சாகாது. வேகமாக ஓடிவிடும்.

ஆண் தேள் பெண் தேளைவிடச் சிறியதாக இருக்கும். ஆனல் ஆண்களுக்குப் பெரிய ஸ்பரிசச் சிப்புகள் இருக்கும். ஆணும் பெண்ணும் சேரும் பொழுது ஒன்றின் தலை மற்றொன்றின் தலையோடு முட்டிக் கொண்டிருக்கும்.

ஆண் தன்நீண்ட கைகளினுல் பெண்ணினுடைய கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கரகரவென்று பிடித்து இழுக்கும். ஆணின் நடத்தை முரட்டுத்தனமாக இருக்கும். முதலில் பெண் தேள் திமிறும். ஆணிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்ற நிலைமை ஏற்பட்டவுடன் இஷ்டத்துக்குக் கீழ்ப்படிந்து விடும். பிறகு இரண்டுமாகச் சேர்ந்து சிலமணி நேரம் நர்த்தனம் புரியும். இப்படியாக இவை 'ஹனிமூன்' நடத்துகின்றன! பெண்ணின் பிடியை விடாமல், பின் பக்கமாகவே ஆண் தேள் நகர்ந்து, ஒரு கல்லுக்கடியில் குழியைப் பறித்து இரண்டுமாக உள்ளே மறைகின்றன. கடைசியாகப் புணர்ச்சிகுப் பின் பெண் தேள் ஈவு இரக்கமின்றி, வஞ்சம் தீர்த்துக் கொள்வதுபோல் தன் கணவனை மிக ஆவேசத்துடன் விழுங்கிவிடுகிறது!

தேள் முட்டையிடுவதில்லை; குஞ்சுபொரிக்கும். குஞ்சுகள் நகர்ந்து தங்கள் இரையைத் தாங்களே தேடும் பருவம்வரும்

ஒரு பேராசிரியர் கல்லூரியில் வகுப்பு நடத்திக் கொண்டு இருந்தார். அப்போது மூடப்பட்ட கடிதம் ஒன்று அவருக்கு வந்தது. உடைத்துப் படித்தார், அவரைப் பிடிக்காத யாரோ ஒரு மாணவன் அதில் ஒரே ஒரு வார்த்தை மட்டும் எழுதியிருந்தான் "முட்டாள்" என்று!

பேராசிரியர் கொஞ்சமும் கோபப்படாமல், "அநேகர் கடிதம் எழுதி கையெழுத்துப்போட மறந்து விடுவார்கள். ஆனல் இவரோ கடிதம் எழுத மறந்து விட்டார், ஆனல் கையெழுத்தை மட்டும் மறக்காமல் போட்டு விட்டார்!" என்ருர்.

வரையில், தாய்த் தேள் தன் மார்பிலேயே அவற்றை வைத்துக்கொண்டு பிறகு வெளிவிடுகிறது. தேள் கர்ப்பம் அடையும்பொழுது முதுகுப் பக்கம் பருக்கும். அங்கேயே முதிர்ந்து, முதுகு ஓட்டைப் பிளந்துகொண்டு குஞ்சுகள் வெளி வருகின்றன. பிறகு தாய்த் தேளுக்கு முதுகு ஓடு கழன்றுபோக, வேறு புதிய முதுகு ஓடு உண்டாகிறது. ஒரு தேளின் கர்ப்பத்தில், அந்த அந்த ஜாதிபேதத்தைப் பொறுத்து ஒரு தடவையில் சுமார் 8 முதல் 40 குஞ்சுகள் வரையில் உற்பத்தியாகும். குஞ்சுகள் எல்லாம் தாயின் உடலின்மீதும் வாலின் மீதும் ஏறி இறங்கி விளையாடுவது பார்ப்பதற்கு அழகாயிருக்கும். கொஞ்ச நாட்களுக்குத் தாயின் வாய்ப் பாகத்திலிருந்து பாதி ஜீர்ணிக்கப்பட்ட உணவைத் தேள் குஞ்சுகள் உறிஞ்சி ஜீவிக்கும். ஒரு மாதம் கழித்துத்தான் தாங்களாகவே உணவைத் தேடிக் கொள்ளவும் சுயேச்சையாகச் சுற்றவும் ஆரம்பிக்கும்.

இந்தியாவில் பல வகையான தேள்களைக் காணலாம். வீட்டுத் தேள் சிறியதாக இருக்கும். சில இடங்களில் கறுப்பாகவும் உருவத்தில் பெரியதாயும் பயங்கரமானதாயும் கொடிய விஷமுள்ள ஒரு தேள் இருக்கிறது. 'நட்டுவாக்காலி' அல்லது 'நண்டுத் தெறுக்கால்' என்று பெயர். சாதாரணத் தேளைவிட அதற்கு விஷம் அதிகம். அது மாடு, குதிரைகளைக் கொட்டினால் அவை உடனே இறந்துவிடும். மனிதர்களைக் கொட்டினால் நோக்காடு அதிகமாயிருப்பதுடன் இரண்டு மூன்று நாட்கள் வரையிலும்கூட அது நீடிக்கும். சிலர் அது கொட்டுவதனால் இறந்து போவதும் உண்டு.

தேள்கள் விஷமுள்ள ஜந்துக்களாக இருந்தாலும் ஏதோ சிறிதளவு உபகாரமும் செய்கின்றன. உபயோகமற்ற, அபாயமும் தொந்தரவும் கொடுக்கும் பூச்சிகளைத் தின்று ஒழித்துவிடுகின்றன. தாவரங்களின் வேர்களைத் தின்று ஜீவிக்கும் வண்டுகளைத் தேள்கள் இரையாகக் கொள்ளும். பெரிய தேள்கள் சிறிய எலிகளையும், பல்லிகளையும் இரையாக உட்கொள்ளும். இந்தச் சிறிய நன்மை தவிர தேளால் வேறு ஒரு பலனும் இருப்பதாகத் தெரியவில்லை.

சாட்டைத் தேள் (விப் ஸ்கார்ப்பியன்) என்ற ஒரு வகைத் தேள் உண்டு. இது ஒரு விசித்திரமான ஜந்து. தேள் இனத்தையும் சிலந்தி இனத்தையும் இணைக்கும் இரு ஜாதிப் பிறப்பு (கிராஸ்) என்று இதைச் சொல்லலாம். ஒன்று அல்லது இரண்டு அங்குல நீளம் இருக்கும். இடுக்கிகள் உண்டு; கொடுக்குக் கிடையாது; விஷமற்றது; சாட்டை போன்ற நீண்ட வால் உண்டு. ஆசியாவிலும் அமெக்காவின் சில பாகங்களிலும் இத்தகைய தேளைக் காணலாம்.

●

பிரேத மனிதன்
(௨)
பிராங்க் மீண்டும் வேகமாக ஓடினான்.
வழியிலே ஒரு உருவத்தைச் சந்தித்தான்.
பிராங்க்! உன்னைத் தேடித்தான் வந்தேன். எங்கே ஓடுகிறாய்?
ஹென்ரீ! நீயா?
பிராங்கின் தலை சுற்றியது. மயக்கம் போட்டுக் கீழே விழுந்தான்.
ஹென்ரீ அவனை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றான்.

நாட்கள் பல ஓடின. பிராங்க் உடல் நலம் பெற்ருலும் மன நலம் பெருமல் கலங்கி ஞன்.
நல்ல சமயத்தில் என்னைக் காப்பாற்-றினுய்; மிகவும் நன்றி.
பரவாயில்லை; உனக்கு அப்பாவிட-மிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது.
உனது இளைய தம்பி; மழலை உதிர்க்கும் மாணிக்கம் வில்லியம் மாலை விளையாடச் சென்-றபோது யாரோ கழுத்தை நெறித்துக் கொன்று-விட்டார்கள்..
கடிதத்தில...
அப்படியானல் ஹென்ரீ; நர்ன் புறப்ப-டுகிறேன்!
மழையிலும், பனியிலும் நனைந்தபடி; தான் சிருஷ்டித்த கோரஉருவம் என்ன ஆயிற்றே என்று நினைத்தபடி ஊருக்குப் போய்க்கொண்டிருந்தான்!

சொந்த ஊரின் எல்லை வந்தது....
சரி; அருமைத்தம்பி கொலையுண்ட அந்த விளை-யாடுமிடத்தைத்தான் பார்த்து வருவோமே!
சிங்காரப் பண்போலும் சொல் உதிர்த்து என் சிந்தை மகிழ்விக்கும் செல்வமே! உன் மணிக்கழுத்தை நெறிக்க யாருக்கடா மனம் வந்தது?
அப்போது பயங்கரமான உருவம் ஒன்று எதிரே வந்தது.
அய்யோ! நீயா?
நாசத்தின் வடிவமே! நீதான் என் தம்பியைக் கொன்றிருக்க வேண்டும்-படுபாவி! நில் ஓடாதே! நில்!

அவன் கூச்சலுக்குப் பலனில்லை!
ஆகா! உலகத்துக்கே எதிரியொன்றை உருவாக்கி எவ்வளவு பெரிய துரோகம் இழைத்து விட்டேன்! அய்யோ; சமுதாயமே! என்னை மன்னிப்பாயா?
பலமான மனப்போராட்டத்திற்குப் பிறகு பிராங்க் வீடு திரும்பினான்.
அழாதே; பிராங்க்! கொலை செய்த பேர்வழியைக். கண்டு பிடித்து விட்டோம்!
பொய்; அந்த பயங்கர உருவத்தை யாராலும் பிடிக்க முடியாது!
உளராதே! தாதி ஜஸ்டின்-தான் கொலை செய்தவள்!
தாதியா? இருக்க முடியாது. இது மாபெரும் பொய்!
அதற்குமேல் அவனால் விளக்க முடியவில்லை.

உண்மை தான்! மறு நாள் உன் தம்பி கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை ஜஸ்டினுடைய பையில் கண்டுபிடித்தோம். எனவே அவள் தான் கொன்றிருக்கிறள். நாளை அவளுக்கு தூக்குத் தண்டனை!
அய்யகோ! அருமைத் தம்பி; நிரபராதியான தாதி-இந்த இரு கொலைகளுக்கும் நான்தான் காரணம்! இருந்தும் எப்படி நான் உண்மையை ஒப்புக்கொள்ள முடியும்?
அன்று ஒன்றும் சாப்பிடாமல் திரும்பி வரும் போது பிராங்க் பிரேத மனிதனைச் சந்தித்தான்.
சப்தம் போடாதே! நீ என்னுடைய "பிரம்மா". நான் உன்னைக் கொல்ல மாட்டேன். நான் சொல்வதைக் கேள்!
பாவி! நம் இருவரில் யார் வாழ வேண்டுமென்பதை முடிவு செய்துவிடுவோம்
சொல்லித் தொலை!
என்னோடு என் "குகைக்கு" வா; நான் ஏன் கொலை செய்தேன் என்பதை விளக்குகிறேன்!
செல்லப்பன்.
அவனோடு பிராங்க் குகைக்குச் சென்றன்
தொடரும்

உயரமும் பலனும்!

உயரமாக இருப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைக்கிறதா? அமெரிக்காவில் முன்பு ஒரு முறை இது பற்றி புள்ளி விபரம் சேகரிக்கப்பட்டது. 1037 உத்தியோகஸ்தர்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டார்கள். அதை வைத்துப் பார்க்கும்போது உயரமானவர்கள்தான் பெரிய உத்தியோகங்களை வகிக்கிறார்கள்!

முன்பு அமெரிக்காவில் ஒரு முறை பெரிய வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றியது. அந்த நேரத்தில் சேகரிக்கப்பட்ட விபரம் கீழே தரப்படுகிறது.

ஐந்து அடி, எட்டு அங்குல உயரமுள்ளவர்கள் முதலில் வேலையிழந்தார்கள்.

ஐந்து அடி, ஒன்பது அங்குல உயர முள்ளவர்கள் சிறிது நாட்கள் சென்று வேலை யிழந்தார்கள்.

ஐந்துஅடி, ஒன்பதரை அங்குல உயரமுள்ளவர்களோ வேலை யிழக்கவே இல்லை.

ஆனால் டாக்டர் எட்வின் பிளமிங் சொல்கிறபடி "நெட்டையானவர்கள் குட்டையானவர்களைவிட புத்திசாலிகள்" என்று முடிவு கட்டிவிடக் கூடாது.

ஹேவ்லக் எல்லிஸ் என்னும் பிரபல மனோதத்துவ நிபுணர் பிரிட்டனிலுள்ளவர்களின் உயரத்தை ஆராய்ச்சி செய்தார்.

அதன்படி பிரிட்டனில் சமுதாயத்தின் வசதிக் குறைவான நிலையிலிருப்பவர்கள், உயர்தர வர்க்கத்துக்காரர்களைவிட குட்டையாகவே இருக்கிறார்கள். இருந்தாலும் கீழ் வகுப்பிலிருந்து வெளிக் கிளம்பும் மேதைகளோ மிகவும் உயரமானவர்களாகக் காணப்படுகிறார்கள்.

பொதுவாக தலைமுறைக்கு தலைமுறை மக்களிடத்திலே உயரத்தில் வளர்ச்சி காணப்படுகிறது. ஹார்வர்டு, எல் ஆகிய பல்கலைக் கழகத்து மாணவர்கள் தங்கள் தந்தைகளைவிட இரண்டு அங்குலம் உயரமாக வளர்ந்திருக்கின்றனர். இன்றைய அமெரிக்கச் சிப்பாய்களோ முன்பு சுதந்தரப் போர் சமயத்தில் இருந்த சிப்பாய்களைவிட நான்கு அங்குலம் உயரமாக வளர்ந்திருக்கின்றனர்.

—'திஸ் வீக்'

பரிதாபத்திற்குரியவன்!

[நெப்போலியன் வாளெடுத்துப் போர் புரியும் வீரன் மட்டுமல்ல; பேனா பிடித்து பல எழுத்தோவியங்களைத் தீட்டியவனுமாவான்! அவைகளில் மூன்று மட்டுமே இதுவரை கிடைத்திருக்கின்றன. மற்றவை கடிதங்களாகும்!

பரிதாபத்திற்குரியவன் என்னும் பெயரிலே வரும் ஒரு சிறு நாவலின் சுருக்கம் அவன் எழுதிய 'கிளிசனும் யூஜினியும்' என்பதன் மொழிபெயர்ப்பாகும்!

இதில் வரும் பாத்திரங்கள் நெப்போலியன் வாழ்க்கையிலே நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகும்.

நெப்போலியன் கதை

இதில் வரும் கதாநாயகன் நெப்போலியனே தான்! கதாநாயகியோ அவனது ஆருயிர் (முதல்) காதலி டெசிரியாகும்!

அவளுடைய குடும்பத்தினர் தடுத்ததால் யூஜினி டெசிரி, நெப்போலியனின் இல்லக்கிழத்தியாவது தடுக்கப்பட்டது. பிறகு நெப்போலியன் ஜோசப் பைன் டிபூயூ ஹார்னேவை மணந்ததும் யூஜினி ஒரு கடிதம் எழுதினாளாம். அது இது:

"இனி என் வாழ்க்கையைத் தங்களுக்கு அர்ப்பணிக்க முடியாது என்பது என்னால் தாங்க முடியாத பேரிடி. உங்களுக்கு மணமாகி விட்டது! இது என் மனத்திலே நினைக்க முடியாத சேதி. என்னை வாட்டும் அச்சேதி உயிரை ஓட்டி விட்டாலும் அதிசயமல்ல. ஒரு காரியத்தை மேற்கொண்டால் அதை எப்படி முடிக்க வேண்டும் என்று காட்டுகிறேன். ஒட்டிய நமது உறவை வெட்டியது தங்களது தீட்டிய வாள்தான். இருந்தும் என் உடலையும் உள்ளத்தையும் தொட்டிட வேறு எவரையும் விட்டிட மாட்டேன். இனி திருமணம் என்னும் தீஞ்சொல் என் வாழ்வில் இல்லை!"

ஆனால் இரண்டாண்டுகள் கழிந்ததும் அவள் பெர்னடோட்டே என்பவனை மணம் செய்து கொண்டாள். இந்த யூஜினிக்கும் நெப்போலியனுக்கும்தான் இக்கதையில் வரும் யூஜினியையும் கிளிசனையும் ஒப்பிட்டு நோக்குவர்.

பச்சை வெல்வெட்டிலே பைண்டுசெய்யப்பட்டு, போலந்திலே யுள்ள கார்னிக் காஸ்னில் என்னு மிடத்திலே காட்சிப் பொருளாக வைக்கப் பட்டிருக்கிறது அக்கதை.]

இரா. மதனகோபால் பி. காம்.

போருக்காகவே பாரில் பிறந்தவன் கிளிசன். இளவய திலேயே இராணுவத் தலைவர் களின் இறவாப் புகழ் பெற்ற வீர தீரச் செயல்களை அறிந்திருந் தான். அவன் தோழர்கள் பட்டு நிகர் மேனியும், முல்லை மொட்டு நிகர் பற்களும், பவ ளப் பெட்டி உதடுகளும், விற் காட்டும். புருவங்களும் எழில் காட்டும் உடலும் கொண்ட எழிலரசிகளை விட்டுப் பிரியாமல் தொட்டுக் கொண்டேயிருக்க திட்டங்கள் தீட்டுகையில், அவன் உடைவாள் ஏந்தி, தடை பல தாண்டி, படைபல கடந்து, புகழை அடைகாக்க வழி முறைகளை எண்ணுவான்.

உலகின் புகழை உட் கொள்ள இராணுவத்தில் உயர்ந்த பதவி அவனைத் தேடி வந்தது, அவனுடைய இள வயதிலேயே. வெற்றி மேல் வெற்றி அவனைச் சூழ்ந்திருக்க அந் நாட்டு மக்களோ அவனை நாட்டைக் காக்க வந்த உன் னத வீரன் என்று போற்றி வந் தனர்.

அதிகாரமும், துணிவும், அமை தியும், உறுதியான மனமும் கொண்டவனுக்குப் பகைவர் கள் பெருகிக் கொண்டே போவர். இது உலக நியதி யல்லவா ?

அதற்கு கிளிசன் மட்டும் விதி விலக்கல்லவே! அவனுடைய உறுதியான மனதையும், மன தின் மகத்துவத்தையும் இழித் தும், பழித்தும் கூறினர், சிலர்.

சுற்றிலும் பகையை வளர் த்து வந்த வெற்றி, அவனுக்கு வேம்பாகி விட்டது. வளர்ந்து வந்த பகை கண்டு அவன் தளர்ந்து விட்டான் என்றால் அது கோழைத்தனத்தால் அல்ல; ஏதும் காரணமற்று சூது புரிகின்றனரே மந்தமதி கொண் டோர் என்று மனம் வெந்து போனான்.

வெந்து போன மனதிற்கு, நொந்துபோன உள்ளத்திற்கு, அவன் மந்தமாருதம் வீசும் சுந் தரச்சோலையை நாடினான். புகழ் தந்த பரிசான பகையையொழித்து இன்பப் புகைதரும் நறு மணத்தை நாடினான். ஓடி னான் தனக்கு பெருமை தேடித் தரும் போர்க்களத்தை விட்டு! தேடினான் இன்பத்தை!

போரைவிட உயர்ந்த பொருள்கள் உள்ளன பாரில் என்றும், களத்திலே தலைகளை வெட்டுவதைவிட உயர்ந்த வேலையுமிருக்கிறது என்றும் அறிந்து கொண்டான். மனி தனை வாழ வைப்பதும், வாழ விடுவதும் இன்பத்தை அவன் சுவைக்க அனுமதிப்பதும், அவனை அழித்திடும் வேலையை விட உயர்ந்தது என்றும் தெளிந் தான்.

ஆதலால் அவன் தன் மன திலே தோன்றிய மாண்புள்ள எண்ணங்களை வளர்க்க, அதன் படி நடக்க விரும்பினான். தன் படையினின்று விலகி, தன் அன்பு நண்பன் ஒருவனின் அழைப்பிற் கிணங்க அவன் இல்லம் ஏகி னான். அவன் இல்லம், லயான்ஸ் அருகில் இருக்கும் சாம்ப் வர்ட் என்னும் இடத்தில் இருந்தது.

அந்த இடத்திலே இயற்கை தன் கைவண்ணத்தைத் தீட்டி

மாந்தர்கள் மகிழும் மனோரம்மி
யமான காட்சிகளைப் படைத்
திருந்ததால் கிளிசன் வீட்டில்
தங்காமல், காட்டிலும், மேட்டி
லும் சுற்றிக் கொண்டிருந்ததில்
வியப்பேதுமில்லை! அவன் நண்
பன் இல்லத்தில் பலப்பலர்
விருந்தினராகத் தங்கியிருந்
தனர்.

கிளிசனின் வளரும் சிந்தனை
யும், கிளரும் உணர்ச்சிகளும்,
மலரும் எண்ணங்களும், உலரும்
சருகுகள் போன்ற வேசிகளின்
சல்லாபங்களிலும், மற்றவர்
களின் வீண் விவாதங்களிலும்,
வேடிக்கை தரும் கேளிக்கை
களிலும் வயப்பட்டு விடவில்லை!

காட்டுப் புறங்களில் சுற்றி
னல்தான், வாட்டும் தன் மன
தில் கிட்டும் மகிழ்ச்சி-ஒட்டும்
உள்ள அமைதி என்று உலவி
வந்தான். உண்மையிலேயே
உற்சாகமும், உள்ள அமைதி
யும் அவனுக்குக் கிடைத்தது.
இயற்கையின் எழில் உமிழும்
கரங்களில் சிக்கி அது தரும்
முத்தத்தால் மூச்
சுத் திணறி முழு
மகிழ்ச்சியுடன்
காணப்பட்டான்
அவன்!

மாறி மாறி வரும்
பருவமும், பறவை
களின் இன்னிசை
கீதங்களும்,
பாய்ந்துவரும் அரு
வியின் பாங்கான
தோற்றமும் அவ
னுக்குப் பரவச
மூட்டின.

அவன் இருக்கு
மிடத்திற்கு அப்
பால் ஒரு மைல்
தொலைவில் உள்ள அல்லீஸ்
என்னுமிடத்திலேயிருந்த நீச்
சற் குளங்களுக்கு செல்வான்.
அங்கு அவன் வருவோர்
போவோரையும் கவனிப்பான்.

ஒருநாள் அவன் அங்கு
பதினாறு வயது கொண்ட இரு
அழகு உருவங்களைக் கண்
டான். கவர்ச்சியான கண்
களும், அழகான உடலும்,
பளபளப்பான கூந்தலும், பார்த்
தோர் பணியச் செய்யும் பாங்
கான உடற்கட்டும் கொண்ட
வள் அமிலி. அவளுக்கு வயது
பதினேழு இருக்கும். மற்றவள்
யூஜினி—அவளுக்கு ஒரு வயது

குறைவாகயிருக்கும்; அழகில் அமிலியைவிட குறைந்தவள் தான்; அவள் உடற்கட்டும் சாதாரணமாகத்தானிருந்தது.

''நீ ஒருவன் மட்டும் என்னைக் காதலிக்கவில்லை. எத்துணையோ நபர்கள் உண்டு எனக்கு. ஒன்று மட்டும் தெரிந்துகொள். என்னைப் புகழ்ந்து பேசினால்தான் நீ என்னிடம் விரும்பியதை அடையலாம்!''—என்று அமிலி பார்வை மூலம் பேசுவாள், தன்னை ஏறிட்டு நோக்கும் வாலிபர்களிடம்.

யூஜினி அப்படியில்லை. அவள் எவரையும் ஏறிட்டு நோக்க மாட்டாள்.

பலவித கனிகளை ருசி பார்க்கும் பசியுள்ளவனைப் போல் அமிலியும் பல ஆண்களைக் கவர்ந்து அவர்களை தனது தாளத்துக்கு ஏற்ற ஆட்டம் போடச் சொல்லி அவர்கள் வாட்டம் போக்குவாள். யூஜினி அப்படிப்பட்டவள் அல்ல. நல்ல குணம் கொண்ட நங்கை.

அழகிலும், கவர்ச்சியிலும் சிறந்த அமிலி கிளிசனையும் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. எனவே அவர்களுடன் சந்தர்ப்பங்கள் நேரும் போதெல்லாம் பேச வாய்ப்பெடுத்துக் கொள்வான். அவனை அமிலியின் அழகு கவர்ந்திருந்தது. யூஜினியின் மௌனமும் அவனுடைய மனதில் சலனத்தை உண்டு பண்ணியிருந்தது.

ஒரு தடவை அமிலியும், கிளிசனும் தனியாக உலவச் சென்றார்கள். அவர்கள் ஓரிடத்தில் பல மணி நேரம் இருந்தனர். இன்பமாகப் பொழுதைக் கழித்தனர்.

அமிலியின் பல காதலர்களில் கிளிசனும் ஒருவன். அதை கிளிசன் உணரவில்லை. மாற்றான் ஒருவன் மடியில் அவன் மனதைக் கவர்ந்த துடியிடையாள் துவண்டு கிடப்பதைக் கண்டு மனம் வெகுண்டு போனான்.

ஆனால் நொந்துபோன அவன் உள்ளத்திற்கு மருந்திட்டாள் யூஜினி அன்பு வார்த்தைகளால். அவள் கண்களில் காதல் ஒளி சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் கண்டான் கிளிசன். கன்னியின் காதலில் சிக்கினான்.

காதல் அவர்களை இணைத்தது. இன்ப ஊற்றில் திளைத்து ஊறிப் போனார்கள் இருவரும்.

மாதங்கள் மறைந்து, ஆண்டுகள் அழிந்தன. கிளிசனுக்கும், யூஜினிக்கும் குழந்தைகள் பிறந்தன. அவை அவர்களின் அன்பை இன்னும் பெருக்கின.

இரவில் கிளிசனின் மார்பின் மீது தன் தலையை புதைத்த வாறேதான் உறங்குவாள் யூஜினி. இன்பச்சிட்டு யூஜினியைத் தொட்டுக் கொண்டேயிருந்தால்தான் தூக்கம் வருமாம் கிளிசனுக்கு. அவள் விட்டுப் பிரிந்தால் எட்டிக் காய் தான்.

யூஜினிக்கு இருபத்திரண்டு வயதாயிற்று. இருந்தும் அவள் மணமான புதிதில் கொண்ட குணத்தை விடாமல் இன்னும் தன் கணவனுடன் சல்லாபித்துக் கொண்டேயிருந்தாள். கிளிசனும் அவளைக் கண

நேரமும் விட்டுப் பிரிய விரும்பினில்லை. கரும்பு மொழியாளின் காதற் கனிரசத் தேனைப் பருகிட்டான் தினம் தினம்! ஒவ்வொரு நாளும் அவர்கள் புதுவித இன்பம் கண்டனர். வாழ்க்கையின் இனிமையை அணு அணுவாகச் சுவைத்தனர். அன்புபூண்டு, காதற்கொண்டு, அவனுக்கு இன்பத்தை மொண்டு மொண்டு அளித்தாள்.

அமைதியான கடலில் ஆடிச் சென்ற அவர்கள் வாழ்க்கைப் படகு பின் ஒரு சமயம் புயலை எதிர்பார்க்கவில்லைதான்!

ஒருநாள் கிளிசனுக்கு அரசாங்கத்திலிருந்து ஓர் அஞ்சல் வந்தது. இருபத்தி நாலு மணி நேரத்திற்குள் அவன் அங்கிருந்து புறப்பட்டு பாரிஸ் அடையவேண்டுமென்று ஆணையிட்டிருந்தது அக்கடிதம்.

கடிதம் கண்ட கிளிசன் கவலை கொண்டான். தேன் மொண்டு அளித்த சிங்கார வண்டைவிட்டுப் பிரிய வேண்டுமே என்று கவலை கொண்டான். அந்தப் புள்ளிமானும் புலியைக்கண்ட திகில்கொண்டது.

"ஓ! கிளிசன்! என்னைவிட்டுப் பிரிகிறீர்களா? நாம் துவங்கிய இன்பக் கோட்டை கட்டி முடிவதற்குள் விட்டுப் பிரிய வேண்டுமா? இனி நான் என்ன செய்வேன் அன்பரே? எப்படித் தாங்குவேன் இப்பேரிடியை?" என்றாள்.

"கண்ணே! கலங்காதே! என் செய்வது? அரசாங்க ஆணை, தவிர்த்தால் தண்டனை. நான் மட்டுமென்ன நங்கையே, பிரிவைத் தாங்குவேனா? இதயம் எரிமலையாகத்தான் இருக்கிறது. துன்பம் சூழ்கிறது; என் செய்வது?"—கிளிசன் குமுறினான் இப்படி.

"நானும் உணர்கிறேன் கண்ணாளா, கடமையை! ஒன்று மட்டும் கூறுகிறேன். நீங்கள் என்னை மறந்தால் இன்று அணைத்த அதே கையால் கொன்றுவிட்டுப் போங்கள்" என்றாள்.

"மூச்சுவிட மறந்தாலும் மறப்பேன் கண்ணே! உன் பேச்சை எப்படி மறப்பேன். வாள் வீச்சிலே உனது கண் வீச்சைக் காண்பேன். என்றும், எப்பொழுதும் என் உள்ளத்திலே நிலைத்து நிற்பவள் அல்லவா நீ."

—காதலன் பிரிந்தான். கவலை அவனை அணைத்தது. பலமெல்லாம் இழந்தவன் போலானான் கிளிசன்.

கிளிசனை ஓர் அணியின் தலைவனாக்கினர். அவளை நினைக்காமல் ஓர் அடிகூட எடுத்து வைக்கமாட்டான். தன் உள்ளக் குமுறலை, இதய வேதனையை எழுத்து வடிவத்திலே இருத்தி, அவளுக்கு அனுப்புவான், கடிதங்களாக.

அவனை நம்பியவர்கள் வீண் போகவில்லை. வெற்றி அவனை அணைத்தது. அவன் சென்ற விடமெல்லாம் சிறப்பாகப் போரிட்டான்.

போர் பலவாண்டுகள் அவனையும் அவளையும் பிரித்து வைத்

தது. அன்பையும், ஆசையை யும் கொட்டி அவன் தீட்டிய காதற் கடிதங்கள் தினம் தினம் அவளுக்குப் போகும். அவளும் அவனுக்கு எழுதுவாள். அவள் அன்புடன் அனுப்பும் கடிதங் கள்தான் அவனுக்கு ஆறுதல் அளித்தது.

ஒரு முறை அவன் போரிலே பலத்த காயமடைந்தான். தான் காயங்களிலிருந்து முழுதும் குணமடையுமுன் தன் நிலையை விளக்கவும், அவளிடம் ஆறுதல் வார்த்தைக்கூறி தேறுதல் அளித்து வரவும், தன்னுடைய உதவியாளர்களில் ஒருவனை பேர்வில் என்பவனை யூஜினி யிடம் அனுபினான்.

பெர்விலுக்கு உணர்ச்சி அப் பொழுதுதான் பிறந்தது. அவன் அதுவரை காதல் புரிந்ததில்லை. அவன் ஒரு நல்ல இடமாகப் பார்த்திருந்தான், தான் குடி யேற !

அவன் யூஜினியைக் கண் டான். அவளுக்கு ஆறுதல் கூறினான். அவளுடன் துக்கத் தைப் பகிர்ந்து கொண்டான்.

யூஜினியை பெர்வில் மிகவும் விரும்பினான். இது யூஜினிக்குத் தெரியாது.

ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை ! அவள் கிளிச னுக்குக் கடிதம் எழுதுவதில்லை. யூஜினி அவனை விரும்பவில்லை என்று எண்ணினான். நாட்கள் ஓடின. நாளாக ஆக பெர்வில்தான் இப் போது எழுதுகிறான். அதையா அவன் எதிர்பார்த்தான்? பாவம்; ஏமாற்றத்தின் ஏகபோக உரிமையாகிவிட்டான், அவன்

கிளிசன் உடல் தேறினான். உடனே சென்று யூஜினியைக் கட்டியணைத்து, காதல் கதை பேச வேண்டுமென்று துடித் தது அவன் நெஞ்சம். ஆனால் மறுநாளே அவன் போருக்குச் செல்ல வேண்டும் என அர சாங்கம் ஆணையிட்டது. என்ன செய்வான்?

''அன்பே! வருகிறேன். என் வாழ்க்கையின் துணைவியாக ஏற்ற உன்னை விட்டுப் பிரி கிறேன். உன் அருகில் இருந்த பொழுது அளவிட முடியாத இன்பம் அடைந்தேன். சிங் காரச் சிட்டு நீ, என்னைக் கட்டி அணைத்து இன்பம் ஊட்டினாய். கத்துகடல் தரும் முத்து நிகர் பற்கள் கொண்ட பாவையே! நீ தந்த இன்பத்தை எப்படி மறப் பேன் ! வாழ் நாள் முழுதும் இன்பம் நுகரலாம் என்று எண் ணினேன். ஆனால் இப்பொழுது இன்பம் இறந்து துன்பம் சூழு கிறது.

துரதிர்ஷ்டம் பிடித்த கிளி சனை மறந்து நீ இன்பமுடன் வாழு. ஆனால் ஒன்று. நான் பெற்ற செல்வங்கள் நான் நலிந் ததைப்போல் அன்றி நன்றாக வாழப் பாடுபடு. அதுதான் என் வேண்டுகோள். வருகிறேன்..''

என்று ஒரு கடிதம் எழுதி உடனே அனுப்பினான். போருக் குப் புறப்பட்டான். தீரத்துடன் போரிட்டு வீர மரணமடைந் தான் பரிதாபத்திற்குரிய கிளி சன் !

●

விநோதக் குழந்தைகள்!

மேதைகள் எப்படித் தோன்றுகிறார்கள்? பிறவியிலேயே அவர்கள் பேரறிஞர்களாகத் திகழ்கிறார்களா? அல்லது எல்லாக் குழந்தைகளைப் போலவே பிறந்து, பிறகு சூழ்நிலைகளால் திறமைசாலிகளாக மாறுகிறார்களா?

—இந்தக் கேள்வி பலருக்குத் தோன்றுவதில் வியப்பு எதுவுமில்லை.

பொதுவாகவே புத்திசாலிகளாக இருக்கும் குழந்தைகள் பெரியவர்களானதும் சோம்பேறிகளாகவும், தீய நடத்தைகளில் தேர்ந்தவர்களாகவும் மாறிவிடுவது உண்டு. இது அந்தந்தப் பெற்றோர்களையும், அவர்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தையும் பொறுத்த விஷயமாகும்.

உதாரணமாக, ஆயிரம் குழந்தைகளில் சுமார் ஐம்பது குழந்தைகள் பிரகாசமான எதிர்காலம் படைத்தவர்களாகவும், இருபத்தைந்து குழந்தைகள் உண்மையிலேயே நல்லறிவாளர்களாகவும், ஒரே ஒரு குழந்தைமட்டும் பெரிய மேதையாகவும் வளர்வதற்கான வாய்ப்புகள் கொண்டிருப்பதாகக் கணக்கிடுகிறார்கள்.

உதாரணமாக, மக்காலே பிரபு இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிய வரலாற்றை ஏழு வயதுச் சிறுவனாக இருக்கும்போதே எழுதி முடித்தார். அதற்கு முன்பாகவே அவர் ஒரு குழந்தைகள் பத்திரிகைக்கு ஆசிரியராக

விளக்கு அணைவதற்கு முன் பிரகாசமாக எரியும் என்பார்கள். ஆனால் இவர்கள் விஷயத்தில் பிரகாசமாக எரிகிற விளக்கு திடீரென்று அணைந்து விடுவதாகத்தான் பழமொழியை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். 'அமெரிக்கன் பேபி' என்ற ஏட்டிலிருந்து சுருக்கப்பட்டது இக் கட்டுரை.

இருந்தார். எட்டு வயதாக இருக்கும்போது ஒரு சிறந்த கவிதையொன்றை இயற்றினர்.

நூல்களைப் படிப்பதற்கு அவர் பால வயதிலிருந்தே சிரமப்பட்டதில்லை. எதைப் படித்தாலும், படித்து முடித்த மறு கணமே அதை திருப்பி ஒப்பித்துவிடுவார். பல ஆண்டுகள் கழிந்த பிறகுகூட ஒரு வார்த்தை பிசகாமல் அதைச் சொல்லிக் காட்டுவார்.

டீன் ஸ்விப்ட் என்பவர் மூன்று வயதாக இருக்கும்போதே பைபிளில் எந்த அத்தியாயத்தையும் வேகமாகப் படிக்கும் திறமையைப் பெற்றிருந்தார்.

கவிஞர் பைரன் ஐந்து வயதிலிருந்தே மாபெரும் இலக்கியங்களைப் படிக்க ஆரம்பித்தார்.

ஜான் ஸ்டுவர்ட் மில் என்னும் பேரறிஞரைப் பார்த்து, அவர் தொட்டிலில் குழந்தையாக இருக்கும்போதே படிக்கக் கற்றுக் கொண்டாரோ—என்று சந்தேகப் பட்டார்களாம். காரணம், அவர் படிக்காத புத்தகங்களே கிடையாது! வயது வந்த வாலிபர்களே படிப்பதற்குச் சிரமப்படும் கிரேக்க மொழியை அவர் மூன்று வயதிலேயே கற்றுக் கொள்ளத் துவங்கினர்.

டாக்டர் ஜான்சனும் இப்படித்தான். மூன்று வயதிலேயே படிக்க ஆரம்பித்தார். அவருடைய தாயார் அவர் கையிலே ஒரு பிரார்த்தனைப் புத்தகத்தைக் கொடுத்து, படித்துவை—என்று கூறிவிட்டுப் போவாராம். அவர் மேல் மாடிக்குச் செல்வதற்கு முன் சிறுவன் ஜான்சன் கீழேயிருந்து கூக்குரல் போடுவானும், "அம்மா, ஒப்பிக்கட்டுமா?"—என்று.

ஹென்றி பிராட்ஷா என்னும் அறிஞர் மூன்று வயதாக இருக்கும்போதே நன்றாக எழுத்துக் கூட்டிப் படிப்பார். பள்ளியில் படிக்கும்போதே அவர் ஐநூறு சிறந்த புத்தகங்கள் கொண்ட நூல் நிலையமொன்றை வைத்திருந்தார்.

வில்லியம் சிடி என்பவரும் இப்படித்தான். அவர் இரண்டு வயதிலேயே புத்தகங்களைப் படித்தார். பதினேரு வயதாக இருக்கும்போது ஒரு பேரறிஞர்கள் கூடிய சபையிலே சிறந்த சொற்பொழிவாற்றினர். ஆனல் வாலிபம் வந்தபோது அவரது புத்திகூர்மை மழுங்கிவிட்டது. பிறகு வாரம் ஒன்றுக்கு ஐந்து பவுன் சம்பளத்தில் குமாஸ்தா வேலை பார்த்தார். பெயர் வெளிக்குத் தெரியாமல் வாழ்ந்து நாற்பத்தி ஆருவது வயதிலே செத்துவிட்டார்.

ஆனல் உலகப் பிரசித்தி பெற்ற விசித்திரக் குழந்தை 1771-ம் ஆண்டிலே ஜெர்மனியிலே பிறந்தது. பெயர் கிரிஸ்டியன் ஹேயின்கர் என்பதாகும். தாய் வயிற்றிலிருந்து பிறந்த இரண்டொரு மணி நேரங்களிலேயே அந்தக் குழந்தை பேச ஆரம்பித்தது: மூன்று வயதாக இருக்கும்

போதே அந்தக் குழந்தை பைபிளைக் கரைத்துக் குடித்தது: ஜெர்மன் மொழியைத் தவிர லத்தீன், கிரீக், பிரெஞ்சு போன்ற மொழிகளில் பாண்டித்யம் பெற்றிருந்தது: சரித்திர, பூகோளத்திலும் அதற்குத் தகுந்த அறிவு இருந்தது. பிறகு ஒரு நாள் அந்தக் குழந்தை 'நான் நான்காவது வயதில் சாகப்போகிறேன்!'—என்றது: அதன்படியே செத்தும் விட்டது!

ஒரு காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராயிருந்த டிஸ்ரேலி சிறுவயதிலேயே உலக இலக்கியங்களில் கரை கண்டிருந்தாராம்; எனவே அவர் நண்பர்களெல்லாம், 'ஒரு சமயம் நீர் நூல் நிலையத்தில் தான் பிறந்தீரோ?' — என்று கேலி செய்வார்களாம்!

சங்கீத மேதைகளில் சிலரும் இப்படித்தான் இருந்திருக்கின்றனர். ஜெர்மன் நாட்டிலே ஹேண்டல் என்பவன் ஐந்து வயதாயிருக்கும் போதே மெட்டுகள் இயற்றுவதிலும், 'ஆர்கன்' என்னும் வாத்தியம் வாசிப்பதிலும் பிரபலமாயிருந்தான்!

மோசார்ட் என்பவன் நரம்புக் கருவிகள் வாசிப்பதிலே பிரக்யாதி பெற்றவன்: ஆறு வயதாயிருக்கும்போதே அவன் ஐரோப்பா முழுவதிலும் கச்சேரிகள் செய்து சுற்றுப் பயணம் நடத்தினன். அணையப்போகும் விளக்கு அதிகப் பிரகாசமாக இருக்கும்—என்ற பழமொழியை வேண்டுமானுல், பிரகாசமாய் எரியும் விளக்கு சீக்கிரம் அணைந்துவிடும்—என்று திருத்திக் கொள்ளலாம். காரணம் முப்பத்தி ஐந்தாவது வயதிலேயே மொசார்ட் மறைந்து விட்டான்.

எகூதி மெனுகின் என்பவர் மூன்று வயதாக இருக்கும் போதே நன்ருக பிடில் வாசிப்பார். இப்போது அவர்தான் உலகத்திலேயே பிடில் வாசிப்பதில் மேதையென்று கருதப்படுகிருர்.

இதைப்போலவேதான் கணித மேதைகளும்! ட்ரூமன் சபோர்டு என்பவர் எட்டு வயதாக இருக்கும்போது ஒருவர் அவரை அணுகி 365,365,365,365,365, 365-ஐ 365 ஆல் பெருக்கினுல் என்ன விடை கிடைக்கும்—என்று கேட்டார். ஒரு நிமிஷத்துக்குள் அவர், "133,491,850, 208,566,925,016,658,299,941, 583, 225!" — என்று விடை கூறிவிட்டார். சோதிக்க வந்தவர், வியப்பு மேலிட சிலையாகி விட்டாராம்!

இது போன்ற விசித்திரப்பிரவிகள் மிகவும் குறைவு. ஆனுல் ஒன்று! இது போன்றவர்கள் அதிக நாள் இருப்பதில்லை. அப்படி இருந்தாலும் இந்த சக்தி மறைந்து விடுகிறது.

தாய்

அது ஒரு இரண்டடுக்கு மாடி வீடு. பத்துப் பன்னிரெண்டு குடும்பங்கள் அங்கே அடைக்கலம் பெற்றிருந்தன. இருப்பவர்கள் போதாதென்று அன்று காலை மேலும் புதியவள் ஒருத்தி அங்கே குடி வந்தாள்.

காலையில், அமைதியான நேரத்தில், சாமான்கள் தூக்கிக் கொண்டு வந்த கூலிக்காரனோடு அவள் சண்டை போட்டது, தூங்கிக் கொண்டிருந்த பலரை எழுப்பிவிட்டது. வீட்டிலிருந்த அவ்வளவு பேரும் தன்னைக் கவனிப்பதைக் கண்டவுடன், புதியவள் சண்டையை நிறுத்திக் கொண்டாள்.

புதிய குடித்தனத்தை சண்டையுடன் துவக்கிய அவள் பெயர் சசிரா. வயது நாற்பதிருக்கும். முகத்தில் தோன்றிய சுருக்கங்களும், தலை நரையும் அவள் வயதை அதிகப்படுத்தின. ஆழத்தில் இருந்த கண்களில் ஒளி இருந்தது. கட்டு குலையாத உடல் கொண்டவளாக இருந்தாலும், கைகளும், விரல்களும் கூம்பிக் கிடந்தன. பார்த்தவர்கள் மனதில் எடுத்தவுடன் நல்லெண்ணத்தை உண்டாக்கும் உருவம் இல்லை அவளுடையது!

சசிரா, மற்ற குடும்பத்தாருடன் பழகினால் தானே அவளைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள முடியும்? அவள் ஒதுங்கி வாழ்ந்தாள். அப்படி இருந்தாலும் ஊர் வம்பில் நாட்டமுள்ளவர்கள் பேசாமல் இருப்பார்களா? அங்கேயே குடியிருந்த ஒரு போலீஸ்காரன் மூலம் அவர்கள் சசிராவைப் பற்றித் தெரிந்து கொண்ட விஷயங்கள் இவ்வளவுதான்: "சசிரா ஒரு கொலைகாரி — தன் காதலனை ஏதோ ஒரு காரணத்திற்காக கொன்றுவிட்டதால் ஏழு வருடங்கள் சிறை தண்டனை அனு

..மூலம்: சோமர்செட் மாம்..

பவித்தாள். விடுதலை கிடைத்த வுடன் டிரினியாவில் வீடு பார்த்துக் கொண்டாள். இவள் கொலைகாரி என்ற விஷயம் வெளியில் தெரிந்தவுடன், பையன்கள் கல்லெறிந்து திட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அதைப் பொறுக்க முடியாமல் வீட்டுக்காரன், அவளை வீட்டைக் காலி செய்யும்படி சொல்லிவிட்டான். அங்கிருந்துதான் சசீரா இங்கு குடி வந்திருக்கிருள்''

அவளது தோற்றம்தான் பார்ப்பவர்களுக்கு மனதில் பயத்தை மூட்டியதே தவிர, நடத்தை அப்படி யொன்றும் பயங்கரமாகக் காணும்! காலையில் விடியுமுன் எங்கோ வேலைக்குப் போய்விட்டு, மாலையில் நன்ருக இருட்டிய பிறகுதான் அவள் வடு திரும்பும் வழக்கத்தை மேற் கொண்டிருந்தாள். இதனல் அங்கு குடியிருந்தவர்களுடன் அவள் சரிவரப் பழக வாய்ப்பில்லாமல் போய்விட்டது. வாய்ப்பை அவள் ஏற்படுத்திக் கொள்ளலாம்...விரும்பினுல்! அவளுக்குத்தான் யாருடன் உறவாடுவதற்கும் பிடிக்கவில்லையே! வெளியில் போகும் போதும், வரும்போதும் வழியில் இருப்பவர்கள் அவளைப் புன்சிரிப்போடு வணக்கம் செலுத்தி வரவேற்ருல்கூட, அவள் கவனிக்காததுபோல் அப்பால் போய்விடுவாள். இதைக் கவனித்த மற்றவர்கள் ''சிறைச்சாலையில் தனியாக ஏழு வருடங்களைக் கழித்ததனுல் அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போலிருக்கிறது. பைத்தியக்காரியாக இல்லாவிட்டால், சிரிப்புக்குக்கூடவா பஞ்சம்? என்றைக்குப் பைத்தியம் அவளுக்கு முற்றுகிறதோ, அன்று நாமெல்லாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்!'' என்ற விமர்சிப்பார்கள்.

இந்த மாதிரி விவாதத்திற்குத் தொடர்ந்து இடமளித்துத் துவக்கி வைப்பவள் பிலார் என்னும் பெயர் கொண்ட பெண்மணி. இதுவரைதனக்குக் கல்யாணமே ஆகவில்லை என்று அவள் வெளியில் கூறிக் கொண்டாலும், அவளுடன் வசிக்கும் பதினெட்டு வயதுப் பெண் ரோசலியா, அவள் மகள்தான்!

ரோசலியா மிகவும் அழகானவள். அந்த வட்டாரத்தில் அவளுடன் நாட்டியமாட விரும்பாதவன் யாருமில்லை. எவ்வளவோ வாலிபர்களுடன் பழகியும், இதுவரை அவள் மனம் யாரிடமும் ஈடுபடவில்லை. கேட்பவர்களிடம், தனது 'லட்சியக் காதலன்' இன்னும் தன் எதிரில் வரவில்லை என்றும், அதனுல் தனக்கு காதலிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை யென்றும் சொல்லிவிடுவாள். அதில் அவளுக்கு

..தமிழில்: அதிகமான்...

என்னவோ இன்பம்!

ஒரு நாள்......அன்று சனிக் கிழமை. இரவு மணி எட்டு. சசீரா வேலையிலிருந்து திரும்பி வந்து வழக்கம்போல் தன் அறைக்குள் முடங்கிக் கொண் டாள். மற்ற குடித்தனக்காரர் களில் சிலர் பிலாரின் தலைமை யில் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ரோசலி யாவும் அங்கே இருந்தாள்.

அந்த நேரத்தில் மிகவும் நாக ரீகமாக உடை யணிந்த ஒரு வாலிபன் அங்கு வந்து முன்னல் அமர்ந்திருந்த பிலாரிடம்,

''இங்கு சசீரா என்ற பெண் மணி இருக்கிருளாமே, அவர் கள் வசிக்கும் அறை எது என்று எனக்குச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டான். அவன் குரல்கூட நன்ருக இருந் ததாக ரோசலியா நினைத்தாள்.

சசீராவைப் பற்றி வந்தவுடன் அவன் கேட்டதும் ஒரு நிமிடம் எல்லோரும் திகைத்துத்தான் போயினர். அவளைத் தேடிக் கொண்டு ஒரு வாலிபன் வரு வதா—என்று!

விஷயம் தெரியாமலா போய் விடும் என்ற எண்ணத்தில் பிலார் வந்தவனுக்கு சசீராவின் அறை யைக் காட்டினள். ''அவன் யார்?'' என்ற அவர்கள் சந்தே கம் மறு விளுடியில் தீர்ந்து விட்டது.

கதவைத் தட்டிய அவன் ''அம்மா...அம்மா!'' என்ருன். கதவைத் திறந்த அவள், ''மகனே!'' என்று கூவியவாறு அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள். இருவரும் உள்ளே போய்விடவே கதவு மீண்டும் மூடப்பட்டது. புதிய வன் சசீராவின் மகன்தான். அவன் பெயர் குரியோ. எங்கோ தொழிற்சாலையில் நல்ல வேலையில் இருந்தான். விடு முறை நாளான ஞாயிற்றுக் கிழமை மட்டும் அவன் தாயைக் காண வருவதாக ஏற்பாடு.

''இந்தப் பைத்தியக்காரிக்கு இப்படி ஒரு மகன் இருப்பது நமக்கு இத்தனை நாள் தெரி யாதே'' என்று பிலார் குறை பட்டுக் கொண்டாள்.

''பிரபு வம்சத்தைச் சேர்ந்த வனைப் போலல்லவா அழகாக இருக்கிருன்!'' என்ருள் ரோச லியா பெருமூச்சு விட்டபடி. அவள் உள்ளம் எப்போதோ குரியோவைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விட்டது.

பத்துப் பதினைந்து நிமிடங் களுக்குப் பின், தாயும் மகனும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். குரியோ தாயிடம் விடை பெற்றுக் கொண்டான். போகும் முன் அவன் ரோசலியாவைக் கண் ணுல் விழுங்கி...புன் சிரிப்பால் விடை பெற்றுக் கொள்ளத் தவறவில்லை. அறிமுகமாக மூன் ரும் நபரின் உதவியா தேவை, இந்த மாதிரி நேரத்தில்...?

''உன் மகனு அவன்?'' என் ருள் பிலார், மகன் போவ தையே பார்த்துக் கொண்டி ருந்த சசீராவிடம்.

''ஆமாம்! அவன் என் மகன் தான்''—அவள் குரலில் அப்படி

ஒரு மகனைப் பெற்றுவிட்ட பெருமை தொனித்தது. மேற்கொண்டும் பேச நினைத்த பிலார், சசீரா கதவை மூடிக் கொண்டு உள்ளே போனதும் ஏமாற்ற மடைந்தாள்.

அப்போது சசீரா இருந்த மன நிலை அவளுக்கென்ன தெரியும்?

மகன்மேல் சசீராவுக்கு அள வில்லாத அன்பு; இந்த உலகத்தில் அவளுக்கிருந்த ஒரே பற்றுகோல் சூரியோதான். தான் வைத்திருக்கும் அளவுக்கு மகனும் தன் மேல் பாசம் வைத்திருக்க வேண்டும் என்று ஒவ்வொரு தாயும் விரும்புவது சகஜம். சசீரா இவ்விஷயத்தில் ஒருபடி அதிகந்தான். மகன் தன்னுடனே இருந்துவிட வேண்டுமென்று அவள் விரும்பினாள். அன்புக்கு பங்கம் வந்து விடக் கூடாதே என்ற கவலை அவளுக்கு. அதனால் ஒவ்வொரு தடவையும் மகனை சந்திக்கும் போதெல்லாம் காதலிகள் அவனுக்கு யாராவது உண்டா என்று அவனிடமே கேட்டு, அவள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளுவது வழக்கம். அவன் பெண்களோடு உறவாடினாலும், தாயின் மனதைப் புண்படுத்தக் கூடாதென்றே பொய் சொல்லுவது வழக்கம். அவள் மனதை அவன் அறிய மாட்டானா?

ஆனால் இன்று...

ரோசலியாவைப் பார்த்து சூரியோ புன்சிரிப்பு சிந்தியதை சசீரா பார்த்து விட்டாளே! கைப் புண்ணுக்குக் கண்ணாடியா? மகனின் அன்பு வேறு

"கனவு காண்பவன், வேறு என்ன செய்தாலும் சரி; ஒரே ஒரு காரியம் மட்டில் செய்வதேயில்லை; அதாவது, தான் கனவு காண்பதாகக் கனவு காண்பதில்லை"

—டீன் இஞ்சு.

பக்கம் திரும்புகிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

* * *

சூரியோ அடுத்த ஞாயிற்றுக்கிழமை தவறமல் வந்தான். ரோசலியாவை அவன் சந்தித்து விடக்கூடாதே என்பதற்காக சசீரா அவனை வீட்டுக்கு வெளி வாயிலண்டை போய் வரவேற்று, தன் அறைக்கு கூட்டி வந்து விட்டாள்.

பெண்ணின் மனம் பெண்ணுக்கா தெரியாது?

"நாம் அவளுடைய மகனைக் கடித்துத் தின்றுவிடுவோம் என்ற பயம் அவளுக்கு. அதனால்தான் இந்தப் பாதுகாப்பு!" என்றாள் ரோசலியா. கேலி நிறைந்திருந்தது அவள்பேச்சில்.

தாயின் இந்த உபசரணையினல் சூரியோ, ரோசலியாவைப் பார்க்க முடியவில்லை. அதில் அவனுக்குக் கொஞ்சம் வருத்தம்தான்.

"என்னை அவ்வளவு சுலப

மாக ஏமாற்றி விடலாமென்று மனப்பால் குடிக்காதே சசிரா!'' என்று ரோசலியா அன்று இரவு கருவிக் கொண்டாள்.

* * *

அடுத்த ஞாயிற்றுக்கிழமை. சூரியோ வரும் நேரத்தில் வீட்டை விட்டுக் கிளம்பி பக்கத்துத் தெருவிற்குப் போய் நின்று கொண்டாள் ரோசலியா. தாயாருக்குத் தெரியாமல் மகனைப் பார்த்துவிடலாமல்லவா? அவள் நம்பிக்கை வீண் போகவில்லை. சூரியோ அந்த வழியாகத்தான் வந்தான். ரோசலியாவைப் பார்த்தவுடன் அவன்,

''வணக்கம்!'' என்றான்.

ரோசலியா ஆச்சர்யப்பட்டவள் போல், ''ஓ! நீங்களா? என்னிடம் பேச உங்களுக்கு பயம் என்றல்லவா

நினைத்தேன்?'' என்றாள்.

''நான் எதற்கும் பயப்படுவதே இல்லை!''

''அம்மாவுக்கு மட்டும் பயப்படுவீர்கள்.......இல்லையா?'' —ரோசலியா இதைச் சொல்லி விட்டுச் சிரித்தாள். அவன் ஒரு நிமிடம் பதில் சொல்லாமல் தயங்கவே, அவள் அங்கிருந்து நகர ஆரம்பித்தாள்.

''நில்! எங்கே போகிறாய்?''

''எனக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. நீங்கள் போங்கள். சசிரா வாயிலில் காத்துக் கொண்டு இருக்கிறாள்''

ரோசலியா சொன்னதுபோல், அவன் தாயார் வீட்டு வெளி வாயிலண்டை நின்று கொண்டிருந்தாள். முன்னால் மகனாகிய சூரியோவும், பின்னால் ரோசலியாவும் வருவதை அவள் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. அவர்கள் இருவரும் பேசியிருப்பார்கள் என்று அவளால் யூகிக்க முடியாதா? அப்போது அவளுக்கு வந்த கோபத்தை இவ்வளவு அவ்வளவென்று கணக்கிட முடியாது...அதற்கு எண்ணெய் வார்ப்பது போல் சூரியோ ரோசலியாவுக்காக நிற்கவும், சசிரா ஆத்திரத்தோடு,

''இன்னும் எதற்காக வெளியே நிற்கிறாய்? உள்ளே போ!'' என்று கர்ஜித்தாள். சூரியோ உள்ளே போகும்வரை வெளியே இருந்துதான் சசிரா வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

* * *

இன்னொரு ஞாயிற்றுக்

லாபம் யாருக்கு?

கடுந்தொல்லைகள் நிறைந்தது பத்திரிகை தொழில் என்பார்கள். இங்கிலாந்தில் பிரபல பத்திரிகைகளின் உறைவிடமான பிளீட் தெருவில் கீழே கண்ட நிகழ்ச்சி நடைபெற்றதாக ஒருவர் எழுதியிருந்தார்.

பத்திரிகை நடத்திய நான்கு பேர் ஏக காலத்தில் இறந்து விட்டார்கள். அவர்களது உயில்களில் கண்ட சொத்து மதிப்பு பின் வருமாறு இருந்ததாம்:

ஆசிரியரின் உயில்	பவுன்	1
விற்பனையாளரின் உயில்	,,	10
பிரசுரகர்த்தரின் உயில்	,,	100
பழம் பத்திரிகை வியாபாரியின் உயில்	,,	1,00,000

கிழமை. ஏதோ பண்டிகை. ரோசலியாவின் வீட்டுக்கு முன்னுல் நடனம் நடந்து கொண்டிருந்தது. சூரியோவும் அப்போது சசீராவுடன் பேசிக் கொண்டுதான் அறைக்குள் இருந்தான். அவன் அங்கே இருக்கும்போது, மற்ற வாலிபர்களுடன் நடனமாட ரோசலியா விரும்பவில்லை. பிலார் பேசாமல் இருந்தால்தானே? மகளைக் கட்டாயப்படுத்தி ஆடச் சொன்னுள். அவளும் ஆடினுள் எவ்வளவு நேரந்தான் நாட்டிய இசையைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியும்? சூரியோ வெளியில் கிளம்பினுன்.

"எங்கே போகிருய் மகனே?"

"நாட்டியத்தைப் பார்க்க!"

"ரோசலியாவைப் பார்க்கத் தானே அங்கே போகிருய்?"

சூரியோ பதில் பேசாமல் தாயை அப்பால் தள்ளிவிட்டு வெளியேறினுன். மனம் பொறுக்குமா அவளுக்கு? ஜன்னல் திரை மறைவில் இருந்தவாறு வெளியில் நடப்பதை கவனித்துக் கொண்டு அங்கேயே நின்று விட்டாள், கொந்தளித்தெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு. சூரியோ அங்கு வந்தவுடன் ரோசலியா அவனுடன் நடனமாடினுள். இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தவாறு நடனமாடிக் கொண்டிருந்தது சசீராவுக்கு வேண்டாத காட்சியாக இருந்தது. கோபம் அவள் உள்ளத்தில் ஊற்றுபோல் கிளம்பி விட்டது. அன்புள்ள மகன், தன் கண் முன்னுல், இன்னெருத்தியிடம் பரிவு காட்டினுல்? மகனை அளவுக்கு மீறி நேசித்ததால்... ஒரு பக்கம் வெறுப்பும் தலை தூக்கி விட்டது. அத்தனை நாள் தனக்காக இங்கு வந்தவன், இனி அவளுக்காகவும் அல்லவா வருவான்? அன்பு துண்டாடப் பட்டு விடாதா? இரவு பூரா வும் அவளால் தூங்க முடியவில்லை—எப்படி முடியும்? ரோச

லியா, அவள் அறை முன்னுல் அடிக்கடி தோன்றித் தோன்றிக் கொண்டிருந்தது வேறு அவள் கோபத்தை அதிகமாக்கியது.

மறு நாள் காலை சசிரா வேலைக்குப் போகாமல் ரோசலியாவுக்காகக் காத்திருந்தாள். வீட்டுக்குள்ளிருந்து ரகளை செய்வதைவிட வெளியில் போய் தொந்தரவு கொடுப்பது நல்லதல்லவா?

தெரு முனையில் சசிரா, ரோசலியாவுக்காகக் காத்திருந்தாள். அவள் எதிர் பார்த்தது போல சீவி சிங்காரித்துக் கொண்டு ரோசலியா வெளியே கிளம்பினுள். தனக்காகக் காத்திருக்கும் சசிராவைக் கண்டதும், அவளது முகம் மாறியது.

எடுத்த எடுப்பில், "என் மகனிடம் உனக்கு என்ன வேண்டும்?" என்ருள் சசிரா, ரோசலியாவிடம்!

"என்ன சொல்கிருய் நீ?" —ஒன்றும் புரியாதவள் போல் நடித்தாள் கன்னி.

"நான் என்ன கேட்கிறேன் என்று உனக்குத் தெரியாதா? என்னிடமிருந்து என் மகனை நீ திருடிக் கொள்ளப் பார்க்கிருய்!"-கோபத்தை அடக்கிக் கொண்டு சசிரா பேசினுள்.

"உனக்கு அக்கரையிருந்தால், அவரை இழுத்துப் பிடித்துக் கொள்வதுதானே! என் பின்னுல் ஏன் சுற்ற விடுகிருய்?"

"பொய் பேசாதே!"

"அவரையே போய் கேட்டுக் கொள், எனக்காகத் தெருவில் எவ்வளவு நேரம் தவம் இருக்கிருரென்று?"

"இருக்காது.......இருக்கவே இருக்காது...நீதான் அவன் பாதையில் போய் விழுகிருய்!"

"எனக்குக் காதலர்கள் வேண்டுமென்ருல், நான் யாரையும் போய் கெஞ்ச வேண்டியதில்லை...அவர்களாக வருவார்கள்! கொலைகாரியின் மகன் எனக்குத் தேவையில்லை" என்ருள் ரோசலியா. இந்தப் பதில் சசிராவின் கோபத்தை மேலும் கிளறிவிடவே, அவள் பாய்ந்து ரோசலியாவின் தலை மயிரைப் பிடித்து உலுக்கினுள். வலி தாங்காமல் அந்தக் கன்னி அலறவே, வழிப்போக்கன் ஒருவன் அவளை விடுவித்தான்.

"நீ என் மகனை விட்டொழிக்காவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்" என்று சசிரா கூச்சலிட்டாள், கைக்குக் கிடைத்த பொருள் தப்பிவிட்டதைப் போல!

"நான் இதற்கெல்லாம் பயந்து விடுவேன் என்ரு நினைத்தாய்?...உன்னுல் முடிந்தால் உன் மகனை உன் வழிக்குத் திருப்பிக் கொள்...அவர் என்னை நேசிக்கிருர் என்று உனக்கேன் தெரியவில்லை?"

கண்களில் நீர் வழிய ரோசலியா பேசினுள். மூன்ருவது மனிதன் அங்கே இருந்ததால் அவர்கள் மேற்கொண்டு ஒன்றும் பேசிக் கொள்ள முடியவில்லை.

சசிராவின் கோபம் கொஞ்சங்கூட அடங்கவில்லை.

ஆனுல் சுரியோவின் நிலையோ

வே று! நடனமாடிவிட்டுப் போனதிலிருந்து ரோசலியாவின் நினைவிலேயே பொழுதைக் கழித்தான். இரவில்கூட சரியாகத் தூங்கவில்லை. மறுநாள் பொழுது கழியும்வரை காத்திருந்து இரவு நேரத்தில் ரோசலியாவின் வீட்டுப் பக்கம் போய், ஜன்னல் வழியாக அவளை அழைத்தான். அவளைப் பார்த்தவுடன் ரோசலியா அழ ஆரம்பித்துவிட்டாள். அதற்குக் காரணம் என்னவென்று அவன் கேட்காமலா இருப்பான்? ஒன்றுக்கு இரண்டாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டு,

''இதற்கு ஏதாவது முடிவு செய்தாலொழிய என்னைப் பார்க்க வரவேண்டாம்!'' என்று முடித்தாள்.

''நான் உன்னைக் காதலிக்கிறேன்!''

''அப்படியென்றால் உங்கள் தாயை அடக்கி வைப்பது தானே?''—அவனை விட்டுவிட எந்த இளம் பெண் சம்மதிப்பாள்?

''அம்மாவை நான் கண்டிக்கிறேன்...நீ கவலைப்படாதே என் கண்ணே!''

அப்போதிருந்து அவர்கள் காதலர்கள், நேரம் இருக்கிறதோ இல்லையோ, குரியோ அவளை வெளியே அழைத்துக்கொண்டு போக வந்துவிடுவான். அவள் வீட்டுக்குப் பின்புறமாக வரும்போது, தன் தாய் அங்குதானே இருக்கிருள்; அவளையும் பார்க்க வேண்டுமே என்று அவன் நினைக்கவே இல்லை! ஞாயிற்றுக்கிழமைதான் ஒய்வு கிடைக்குமென்றவன் இப்போது தினமும் இரவில் ரோசலியாவிடம் வந்தான். தன்னுடைய இந்த

விசித்திரம் - உண்மை!

கைதிகளுக்கு விலங்கிடும் சிறை அதிகாரிகள், தாங்களே விலங்கு மாட்டிக் கொண்டு உலவிய விசித்திரச் சம்பவத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

முன்பு அந்தமான் தீவிலே நடந்திருக்கிறது அந்த அதிசயம்!

ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை அந்தமானுக்கு அனுப்பினுர்களல்லவா இந்திய சர்க்கார், அப்போது அவ்விடத்துப் பூர்வீகக் குடிகள் அதை எதிர்த்தார்கள், அந்நியர்கள் தம்மிடத்தில் குடியேற அவர்கள் விரும்பவில்லை. துப்பாக்கியால் சுட்டுத் தொல்லை விளைவித்துக் கொண்டேயிருந்தார்கள்.

ஆனுல், கைவிலங்கு இடப்பெற்றவர்கள் தம்மிச்சையாக வந்து குடியேறவில்லை என்பதையும் உணர்ந்தார்கள். ஆகவே விலங்கில்லாமல் உலவியவர்களை மாத்திரம் சுட ஆரம்பித்தார்கள். அதைக் கண்ட சிறை அதிகாரிகள், ''எங்கள் பணியை விலங்கு மாட்டிக் கொண்டு செய்கிறோம்'' என்று மேலதிகாரிகளுக்கு எழுதினுர்கள். செயலிலும் காட்டிவிட்டார்கள்!

வருகை தாயாருக்குத் தெரிந்திருக்குமோ என்ற பயத்தில், அவன் அடுத்த இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் தன் தாயாரைப் பார்க்க வரவில்லை.

அந்தப் பைத்தியக்காரி,மகன் வருவான் என்று ஆவலோடு, நெஞ்சில் நிறைந்த பாசத்தோடு காத்திருந்தாள். அவன் வரவில்லை என்று தெரிந்தவுடன் வேதனைதான் மிஞ்சியது. இரண்டு வாரமாக அவன் வராததால் கவலை மேலோங்கியது. அவன் வந்தால் காலில் விழுந்தாவது மன்னிப்பு கேட்டுக் கொள்ள அவள் தயாராக இருந்தாள். அவன் காதலியிடம் தாறுமாறாக நடந்து கொண்ட குற்றத்திற்காக மகன் கோபித்துக் கொண்டால் தாய்தானே பணிந்து போக வேண்டும்? அதற்கு மல்லவா அவன் வழி வகுக்க வில்லை?

* * *

மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை—தைரியத்தை வரவழைத்துக் கொண்டு குரியோ, தாயின் அறைக்கு வந்தான்.

''ஏன் இத்தனை நாட்களாக வரவில்லை?''

''உன் கோபம் அடங்கட்டுமே என்றுதான் காத்திருந்தேன்!''

''வேறு காரணங்கள் இல்லையா?''

''இருந்தது. எனக்கு வேலை இருந்தது''

''இரவில் மட்டும் அவளைச் சந்திக்க வந்து போனாய்...... அப்படித்தானே?''

''நீ ஏன் அவளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டாய்?''

''உனக் கெப்படித் தெரியும் அது?''

''எப்படியோ...அதைப் பற்றி இப்போதென்ன?''

''ஆம்! அவளை நான் அடிக்கப் போனது உண்மைதான்... ஏனெனில் உன்னை என்னிடமிருந்து பிரிக்கப் பார்க்கிறாள். அதனால் தான்!......குரியோ, நன்றாக யோசித்துப் பார்...என் காதலன், உன்னை—என் மகனை—அடித்தான் என்பதற்காகத் தானே அவனைக் கொலை செய்துவிட்டு சிறை தண்டனை அடைந்தேன். உன் நன்மைக்காக மட்டுந்தான் நான் பாடுபடுவேனே தவிர, உனக்கு நான் தீங்கிழைக்கவா முயற்சிப்பேன்? யோசித்துப் பார்....,அவளுக்கு எவ்வளவோ காதலர்கள். அதனால் உன்மீது அவள் மனப்பூர்வமாக ஆசைவைப்பாள் என்று நான் நினைக்கவில்லை... அவளை விட்டுவிடு!''

உணர்ச்சி வசப்பட்டு பேசினாள் சசிரா. மகன் பேசாமல் இருக்கவே மேலே தொடர்ந்தாள் தாய்:

''ஒவ்வொரு இரவும் நீ இங்கு வருகிறாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் என்னை நீ கவனிக்கவில்லை. என்ன கொடுமை? நினைத்தாலே செத்துவிடலாம் போலத் தோன்றுகிறது எனக்கு. இந்த உலகத்தில் நீ ஒருவன்தானே எனக்கு ஆதரவு? நீயும் பாராமுகமாக இருந்துவிட்டால் நான்

உயிரோடு இருக்கவேண்டிய அவசியம் என்ன? சிறையில் நான் இறந்திருந்தால்கூட நன்ருக இருந்திருக்கும்!''

''இதெல்லாம் எனக்குத் தெரியாதா அம்மா? ஒரு விஷயத்தை நீ கவனிக்காமல் பேசிக்கொண்டே போகிருய்! எனக்குக் கல்யாண வயது ஆகிவிட்டதே...இந்த ரோசி இல்லாவிட்டாலும் வேருெருத்தி வந்துதானே ஆகவேண்டும்?''

மகன் என்ன சொன்ஞன்? அதன் கருத்து என்ன? இதைப் பற்றியெல்லாம் சசீரா யோசிக்கவில்லை. மகன் மனதில் வேறு எண்ணம் தோன்றிவிட்டது. தன் அன்புக்கு பங்கு போடும் காலம் வந்துவிட்டது என்ற எண்ணம்தான் அவள் மனதில்! அதிகமாக யோசிக்காமல்,

''மிருகமே! உன்னை நான் வெறுக்கிறேன் ... வெளியே போ!'' என்று அவள் கூச்சலிட்டாள் மகனை நோக்கி. அவன் பேசாமல் இருக்கவே, அவள் அவனைப் பிடித்து வெளியே தள்ளிஞள். ''இதற்காக நீ வருத்தப்படுவாய்!'' என்று அவன் சொன்னது அவள் காதில் விழுந்ததோ இல்லையோ!

அவன் வெளியேறியவுடன் கதவு பலமான சப்தத்தோடு சாத்தப்பட்டது. அதைப் பற்றியெல்லாம் சுரியோ கவலைப்படும் நிலையில் இல்லை. அவ் வீட்டைவிட்டு சாவதானமாக வெளியேறிஞன் அவன். மகன் வெளியே போனபின் சசீரா கூண்டில் அடைபட்ட

வெற்றி!

அக்பருக்கும் பீர்பாலுக்கும் ஒருமுறை போட்டி ஒன்று வந்துவிட்டது. விவாதத்தில் யார் திறமைசாலி—என்பதுதான் பிரச்சினை.

அக்பர், பீர்பாலை தலை குனியச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தன்னைத் தானே தயார் செய்து கொண்டார். எப்படிப் பேசுவது; எந்தெந்த விதங்களில் மடக்குவது—என்றெல்லாம் நீண்ட நேரம் யோசித்தார்.

விவாத நேரமும் வந்தது. அக்பர் பேசத் தொடங்கிவிட்டார். கிண்டலும் கேலியும் கலந்து ஏதேதோ பேசிஞர். பீர்பாலோ வாயைத் திறக்கவேயில்லை.

அக்பரின் முயற்சிகள் விரயமாகிவிட்டன. பொறுப்பாரா அவர்? கடைசியில் மிகவும் கடுமையாக ''இத்தனை நேரமும் ஒரு மூடனேடு விவாதிக்க நேர்ந்திருந்தால் நீர் என்ன செய்திருப்பீர்?'' என்ருர்.

பீர்பாலோ, வெகு அமைதியாக ''மௌனம் சாதித்திருப்பேன்!'' என்ருர்.

அக்பர் துளியும் முணுமுணுக்கவில்லை; போட்டிப் பரிசை அளித்துவிட்டார்.

மிருகத்தைப் போல் அறைக்குள் இங்கு மங்குமாக கோபத்தோடு உலவிக் கொண்டிருந்தாள். அவள் மனதில் ஒரே குழப்பம். மகன் தன்னை விட்டு வெகுதூரம் போய்விட்டான் என்ற நிலை! இந்த நேரத்தில்தானு அந்த ரோசலியா மாடியிலிருந்து 'தட்' 'தட்' என்று இறங்கி வரவேண்டும்? அவள்தான் அந்த வீட்டில் அம்மாதிரி நடக்கக்கூடியவள் என்று சசிராவுக்குத் தெரியும்—கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

மாடிப் படியில் சசிரா நின்ருள். அவள் வந்தாள்.

"என்ன வேண்டும் உனக்கு? வழியை விடு!"-இது ரோசலியா.

"என் மகனேடு நீ என்ன செய்துக் கொண்டிருக்கிருய்?"

"நீ வழி விடுகிருயா, இல்லை நான் சப்தம் போடட்டுமா?"

"அவன் இங்கு ஒவ்வொரு இரவும் வருகிருன் அல்லவா?"

"அம்மா! இந்த கொலைகாரியைப் பாரேன்!" என்று ரோசலியா கூச்சலிட்டாள்.

"நான் கேட்பதற்கு பதில் சொல்!"-சசிரா கர்ஜித்தாள்.

"உண்மைதானே தெரிய வேண்டும்!....கேள்.....அவருக்கும் எனக்கும் திருமணம் நடக்கப்போகிறது......நீ எங்களைப் பிரித்துவிட முடியுமென்று நினைக்கிருய்? முடியாது...அவர் கூட உன்னை வெறுக்கிருர்—நீ சிறைச்சாலையிலிருந்து வராமல் அங்கேயே இருந்திருந்தால்கூட நன்ருக இருந்திருக்கும் என்ருர்" — அவள் பேசிக் கொண்டே போனுள்.

"என் மகனு உன்னிடம் இப்படியெல்லாம் சொன்னுன்?"—வேதனையோடு கேட்டாள் சசிரா.

"ஆம்! உன்னை அவர் கொஞ்சங்கூட நேசிக்கவில்லை-நீதான் உயிரை விடுகிருய். கொலைகாரியின் மகனை நான் மணந்து கொள்ள முன் வந்ததற்காக நீ எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்" என்று கூறிக் கொண்டே ரோசலியா மேலே நடக்க ஆரம்பித்தாள்.

ரோசலியா கிளம்பிவிட்டதை அறிந்த சசிரா, ஒரே எட்டில் அவளைப் பிடித்து தன் பக்கம் இழுத்து, மடியிலிருந்த கத்தியை எடுத்து அவள் கழுத்தருகில் சொருகிவிட்டாள்.

"அம்மா! என்னைக் கொன்றுவிட்டாள் இந்தக் கொலைகாரி!" என்று ரோசலியா கூச்சலிடுவதற்குத்தான் நேரமிருந்தது.

ஆசை தீர கத்திக்கு உணவு கொடுத்துவிட்டு ரோசலியாவை கீழே படிக்கட்டுகளில் உருட்டிவிட்டாள் சசிரா!

அடுத்து நடந்த விஷயங்கள் அதிகமில்லை—போலீஸ்காரர்கள் கொலைகாரியைப் பிடித்துக் கொண்டு போனுர்கள். ரோசலியாவைப் பரிசோதித்த டாக்டர் கையை விரித்து விட்டார்.

அவரிடம் சசிரா கேட்டாள்,

"அவள் இறந்துவிட்டாளா?"

"ஆமாம்!"

"கடவுளுக்கு நன்றி" என் என்ருள் சசிரா. மகனைப் பற்றி அவள் மனம் அப்போது கவலைப்படவில்லை! ❖

யார் அந்தக் குற்றவாளி?

''சீனாக்காரர்களாகிய நாங்கள் காட்டுமிராண்டிகளல்ல! முதலில் விசாரணை நடைபெறும். பிறகுதான் உன் தலை கொய்தெறியப்படும்!''

—1896-ம் ஆண்டு, அக்டோபர் மாதம், ஒரு திங்கட்கிழமை காலை லண்டன் மாநகரத்திலேயுள்ள சீனச் சக்கரவர்த்தியின் தூதுவர் காரியாலயத்தில் கைதியாக இருந்த ஒரு இளம் மாணவனிடம் மேற்கண்ட வாசகங்கள் சொல்லப்பட்டன.

அந்த வாலிபன் சாவதற்கு அஞ்சவில்லை. அவனுக்குத் தெரியும், அராஜகம் நடைபெறும் தன் தாயகமாம் சீன நாட்டிலே தான் செய்வனவெல்லாம் குற்றங்கள் தானென்று! இருந்தும் அவனுடைய நண்பரான டாக்டர் கேண்ட்லி தன்னைக் காணாமல் எவ்வளவு மனம் வருந்துவார் என்பதை நினைக்கும்போது அவனுக்கு என்னவோபோல் இருந்தது.

டாக்டர் கேண்ட்லி முன்பு ஹாங்காங் நகரத்து மருத்துவக் கல்லூரியிலே பேராசிரியராக வேலை பார்த்தவர். அவரிடம் அந்த சீனத்து வாலிபனும் மாணவனாக இருந்தான். இப்போது மேற் படிப்பிற்காக லண்டன் வந்திருக்கிறான்.

டாக்டர் அவனை முன்பே எச்சத்தார். ''தம்பி! நீ சீனாவைத் தாண்டி பல ஆயிரம் மைல்கள் அப்பாலிருந்தாலும், உன் சக்கரவர்த்திக்கு இங்கும் ஒரு தூதுவராலயம் இருக்கிறது என்பதை மறந்துவிடாதே! எனவே ஜாக்ரதையாக இரு!'' —என்று பலமுறை எச்சரித்திருக்கிறார். ஆனால் அவனோ அதற்கு அவ்வளவாக மதிப்பு வைக்கவில்லை.

ஒரு நாள், சனிக்கிழமை காலை அந்த இளைஞன் சாலையோரமாக மெதுவாக நடந்து போய்க்கொண்டிருந்தான். அப்போது ஒரு சீனாக்காரன் அவனெதிரே வந்தான். ''நீ சீனாவில் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவன்?''

''காண்டன்!''

''அடடே; எனக்கும் அந்த மாகாணம்தான்! பரவாயில்லை; நாம் இருவரும் நண்பர்களாகி விட்டோம்!''

—இப்படி இருவரும் பேசிக்

கொண்டே சிறிது தூரம் சென்றனர்.

பிறகு மேலும் இரு சீனக்காரர்கள் எதிரே வந்தனர். அவ்வளவுதான்; அந்த இளைஞனின் கரங்கள் ஒருவனால் பற்றப்பட்டன. இன்னொருவன் அவனுடைய முதுகிலே கை வைத்து ஒரு மூலைக்குத் தள்ளினான்.

இவைகளையெல்லாம் எதிர் பார்த்ததைப்போல அங்கேயிருந்த கட்டடத்தின் கதவு திறந்தது. வாலிபன் கதவுகளுக்கப்பால் தள்ளப்பட்டான். பின் கதவுகள் மூடப்பட்டன. இதற்குப் பல மணி நேரங்கள் கழித்துத்தான் தெரியவந்தது அவனுக்கு, தான் சீனச் சக்கரவர்த்தியின் தூதுவர் காரியாலயத்தில் உள்ள தனி அறையில் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறோம் என்பது!

சிறிது நேரம் கழித்து நரைத்த தலையுடைய கிழவர் ஒருவர் வந்தார்.

"அன்புள்ள யுவனே! நீ சீனுவில் படித்துக் கொண்டிருக்கும் போது அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்று மனு ஒன்று எழுதி சக்கரவர்த்தியிடம் அனுப்பி வைத்தாயல்லவா? அதன் விளைவுதான் இது!" என்று கூறி விட்டு அவர் போய் விட்டார்.

அவர் போனதும் அவன் இருந்த அறைக்கு மேலும் ஒரு பலமான பூட்டு மாட்டப்பட்டது. இருபத்து நான்கு மணி நேரமும் கண்ணும் கருத்துமாய் இருக்கும்படி இரு காவலாளிகள் நியமிக்கப்பட்டனர்.

மறுநாள் பொழுது விடிந்ததும் இன்னொருவர் வந்தார்.

"தம்பி! இன்னும் சில நாட்களில் லண்டன் துறைமுகத்திலிருந்து சீனுவுக்குக் கப்பல் புறப்படுகிறது. அதில் நீ சீனுவுக்குக் கொண்டு போகப்பட்டு அங்கே தண்டனையை அனுபவிப்பாய்! கப்பலுக்குப் போனதும் உன் கைகளில் விலங்கு மாட்டப்படும்!" —இதைக் கூறி விட்டு அவரும் போய்விட்டார்.

வாலிபனுக்கு எதுவுமே புரியவில்லை. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். வீட்டுக் கூரைகளும் மூடுபனியும்தான் தெரிந்தது! அங்குள்ள காகிதங்களையெல்லாம் எடுத்து, 'என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று எழுதி ஜன்னல் வழியே வெளியே தூக்கி யெறிந்தான். ஒரு பயனுமில்லை!

கடைசியில் தப்பிச் செல்ல அவனுக்கு ஒரே வழிதான் புலப்பட்டது! ஒரு வெள்ளைக்கார வேலைக்காரன் உணவு கொடுக்க அவன் அறைக்கு வந்து போவது வழக்கம். எட்வர்ட் கோல் என்பது அவன் பெயர்.

அந்த வாலிபன் அவனைப் பார்த்து, "நான் ஒரு சீனத்து அகதி. இங்கிலாந்தில் இருப்பதைப் போல நல்ல அரசாங்கமும், ஜனநாயக உரிமைகளும் வேண்டுமென்று கேட்கிற அர

சியல் கட்சியிலே நானும் ஒருவன். அதற்காக என்னை இப்படி கைது செய்து வைத்திருக்கிறார்கள். என் உயிர் உன் கையில் இருக்கிறது. நீ யாராவது போலீஸ் அதிகாரியிடம் முறையிட்டால் நான் தப்பித்து விடுவேன். செய்வாயா?'' என்றெல்லாம் கெஞ்சினான்.

அவனோ பதில் பேசாது நகர்ந்து விட்டான்.

மறுமுறை அவன் ஒரு கூடையில் நிலக்கரி கொண்டு வந்து அறையில் வைத்து விட்டு, ஏதோ விரலால் சுட்டிக் காட்டி விட்டுப் போய் விட்டான்.

வாலிபன் கூடையை ஆராய்ந்தான். அதில் ஒரு கடிதம் இருந்தது. ''உன் நண்பர்கள் ஒருவருடைய விலாசத்தைக் கொடுத்தால் நான் அவருக்குக் கடிதம் கொண்டு செல்கிறேன்!'' என்று அதில் எழுதியிருந்தது.

மறுநாள் ஒரு விசிட்டிங் கார்டில், உதவி வேண்டுமென்று எழுதி அதை கோவிடம் கொடுத்து, டாக்டர் கேண்ட்லிக்கு அனுப்பினான்.

அதைக் கண்ட டாக்டர் திகிலடைந்தார். செவ்வாய்க்கிழமை கப்பல் புறப்படுவதாக கோவ் அவரிடம் சொல்லியிருந்தான். அன்றைய தினமோ ஞாயிற்றுக்கிழமை! இன்னும் 48 மணி நேரம்தான் மீதமிருக்கிறது, அந்த வாலிபனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு!

டாக்டர் உடனே இங்கிலாந்தின் வெளிநாட்டு இலாக்கா காரியாலயத்துக்குச் சென்று விஷயத்தைச் சொல்லி உதவி கேட்டார். ஆனால் அவர்களோ ஞாயிற்றுக்கிழமை ஒரு வேலையையும் கவனிக்க இயலாது-என்று கூறி விட்டார்கள்.

ஸ்காட்லண்ட் யார்ட் என்று பெயர்பெற்ற துப்பறியும் இலாக்காவிடம் முறையிட்டார். அவர்களோ டாக்டரை ஒரு பைத்தியம் என்று நினைத்து, அவரைத் திருப்பி யனுப்பி விட்டார்கள்!

டாக்டருடைய முயற்சிகள் யாவும் தோற்றன! மறுநாள் அவர் தனிப்பட்ட துப்பறியும் நபர்களை சந்தித்து சீனத்துத் தூதுவர் காரியாலயத்திலிருந்து அந்த வாலிபன் திருட்டுத்தனமாகத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறானா?- என்பதை கண்டு பிடிப்பதற்கு நியமித்தார்.

மறுபடியும் இங்கிலாந்தின்



வெளி நாட்டு இலாக்காவிற்குச் சென்று, கஷ்டப்பட்டு மேலதிகாரிகளைச் சந்தித்து வாலிபன் எழுதியனுப்பிய சீட்டையே காட்டினார்.

அந்த ஆதாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி ஒரு மாபெரும் பேரரசின் தூதுவரைக் கேட்க முடியும்? அவர்களும் மௌனம் சாதித்துவிட்டார்கள்.

அக்டோபர் 22-ம் தேதியன்று, டாக்டர், நீதி மன்றத்தில் வாலிபனை உடனே விடுவிக்க வேண்டி சீனத்துத் தூதுவருக்கு ஆணையிடச் சொல்லி 'ஹேபியஸ் கார்பஸ்' மனுவொன்றைத் தாக்கல் செய்தார்! நீதி மன்றமும் அவருடைய ஆதாரமற்ற வழக்கை ஏற்றுக் கொள்ள வில்லை!

அதற்குள் அந்த வழக்கு லண்டன் நகரத்து பத்திரிகைகளின் கவனத்தையெல்லாம் கவர்ந்தது! "தி குளோப்" என்னும் ஏடு, டாக்டர் கூறிய முழுக் கதையையும் வெளியிட்டது; அதுவே அந்த வாலிபனின் வாழ்வில் ஒரு மாபெரும் திருப்பு மையமாக அமைந்தது!

பத்திரிகை நிருபர்கள், உடன் 'கைதியை விடுவிக்காவிட்டால் ஆயிரக்கணக்கான லண்டன் நகரவாசிகள் தூதுவராலயத்தில் புகுந்து அவனை விடுவிக்க வேண்டிய நிலைமை பிறக்கும்' - என்று காரசாரமாக எழுதித் தள்ளினார்கள்.

நிலைமை நெருக்கடியான கட்டத்தை யடைந்ததும் அப்போது வெளி நாட்டுக் காரிய தரிசியாயிருந்த சாலிஸ்பரி பிரபு உடனே கைதியை விடுவிக்க வேண்டுமென்று சீனத் தூதுவருக்குக் கடிதம் எழுதினார்.

அதைக் கண்டதும் தூதுவர் கதிகலங்கிவிட்டார். கடிதம் வந்த இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அந்த வாலிபன் விடுவிக்கப்பட்டான்.

விடுதலை அடைந்ததும் அவன் கேண்ட்லியின் வீட்டிற்கு வந்து, தனக்காக வாதாடிய பத்திரிகைகள் அனைத்திற்கும் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினான்.

அப்போது எந்தப் பத்திரிகாசிரியருக்கும் தெரியாது, அந்த நன்றிக் கடிதத்தில் கையெழுத்திட்டிருந்த நபர் பிறகு சீனக் குடியரசின் முதல் ஜனாதிபதியாக வருவாரென்பது!

அந்தக் கையெழுத்து என்னென்ன எழுத்துக்களைக் கொண்டிருந்தது தெரியுமா? சன்யாட்சேன்—என்பதுதான்!

●

செய்திகள், புத்தகங்கள்; அது, இது—எதையாவது படித்துக் கொண்டே இருங்கள். இப்படிச் செய்வது உங்கள் ஆர்வத்தை அதிகப்படுத்துவது மட்டுமல்ல; வயோதிகப் பருவத்தை நீங்கள் உணராமலும் தடுக்கிறது.

— லியான் பேல்ப்ஸ்.

சட்டம் ஒரு இருட்டறை

இரா. இளம்வழுதி, எம்.ஏ.பி.எல்.

முன்னுரை: —

[நடத்தை தவறிய மனைவியை நடுத்தெருவிலே அவளுடைய நாயகன் வெட்டிக் கொலை செய்ததாக வழக்கு, மிராசுதார் வீட்டில் யாரோ புகுந்து இரும்புப் பெட்டியை உடைத்துக் கொள்ளை யடித்த வழக்கு, கையைப் பிடித்து இழுத்த வழக்கு, காதணியை அறுத்த வழக்கு, பருவப் பெண்ணைப் பக்கத்து ஊருக்குக் கூட்டிச் சென்ற வழக்கு, இரவு ராணிகளின் சோக வரலாற்று வழக்கு—என்று தினசரி ஏடுகளில், பல கோணங்களில் மனித சமுதாயத்தின் பலவீனங்கள் பிரபலப்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். ஆனால் சில பல இடங்களில் உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விடுகின்றனர். அதற்கு ஆதாரமாக சூழ் நிலைகள் உருவாக்கப் படுகின்றன. சூது மதியினரும் சூழ்ச்சிக்காரரும் தப்பித்துக் கொள்ள சந்தர்ப்பமும் சாட்சியமளிக்கிறது. அநியாயமாக நிரபராதி தண்டிக்கப் பட்டால் அதை விடக் கொடுமை வேறெதுவும் இல்லை. தண்டிக்கப் பட்ட நிரபராதி தண்டனை அனுபவிக்கும் ஒவ்வொரு மணித் துளியும் வயிறு எரிந்து வேதனைப்படுவான். அதைப் போன்ற நிலையை உண்டாக்க உலகில் வாழும் எந்த நாகரிக மக்களும் விரும்பார். நீதி தவறா அற மன்றமும் இலக்காகாது. ஆகையால்தான் பிரிட்டிஷ் சட்ட அமைப்பிலே கூட ''ஆயிரம் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டாலும் பரவாயில்லை; ஒரு நிரபராதியை மட்டும் தண்டித்துவிடக் கூடாது'' என்ற கருத்து அருமையான தத்துவமாக மிளிர்கிறது. ஏனென்றால், வாக்கு வன்மை கொண்டவர்களால் உண்மையைப் பொய்யாக்க முடியும். பொய்யைப் பூசி மெழுக முடியும். நிரபராதியும் குற்றவாளி போலத் தெரியும். சட்டமும் எந்த இழுப்புக்கும் வளைந்து கொடுக்கும், சிறந்த வழக்கறிஞர் வாதிட்டால்! ஆனால் வழக்கறிஞர்கள் இனமாகவோ அன்பளிப்பாகவோ தங்கள் தொழிலைச் செய்ய முடியாதல்லவா? ஆகையால் வழக்கறிஞர்கள் என்றால் ஏராளமான பணம் தேவையல்லவா? எனவேதான் உண்மையின் படப்பிடிப்பான அறிஞர் அண்ணாவின் மணிவாசகங்கள் நமது கவனத்துக்கு வருகின்றன. ''சட்டம் ஒரு இருட்டறை: வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; ஏழைகளால் அந்தப்பிரகாசமான விளக்கை எளிதில் பெறமுடியாது'' என்ற அற்புதமான அந்தக் கருத்துக்

கோர்வைக்கு எடுத்துக் காட்டாக ஒரு கொலை வழக்கின் விவரம் தருகிறேன்.]

இருங்கல் பாளையம் ஒரு சிற்றூர். ஆற்றுப் பாசன வசதியால் செழிப்பில் கொழிக்கும் சிறந்த கிராமம். ஆதி சுந்தரம் அந்த ஊர்ப் பெருந்தனக்காரர். பாலசுந்தரம் அவரது இளவல். அண்ணனுக்கும் தம்பிக்கும், தம்பியின் திருமண ஏற்பாட்டில் தகராறு. கடைசியில், தான் காதலித்த அபிராமியையே மணந்து தம்பி வெற்றி பெற்ருன். திருமணத்திற்குப் பிறகு குடும்பத்தில் பெரும் கொந்தளிப்பு. தம்பியை வீட்டைவிட்டு விரட்டினுர் அண்ணன். அவனுக்கு மூளைக்கோளாறு என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, சொத்தில் பாகமும் கொடுக்க மறுத்தார். அந்த அருமையான அண்ணனுக்குத் தங்கச் சிலைபோன்ற மகள் ஒருத்தி. பெயரும் தங்கம்தான். கணவன் வீட்டில் வாழாமல் தாய் வீட்டிலேயே வாழா வெட்டியாக வாழ்ந்து வந்தாள். ஊரிலோ, அவளுடைய நடத்தைபற்றி நல்ல அபிப்ராயம் இல்லை. தங்கத்தின் கணவன் வேறுயாருமில்லை; அபிராமியின் அண்ணன்தான். ஆகையால்தான் அபிராமிக்கும் தங்கத்துக்கும் எப்போதும் போட்டி; பூசல். குடும்பத்தில் கலகத்திற்குப் பூரண அதிகாரி தங்கம்தான். ஆதிசுந்தரத்தின் சிற்றப்பா சித்தலிங்கம் அந்த ஊர் மணியம். எப்போதும் பாலசுந்தரத்துக்குத்தான் பரிந்து பேசுவார். பாலசுந்தரத்தின் திருமணத்தையும் அவர்தான் முன்னின்று நடத்தி வைத்தவர். பாலசுந்தரத்திற்கு சொத்தில்லை என்று சொல்லப்பட்டதும், பாகப் பிரிவினைக்குக் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. பூர்வீக சொத்து—ஆகையால் பாகம் வேண்டுமென்ருன் தம்பி; சுயமாக சம்பாதித்த சொத்து—ஆகையால் அரைக்காசும் தரமாட்டேன் என்ருர் அண்ணன். அதிக விரோதம் சமாதானத்துக்கு வழி என்பது போல அண்ணன் தம்பி விவகாரத்தில் ஊர்ப் பஞ்சாயத்தார்கள் தலையிட்டு நல்ல முடிவுக்கு வழி கோலினுர்கள். சொத்தில் பாகம் கொடுப்பதாகவும், ஆனல் தான் உயிரோடு இருக்கும்வரை தனிக் குடித்தனம் தம்பி நடத்தக்கூடாது என்றும் அண்ணன் அறுதியிட்டுக் கூறினுர். வாழா வெட்டியான தங்கம், தன் கணவன் வீட்டுக்குப் போக வேண்டும் என்று தம்பி கூறினுன். வழக்கு வாபஸ் பெறப்பட்டது. தங்கம் தலையிலடித்துக் கொண்டு கணவன் ஊருக்குச் சென்ருள். அபிராமியும் பாலசுந்தரமும் அரண்மனைபோன்ற பரம்பரை வீட்டின் முன்கட்டிலும், ஆதிசுந்தரமும் அவர் மனைவியும் பின்கட்டிலும் வசிக்க ஆரம்பித்தார்கள். அபிராமி நல்ல திறமைசாலி. கணவனுல் சமாளிக்க முடியாத விவகாரங்களைக்கூடத் திறம்படச் சமாளித்தாள். பாலசுந்தரம் கோழை; உறுதியான மனம் இல்லாதவன். இருந்தாலும்,

அண்ணன் தம்பி குடும்பம் ஒன்ருகவே ஒரு மாத காலம் நன்ருக நடந்தது. ஆனல், கணவன் வீட்டுக்குச் சென்ற தங்கம், தனக்குத்தீராத வயிற்றுவலி வந்து விட்ட தென்றும், அதைத் தீர்த்துப் போகத் தாய் வீட்டுக்கே வந்து விட்டதாகவும் சொல்லி, குடும்ப அமைதியின் உள் புகுந்தாள். அன்றிலிருந்து பிடித்தது அனர்த்தம். ஆதிசுந்தரமும் அவர் மகளைக் கண்டிக்கவில்லை; பாலசுந்தரமும் வெளியில் சொல்ல முடியாமல் திணறினன். தங்கம் வந்த மூன்ரும் நாள் இரவு, தன் கணவனுடன் தூங்கிய அபிராமி படுக்கையிலேயே கோரமாகக் கொலை செய்யப் பட்டுக் கிடந்தாள். கருங்கல் பாளையம் கிராமமே அல்லோல கல்லோலப்பட்டது. விடியற்காலை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் கொலை நடந்த இடத்திற்கு விரைந்தார். விசாரணை துவங்கியது.

...கொலைக்கு இலக்கான குணவதி அபிராமி...

வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் வாக்குமூலம் தருகிருர்கள்.

ஆதிசுந்தரம் :

அபிராமி கொலை செய்யப்பட்டது எங்களைக் கண் கலங்க வைத்து விட்டது. குடும்பத்துக்கேற்ற குணவதி. எவ்வளவோ தகராறுகளுக்குப் பிறகு எங்கள் குடும்பம் ஒற்றுமையானது. அபிராமியின்மீது எங்களுக்கெல்லாம் அளவு கடந்த அன்பு. என் மகள் தங்கம் மட்டும் குடும்பத் தகராறுகளுக்கெல்லாம் அபிராமிதான் காரணமென்று சொல்வது வழக்கம். நாங்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. பாவிப் பயல் பாலசுந்தரம் அழகு மனைவியை இப்படி கோரக் கொலை செய்து விட்டானே! என்ன அக்ரமம்!

இரவு நடுநிசி இருக்கும். ''ஐயோ அம்மா!'' என்ற அலறல் முன் கட்டில் கேட்டது. அங்கே அபிராமியும் பாலசுந்தரமும் படுத்திருந்தனர். ஓடினேன். ஓடினேனு, என் உடம்பு அங்கே போய் விழுந்ததுதான் தெரியும். என்ன சொல்வேன்! அபிராமி அழகுச் சிலைபோல் கட்டிலில் கிடத்தப் பட்டிருந்தாள்; போர்வை ஒன்று அவளை மூடிக்கிடந்தது; தலையில் வெட்டுக் காயம்; கழுத்தோரத்திலும் ரத்தம் குபுகுபுவெனப் பெருகியது. அபிராமி பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள். பாலசுந்தரம் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அவன் பக்கத்தில் ரத்தம்சொட்டும் அரிவாள் ஒன்று கிடந்தது.

"மனைவியைக் கொன்றானே மாபாவி!" என்கிறார் அண்ணன்....

இடையில் அவன் கட்டியிருந்த துணியில் இரத்தத் துளிகள். எங்கள் அத்தை பேச்சியம்மா இந்த அலங்கோலத்தை நேரில் பார்த்து பதறிக் கொண்டிருந்தார்கள். "கொன்று விட்டாயேடா கொலைகாரா!" என்று கூவினேன். அந்தப் பாதகன்—என் தம்பிதான்— வாயைத் திறந்து அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் "என் தலைவிதிதான்" என்றான். வெளியில் படுத்திருந்த வேலைக்காரர்களும் உள்ளே ஓடிவந்தார்கள். என்ன செய்வேன்! அபிராமியைக் காதலித்துத்தான் கல்யாணம் செய்து கொண்டான். நேற்றுகூட அவர்கள் இருந்த மகிழ்ச்சியைப் பார்த்து, வயதேறிய எனக்குக்கூடப் பொறாமையாக இருந்தது. அதிகம் வளர்த்துவானேன்! உண்மை விவரங்களைக் கூறுவதில் தவறில்லை யல்லவா? பாலசுந்தரத்துக்குப் பால்ய முதலே நல்ல புத்தி இல்லை. சித்தப் பிரமை என்றார்கள்; மூளைக்கோளாறு என்றும் சொன்னார்கள். யாரைப் பார்த்தாலும் ஏசுவான்; கல்லால் அடிப்பான்; கத்துவான்; பல்லைக் கடிப்பான்; அதிக அன்புள்ளவர்களைத் தான் அதிகம் தொல்லைக்கு ஆளாக்குவான். எங்கள் அக்கா மகனைக்கூட கழுத்தை நெறித்துக் கொல்வதற்கு முயற்சித்தான். கடைசியில் அவனுடைய தொல்லை தாங்காமல் டாக்டரிடமும் சிகிச்சை செய்து பார்த்தோம். இந்தமாதிரி குணபேதம் அவனுக்கு விட்டுவிட்டுவரும். ஆனால் மனைவியையே கொல்லும் அளவுக்கு அது கோர சொரூபம் எடுக்கும் என்று யாருமே எண்ணியதில்லை. எங்களுக்குள் இப்போதுதான் ஒற்றுமையானோம். அதற்குள் இந்தப் பேரிடியா?-என்று ஒரேயடியாக ஒப்பாரியே வைக்க ஆரம்பித்துவிட்டார்.

பேச்சியம்மா:

என் அண்ணன் மக்கள்தான் ஆதிசுந்தரமும் பாலசுந்தரமும். நான் பெரியபிள்ளையாண்டான் ஆதிசுந்தரம் ஆதரவில்தான் இருந்துவருகிறேன். நடு இரவு இருக்கும்; முன் கட்டில் பயங்கரமாக சத்தம் ஒலித்தது. நடையில் படுத்திருந்த நான் எழுந்து ஓடினேன். பாலசுந்தரம் — பழிகாரன் — ரத்தம் சொட்டுகின்ற அரிவாளைக் கையில் வைத்துக்கொண்டு, கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். அய்யோ பாவம்; அபிராமி பிணமாகக் கட்டிலில் கிடந்தாள். தலையில்

அரிவாள் வெட்டுக் காயம். ரத்தம் ஆறாக ஓடியது. இந்த அவலத்தைப் பார்த்துக் கூச்சல் போட்டேன். ஆதிசுந்தரமும் மற்றவர்களும் ஓடிவந்தார்கள். அவர்கள் வருவதற்குள் கொலைகாரன் அரிவாளைக் கீழே போட்டுவிட்டான். அபிராமியின் மேலாடை விலகியிருந்ததை நான் சரி செய்தேன். வேறு எந்தவிதமான அசைவும் அங்கே நான் ஏற்படுத்தவில்லை. வீட்டில் தங்கத்துக்கும் அபிராமிக்கும் எப்போதும் தகராறுதான். எவ்வளவுதான் தங்கம் தவறு செய்தாலும், அவள் அப்பாவும் அம்மாவும் அவள் கட்சிதான்.

தங்கம் :

அபிராமி என் கணவனின் தங்கைதான்; ஆனால் காளியாத்தா என்றால் அவளுக்குத் தகும். அவ்வளவு சண்டைக்காரி! இப்போது இறந்து கிடக்கிறாள். ஆகையால் அவளுடைய குணாதிசயங்களை விட்டுவிட்டு கொலை பற்றிய செய்தியைத் தெரிந்தவரை சொல்கிறேன். விடியற் காலம்தான் எனக்குக் கொலைபற்றித் தெரியும். இரவெல்லாம் பாழும் வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்தேன். என்னதான் இருந்தாலும் எங்கள் சிற்றப்பா நல்லவர்தான். பாகப் பிரிவினை வழக்கும் குடும்பத்தில் கோளாறும் அவள் தூண்டுதலால்தான் நடந்தது. சிற்றப்பா அப்பாவி; அபிராமி ஆட்டி வைத்த கைப்பொம்மை. அந்த வகையில் அவள் அதிர்ஷ்டக்காரிதான். எனக்கும் ஒன்று வாய்த்திருக்கிறதே! மன்னிக்கவும். சிற்றப்பாவுக்கு அடிக்கடி சித்தப்பிரமை வருவதுண்டு. இரவும், அவருக்குச் சித்தப்பிரமை உச்சத்திற்கு வந்துவிட்டது போலிருக்கிறது. அதன் விளைவுதான், இந்தப் படுகொலை என்று எண்ண இடமிருக்கிறது. சித்தலிங்கம் சிற்றப்பாவுக்கு வேண்டியவர். ஆகையால் உள் விவரம் அவருக்குத் தெரிந்து இருக்க வேண்டும்.

சித்தலிங்கம் :

நான் இந்த ஊர் மணியம். இன்று விடியற்காலை அபிராமி கொலை பற்றிய தகவல் எனக்குக் கிடைத்தது. பதறிப் போனேன். ஏனெனில் குத்து, வெட்டு என்ற அளவுக்கு விரோதம் வளர்ந்திருந்த குடும்பங்களுக்குள் சமாதானம் ஏற்படுத்தியவர்களில் நானும் ஒரு

..."பழி சுமத்தும் எத்தர்கள்தான் படுகொலையின் கர்த்தாக்கள்!" என்கிறான் தம்பி

வன். உடனே கொலை நடந்த இடத்துக்கு ஓடினேன். பால சுந்தரமே அபிராமியைக் கொன்று விட்டான் என்று ஆதிசுந்தரம் சொன்னதும், ஆதிசுந்தரத்தின் மீதே எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஏனெனில் அபிராமியை ஒழித்து, அந்தக் குற்றத்தைக் கருவியாக வைத்து பாலசுந்தரத்தையும் ஒழித்து விட ஆதிசுந்தரம் சூழ்ச்சி செய்கிறாரோ என்று தான் எண்ணினேன். ஆனால், தம்பி மீது அண்ணன் குற்றம் சாட்டியபோது, மவுனமாக இருந்ததால் எங்களுக்கெல்லாம் வியப்பாகவே இருந்தது. மேலும் அவன் அணிந்திருந்த ஆடையிலும் ரத்தக் கறை. அவைகளைப் பார்த்ததும் எனக்கு ஒரே குழப்பம். இந்த நிலையில் ஆதிசுந்தரம் தன் தம்பியைப் பார்த்து "நடந்தது நடந்துவிட்டது; அபிராமியை அடக்கம் செய்வதற்கு வேண்டிய காரியங்களைப்பார்க்கலாம். நம்மவர்களைத் தவிர வெளி மனிதர்கள் யாருக்கும் இந்த விவரம் தெரியாது" என்று வற்புறுத்தி இரண்டொருமுறை கூறினர். ஆனல் பாலசுந்தரமோ எதற்கும் எந்த விதமான பதிலும் கூறுமல், கிலி பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தான். அவனுக்குச் சித்தப் பிரமை அடிக்கடி ஏற்படும் என்பதை என்னுல் நம்பமுடியவில்லை. ஏனெனில், சிறுவயதில் ஒரு மாதிரியாக இருந்தாலும், அவனுடைய திருமணத்துக்குப் பிறகு நல்ல மாதிரியாகவே நடந்து வந்தான். எனக்கு செய்தி வந்தபோது, அபிராமியின் நெருங்கிய உறவினர்களுக்கும் தகவல் தன் ஆள் மூலம் அனுப்பிவிட்டதாக ஆதிசுந்தரம் தெரிவித்தார். எனக்கும் ஆள் அனுப்பியதாகச் சொன்னர். அது தவறு; எனக்கு அவருடைய ஆள் தகவல் கொடுக்கவில்லை; வழியில் யாரோ இரண்டொருவர் பேசிச் சென்றதால் நான் வந்து விட்டேன்.

சாட்சிகளில் ஒருத்தி
பேச்சியம்மா...

வேலைக்கார காத்தான் :

நானும் முத்தனும் இன்னொரு ஆளும், பெரிய ஐயாவின் ஆணைப்படி வீட்டின் வெளியில் படுத்திருந்தோம். புது ஆளைப் பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாது. ஆனல் பெரிய ஐயா அவனையும் படுக்கச் சொல்லி யிருந்தார். நடு நிசி இருக்கும். உள்ளே ஒரே அலறலாகக் கேட்டது. பெரிய ஐயா

கதவைத் திறந்து கொண்டு பெருங் கூச்சல் போட்டார். நாங்கள் உள்ளே ஓடினோம். தங்கம்மாளும் மற்றவர்களும் அங்கே இருந்தார்கள். சின்னம்மா வெட்டுப்பட்டுக் கட்டிலில் கிடந்தார்கள். சின்ன ஐயா பக்கத்தில் நின்று திருதிருவென விழித்துக்கொண்டிருந்தார்கள், ரத்தத்தைப் பார்க்கவே எனக்கு பயமாக இருந்தது. அரிவாள் வேறு அங்கு மின்னிக் கொண்டு கிடந்தது. "சவத்தை உடனே அடக்கம் செய்து விடலாமா?" என்று பெரிய ஐயா கேட்டார். அப்போதும் பாலு ஐயா வாயைத் திறக்கவில்லை. என்னையும் மற்ற ஆட்களையும் சின்னம்மாவின் உறவின் முறையாருக்கு சேதி சொல்லிவர பெரிய ஐயா அனுப்பிவிட்டார்.

மனோதத்துவ நிபுணர்
டாக்டர் மனோகர் :

சிறு வயதில் மூளைக்கோளாறு இருந்து, இடை இடையே அது தன் குணத்தைக் காட்டுமேயானால், விளைவு பேராபத்தாகும். பைத்திய முதிர்ச்சி திடீரென ஏற்படும். அதனால்கொலைகள் கூட நிகழலாம். அதற்கு எந்தவிதமான காரணமும் தேவையில்லை. பால்யத்தில் எல்லோரையும் ஏசி, பேசி, கல்லால் அடித்து, வேண்டியவர்களைக் கழுத்தை நெறித்து, மண்ணை வாரி இறைத்து, சில்லரை சேஷ்டைகளையும் செய்திருந்தால் அதே குணங்கள் பின்னாலும் தலை காட்டலாம். அப்படிப்பட்ட குணங்கள் பாலசுந்தரத்துக்கு இருந்திருக்குமேயானால், முகாந்திரமில்லாத கொலையையும் அவர் செய்யலாம். அவரால் செய்யப்படும் எந்தக் காரியத்துக்கும் காரணம் தேவையில்லை. ஆனால், கொல்லப்பட்ட அபிராமி உடல்மீது காணப்படும் அவ்வளவு வெட்டுக் காயங்களையும், எந்தவிதமான தகராறு இல்லாமல், அதன் அடையாளங்களையும் படுக்கையின் மீதோ, வெட்டின ஆள் மீதோ ஏற்படுத்தாமல், கொலை நடந்திருக்குமா என்பதும் ஐயப்பாட்டுக்குரிய காரியமாகும். அதாவது கொலையை ஒரே ஒரு ஆள் தனியாகச்செய்திருக்க முடியுமா என்பதும் ஆராய்ச்சிக்குரிய பொருளாகும்.

புகுந்த இடத்தை புழுதிமேடு எனக் கருதுகிறாள் தங்கம்....

பாலசுந்தரம் :

கொல்லப்பட்ட அபிராமி என் அழகு மனைவி. காதலித்துத் தான் கல்யாணம் செய்து கொண்டேன். என் அண்ணன் எதிர்த்தார், தன் மகள் பேச்

சைக் கேட்டுக் கொண்டு. நான் அண்ணனையே எதிர்த்தேன். குடும்பம் பிளவு பட்டது. பேச்சியம்மா—எங்கள் அத்தை-அண்ணனுடனே வசித்தார். பாகப் பிரிவினை வழக்கு நடந்தது. சமாதானத்துக்குப் பிறகு நானும் அபிராமியும் பூர்வீக வீட்டிலேயே அண்ணனுடன் ஒன்ருகவே குடித்தனம் நடத்தினோம். எனக்கு ஞாபக மறதி அதிகம்; பயமும் உண்டு. ஆனல் அபிராமியே எல்லாவற்றிற்கும் ஈடு கொடுத்து வந்தாள். நானும் என் மனைவியும் ஒருமித்து இன்பமாக வாழ்ந்து வந்தோம். ஆனல் தளுக்குக்காரி தங்கம் தகராறு வளர்க்கவே கணவன் வீட்டிலிருந்து திரும்பி வந்தாள். அண்ணன் அவளைக் கண்டிக்கவில்லை; நானும் அதைப்பற்றி கவனிக்கவில்லை.

நேற்று இரவு நடுநிசி இருக்கும். என் அண்ணன், அவர் மகள் தங்கம், சில ஆட்கள் எல்லோரும் அபிராமியைக் கொலை செய்ய வந்தார்கள். நான் கூச்சல் போட்டேன். உடனே என்னை அங்கேயே கட்டிப்போட்டு விட்டு, அபிராமியைத் தோட்டத்துப் பக்கம் தூக்கிக் கொண்டு போனர்கள். அங்கேயே அவளைக் கொலை செய்து, பிறகு எங்கள் கட்டிலில் கொண்டு வந்து கிடத்தி விட்டார்கள். அரிவாளை என் பக்கத்திலே கொண்டு வந்து போட்டு விட்டு. கட்டுகளை அவிழ்த்து என்னை விட்டார்கள். எங்கள் அத்தையும் அப்போது அங்கே இருந்தார்கள்.

விடியற்காலை சிலர் எங்கள் வீட்டில் கூடினர்கள். என் அண்ணன், மனதை இரும்பாக்கிக் கொண்டு என் மீது கொலைக் குற்றம் சாட்டினர். "எல்லாம் என் தலை விதி" என்றுதான் அப்போது சொன்னேன். பூரா விவரங்களையும் அப்போது சொல்லவு மில்லை; அண்ணன் மீது குற்றம் சாட்டவுமில்லை. ஏனெனில் எனக்கு அப்போது மிகுந்த மனக் குழப்பமா யிருந்தது. நான் கட்டியிருந்த துணியில் எப்படி ரத்தக்கறை ஏற்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. அபிராமியை உடனடியாக அடக்கம் செய்துவிட அண்ணன் அவசரப்பட்டார். அபிராமியை நான் கொல்ல வேண்டிய அவசியமென்ன? அண்ணன் கொலை செய்து என்மீது அந்தக் குற்றத்தைச் சுமத்தினல், அவருக்கு ஏராள லாபம்! இந்த விவரமான வாக்கு மூலத்தை இப்போதுதான் என்னல் கொடுக்க முடிந்தது.

இன்ஸ்பெக்டர் :

ஏறக்குறைய இந்தக் கொலை வழக்கில், எல்லா சாட்சிகளையும் விசாரித்து. பாலசுந்தரத்தைக் கைது செய்து அவனையும் விசாரித்தேன். இந்த வழக்கு விசித்திரமானது. தம்பிமீது அண்ணனும் சாட்சிகளும் குற்றம் சொல்லுகிறர்கள். அண்ணன் மீது தம்பி சொல்லுகிருன். அவனுக்கு அனுசரணையாகப் பேசும் சாட்சியங்களில்லை. ஒரு சில சூழ் நிலைகளைத்தவிர. பாலசுந்தரம் பொதுவாக ஒரு

பெரும் அசடு. எதையும் பகுத்தறிந்து சொல்லத் தெரியவில்லை. பேச்சு படு முட்டாள்தனமாக இருக்கிறது. அவன் கொடுத்த வாக்கு மூலத்தை ஒழுங்காக எழுதவே மிகவும் கடினமாக இருந்தது. சிறுபிள்ளைத்தனமாக நடக்கிறான். பால்யத்திலேயே மூளைக் கோளாறு என்கிறார்கள்; அந்த வாசனை இன்னும் வீசிக் கொண்டே இருக்கிறது. அண்ணன் தம்பிமீது குற்றம் சாட்டியபோது 'என் தலைவிதி' என்றுதான் தம்பி சொன்னார். ஆனால் அண்ணன்மீது தம்பி குற்றம் சுமத்தியது நான் அந்த இடத்திற்குச் சென்று வெகு நாழிகைக்குப் பிறகே; அதுவும் துருவித் துருவிக் கேட்ட பிறகே பாலசுந்தரம் கட்டியிருந்த ரத்தக் கறை படிந்த துணியையும், கொலை செய்த ரத்தக் கறையுள்ள அரிவாளையும், தலையணை, மெத்தையையும் -அவைகளிலும் ரத்தம் இருந்தது —கைப்பற்றிக் கொண்டேன். கட்டிலுக்குக் கீழேயோ, பக்கத்திலேயோ, ரத்தம் சிந்தியிருக்கவில்லை. பிரேதம் மல்லாந்து கிடந்தது. மண்டையில் காயம்; கீழ்த்தாடையில் கிழிசல் காயம்; கழுத்தோரத்தில் வளைவான வெட்டுக்காயம்; உடலில் வேறெங்கும் குறிப்பிடத்தக்க வேறு சிராய்ப்புக் காயமும் இல்லை. பிரேதத்தை விசாரணைக்குப் பிறகு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டேன். கடைசியாக முறைப்படி நடத்தவேண்டிய முறைகளில் பிறழாமல், எல்லாவற்றையும்

கொலைச் செய்தி கேட்டுக் குமுறினாராம், குலைந்துபோன குடும்பத்தை ஒன்றாக்கிய சித்தலிங்கம்!

ஒழுங்காக முடித்து, அபிராமியைக் கொன்றதற்காக, பாலசுந்தரத்தின்மீது ஒரு கொலை வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன்.

[முடிவுரை:—ஆகவே, ஒரு கொலை வழக்கின் விவரங்கள், சம்பந்தப்பட்ட முக்கிய நபர்களாலேயே சொல்லப்பட்டுள்ளன. பாலசுந்தரம் தன் மனைவியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, கைதியாகக் கூண்டில் நிறுத்தப் பட்டுள்ளான். அவன் சார்பில் வாதாட சட்ட நுணுக்கங்களை அலசி, ஆராய்ச்சி முதிர்ச்சியில் அறிவில் சிறந்து விளங்கும் வழக்கறிஞர் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார். பாலசுந்தரத்தின் கதி என்ன ஆகும்? வழக்கின் முழு விவரம் உங்களிடம் தரப்பட்டுள்ளது. தீர்ப்புத் தாருங்கள்: எங்கள் தீர்ப்பை அடுத்த இதழில் பாருங்கள்.]

இட்லரின் சகோதரி ★

இரண்டாவது உலகப் போருக்குக் காரணமாயிருந்த இட்லர் மறைந்து விட்டான். அவனோடு அவனது வம்சமும் மறைந்து விட்டதாகத்தான் நினைத்திருப்பீர்கள்.

அதுதான் இல்லை. இட்லரின் சகோதரி இன்னும் உயிரோடிருக்கிறாள்!

சகோதரன் ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியா யிருந்த போது கடல் போன்ற மாளிகையிலே காவலர் புடை சூழ, ஏவலர் பணிந்திருக்க, யாருளர் எமக்கு நிகர்—என வாழ்ந்த அந்த அம்மையார்—இப்போது 'தரித்திர நாராயணி'யாய், தங்குவதற்கும் தகுந்த இடமின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

பவேரியன் மலைச் சரிவிலே முன்பு இட்லரோடு வாழ்ந்தவள், இப்போது அங்குள்ள 'சேரி'யொன்றில் வாழ்கிறாள்.

இப்போது அதற்கும் ஆபத்து வந்து விட்டது.

அந்த வீட்டிற்கு வாரம் ஒரு டாலர் வாடகை. இட்லரின் சகோதரியால் அந்த வாடகையைக் கொடுக்க சக்தியில்லாத காரணத்தால், வீட்டுக்காரர் அந்த அம்மையாரைக் காலி செய்யச் சொல்லிவிட்டார்!

பாவம்! தன்னை யாரென்று காட்டிக்கொள்ள வெட்கப்பட்டு, அந்தப் பெண் தன்னை பாலா ஒல்ப் என்னும் புனை பெயரிட்டு அழைத்துக் கொள்கிறாள். அந்தப் பெயர் இட்லர் தனது அரசியல் வாழ்வின் ஆரம்பக் காலத்தில் உபயோகப்படுத்தி வந்ததாம். வயது அறுபதுக்கு மேல் ஆகியும் அவள் இன்னும் விவாகம் செய்து கொள்ளவில்லை!

இப்போதெல்லாம் பாலா, தன் சகோதரன் இட்லர் சர்வாதிகாரியாக இருந்தபோது தனக்கு மாதாமாதம் நாற்பது பவுன் கொடுத்ததையும், கிருஸ்துமஸ் பண்டிகையன்று 250 பவுன்கள் கொடுத்ததையும் நினைத்து நினைத்துப் பெருமூச்சு விடுகிறாள்.

சில ஆண்டுகளுக்கு முன் வரை இட்லருடைய சொத்துகள் பூராவும் தனக்குத் தான் வந்து சேரும்—என்று பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் அரசாங்கமோ

"குடை நிழல் அமர்ந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்" —இது வெறும் செய்யுளல்ல; பலருடைய வாழ்க்கை விளக்கமும் ஆகும்! இதோ, அதற்கொரு உதாரணம்!

அவைகளைப் பறிமுதல் செய்து விட்டது.

''ஆஸ்திரியாவிலுள்ள என் நண்பர்கள் எனக்கு ஏதோ அவ்வப்போது சிறிது நன் கொடை யளிக்கிறார்கள். அதை வைத்துதான் நான் காலத்தை ஓட்டுகிறேன்''—என்று கூறி சலித்துக்கொள்கிறாள்.

சகோதரனைப் பற்றி அவளிடம் கேட்டபோது கீழ்க் கண்டவாறு பதில் சொன்னாள். ''எங்கள் தந்தை இறந்த பிறகு இட்லர் என்னிடம் மிகவும் அன்பாக இருப்பான். நான் படிப்பதற்கும் அவன் தான் ஏற்பாடு செய்தான். ஒரு நாள் பள்ளிக்கூடத்தில் என்னை ஒரு பையன் திட்டி விட்டான். இதை இட்லரிடம் சொன்ன போது அவன் கொதித்துப்போய் 'அந்தப் பையனைக் காட்டு: அவனை ஒரு கை பார்த்துவிடுகிறேன்' — என்று என்னை அழைத்துக்கொண்டு அந்தப் பையனைத் தேடுவதற்குக் கிளம்பிவிட்டான். என் மீது அவ்வளவு அன்பு அவனுக்கு!''

அவளது சின்னஞ்சிறிய அறையில், தனது தாயாருடைய படம் ஒன்றை கண்ணாடிபிரேம் செய்து வைத்திருக்கிறாள். அவளுடைய குடும்பத்தினரில் அந்தப்படம் ஒன்றுதான் தன்னிடம் இருக்கிறது என்கிறாள் அவள்.

அறையில் ஒரு 'டைப்' மிஷினும் இருக்கிறது. ஓய்வு நேரத்தில் அவள் 'டைப்' செய்து கொண்டிருக்கிறாள். தனது வாழ்வுக் காலத்து முக்கிய சம்பவங்களை அவள் எழுதித் தொகுத்துக் கொண்டு வருகிறாளாம்.

***

மீண்டும், ''உங்கள் சகோதரன் எப்போதாவது ஜெர்மனியின் சர்வாதிகாரியாக வருவான்—என நீங்கள் முன்பே நினைத்ததுண்டா?''—என்று கேட்கப்பட்டபோது,

''இல்லை. ஆனால் எப்போதுமே அவன் நினைத்த காரியத்தை சாதித்துக்கொள்ளக் கூடியவன்!'' — என்று கூறி முடித்தாள், இப்போது வறுமையில் உழலும் பாலா!

அகில உலகையும் ஆட்டிப் படைத்தான் அன்புச் சகோதரன்; இன்று அனாதை போல் வாழ்வைக் கழிக்கிறாள் அவனது உடன் பிறந்தாள்.

செல்வாக்கும் சிறுமையும் வாழ்க்கையின் இரு துருவங்களானால் பாலா, அந்த இரு துருவங்களையும் கண்டவள்—என்றுதான் கூறவேண்டும்



மனிதன் தப்பினன்! ★★



'பெங்குவின்'

இந்தப் பறவையினத்துத் தந்தைகள் தாய்களோடு பிள்ளைப் பேற்றுப் பொறுப்பை பங்கிட்டுக் கொள்கின்றன.

பெண் பறவை இடும் முட்டைகள் பனிக்கட்டியில் பட்டு. சேதமடைந்து விடாவண்ணம் தாயும் தந்தையும் மாற்றி மாற்றி முட்டைகளைத் தங்கள் பாதங்களில் சுமந்து கொள்கின்றன.

'கடற் குதிரை'

இந்தப் பிராணிகளின் ஆண் வர்க்கம் முட்டைகளைச் சுமக்கின்றன. ஆண் பிராணிகளின் அடி வயிற்றில் அமைந்திருக்கும் பைகளில் முட்டைகள் நாற்பது அல்லது ஐம்பது நாட்கள் தங்குகின்றன.

குஞ்சுகள் பொறிக்கப்பட்டு, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு தான் அவை வெளியே தள்ளப் படுகின்றன.



'கிவி'

கிவி என்னும் இந்தப் பறவை வர்க்கத்தில் பெண்கள் முட்டையிட, ஆண்கள் அதன் மீது இரண்டு வாரங்கள் உட்கார்ந்து எண்பது நாட்களுக்கு அடைகாக்கின்றன.

இந்தக் காலத்திற்குள் ஆண் பறவை தனது எடையில் பாதி அளவை இழந்து விடுகிறது.

பிரசவ வேதனை; பிள்ளைப் பேற்றுப் பொறுப்பு-இவைகளில் ஆண்கள் வர்க்கத்திற்கே பங்கு கிடையாது என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் பிராணிகளின் கதையோ அப்படி அல்ல!

('நியூயார்க் டைம்ஸ்' ஏட்டிலிருந்து எடுக்கப்பட்டது.)

'திலாபியா'

திலாபியா என்னும் ஒரு வகை மீன் தனது குழந்தைகள் முட்டையிலிருந்து வெளிவருகிற வரையில் சாப்பிடாமல் காலம் கழிக்கின்றன.

ஏன் தெரியுமா? அவை தன் மனைவி இடும் முட்டைகளை இரண்டு வாரங்களுக்கு வாயிலியே சுமந்து கொண்டு திரிகின்றன.



'தோட்'

தோட் என்னும் ஐரோப்பாவில் காணப்படும் ஒரு வகைத் தவளை மனைவியிடும் முட்டைகளை பின் கால்களுக்குப் பின்னல் சுமந்து கொள்கிறது.

அவ்வாறே முட்டைகள் இரண்டு வாரங்கள் இருக்கின்றன; பின் பொறிக்கப் படுகின்றன!

'வாட்டர் பக்'



தண்ணீரில் வசிக்கும் மூட்டைப் பூச்சிபோன்ற இந்தப் பிராணி வர்க்கத்து ஆண்களின் முதுகுப் பக்கத்தில் தாய்ப் பிராணி முட்டையிடுகிறது. அவை பொறிக்கப்படுகிற வரையில் தகப்பனர் முட்டை தூக்குகிறர். முட்டைகள் பொறிக்கப் படுகிற வரையில் இந்தப் பிராணியால் பறக்க முடியாது.

"ரோம" புராணம்!

முகத்திலே வளரும் ரோமங்கள் 'ஷேவிங்' செய்வதால் மேலும் வேகமாக வளர்கின்றன-என்று ஒரு நம்பிக்கை இருந்து வருகிறதல்லவா? அது முற்றிலும் தவருனது. முக ரோமங்கள் க்ஷவரம் செய்து கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் எப்போதும்போல வளர்ந்து கொண்டுதானிருக்கின்றன—உயிர் போகிறவரை!

வழுக்கைத் தலையர்களைத் தவிர, மற்றவர்களது முக ரோமங்கள் தலை ரோமங்களைவிட மூன்று பங்கு அதிக கன பரிமாணம் கொண்டவை! அவை சதுர அங்குலத்துக்கு 700 அல்லது 800 வீதம் முகத்தில் காணப்படுகின்றன.

கில்லெட் கம்பெனிக்காரர்கள் நடத்திய ஆராய்ச்சியின் படி சாதாரண முக ரோமங்கள் மாதத்திற்கு ஒன்றரை அங்குல உயரமும், அல்லது ஒரு நாளைக்கு ·017 அங்குல வீதமும் நீளமாக வளர்கின்றன.

பல ஆண்டுகள் ஆராய்ச்சி நடத்தியதன் விளைவாக முகரோமங்களை மென்மைப் படுத்தும் பொருள் தண்ணீர் ஒன்றுதான் என்று கில்லெட் ஸ்தாபனத்தார் முடிவுகட்டியிருக்கிருர்கள். பின் ஏன் சோப்பு நுரையை சவரம் செய்யும் போது உபயோகிக்கிரோம் என்று கேட்கலாம். உண்மையில் சோப்பு நுரை ரோமங்களை மிருதுப்படுத்துவதில்லை. நுரைகள் ரோமங்களைச் சூழ்ந்துகொள்வதால் எப்போதும் ரோமங்கள் தண்ணீரில் ஆழ்ந்திருக்க வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் விரைவில் நீர் ஆவியாக மாறுவது சோப்பு நுரையினுல் தடுக்கப்படுகிறது. வெந்நீரை உபயோகித்தால் மிருதுவாகும் தன்மை இன்னும் அதிகமாகிறது.

சாதாரணமாக ஒரு ரோமம் தனது எடையில் 35 சத வீதம் அளவுக்குத் தண்ணீரை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மை கொண்டது. இயற்கையின் நியதி இப்படி இல்லாவிட்டால் ஆண்கள் மீசை வைத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும். ரோமங்களுக்கு நீர் உறிஞ்சி வைத்திருக்கும் சக்தியிருப்பதால்தான் அவை மிருதுவாயிருக்கின்றன. இல்லாவிட்டால் மீசை ரோமங்கள், அதே அளவு கனபரிமானமுள்ள தாமிரக் கம்பிகளைப்போல் கடினமாக இருக்கும்!

—'டிரக்ஸ் அண்டு காஸ்மெடிக்ஸ்' (நியூயார்க்)

சீ, போடா வாயாடி!
கந்தபுராணம்
தில்லை வில்லாளன், எம். ஏ

1

மோகனூர் முருகேச முதலியார் என்ருல் அறியாதார் இருக்கமுடியாது. அவர் கதா காலட்சேபம் செய்கிருர் என்ருல் ஊரே திரண்டு வரும். அவர் பெயர்பெற்ற புராண பிரசங்கி. அவர் மகன் மணியன் நல்ல அறிவாளி. கொஞ்சம் பகுத்தறிவியக்க வாடை அடிக்கும், அவன் பேச்சுகளில்.

[முதலியார், மகனேடு கோயிலுக்குக் கிளம்புகிருர்.

வழியில் பண்ணையாள் பரமன் வருகிருன். முதலியார் அருகில் வந்து விடுகிருன்.]

மோ. மு. மு: என்னடா, பரமா, காலங் கலிகாலமில்லே- ஆள்மேலேகூட விழுவே.

பரமன்: சாமி, பார்க்கல்லீங்க.

மோ. மு. மு: எப்படி பார்ப்பேன்னு கேக்கரேன். உங்க பாடுதான் இப்போ உச்சாண்டிக் கொம்புக்கே போயிடுத்தே.

ப: கோவிச்சுக்காதிங்க-நான் அப்படியெல்லாம் போறவனில்லேங்க.

மணியன்: பரமன்கிட்டே ஏம்பா கோபிக்கிறீங்க?

மோ. மு. மு: கோபிக்காமெ பின்னே கொஞ்சுவாங்களா? கோயிலுக்குப் போகையிலே, தீண்டாதவன் மேலே வந்து விழுந்தா.

ம: தீண்டாதவங்களே நீங்க தீண்ட இப்படி பயப்பட்ரீங்களே—ஆண்டவனே தீண்டியிருக்காரே!

மோ. மு. மு: என்னடா, பயலே சொல்ரே?

ம: இல்லேப்பா, நீங்கதானே முந்தா நாள் 'நந்தனர்' காலட்சேபம் செய்தபோது சொன்னீங்க...

மோ. மு. மு: என்ன சொன்னேன்?

ம: தீண்டாமை யெல்லாம் ஆண்டவனுக்கு உகந்ததல்ல-சாதி பேதம் என்பது நமது மன மயக்கம்—சாதி இரண்டொழிய வேறில்லே; இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி-என்று பாட்டுகூட பாடல்லியா?

ப: அப்படிங்களா, தம்பி? எனக்குப் பொழுதிருந்தா, நான் கூட வந்திருப்பேன் கதை கேக்க—என்மாதிரி ஜன்மங்களுக்கு ஏது இதுக்கெல்லாம் நேரம்? தம்பி, நந்தனர் எங்க ஆளுன்னு கேள்விப்பட்டிருக்கேன்.

ம: ஆமாம், பரமா. நந்தனர் தீண்டாத குலத்திலே பிறந்தவர் தான்—இருந்தாலும் ஆண்டவன் அவரை தன் சன்னிதானத்திற்கு அழைத்து வரும்படி ஆணை பிறப்பித்தாராம்—அப்படின்னு அப்பாதான் சொன்னர்.

மோ. மு. மு: பரமா, நீ போயிட்டுவா—டேய் மணி, காலம் ஆகிறது, கோயிலுக்குப் போடா.

ம: எப்பா, திருப்பாணழ்வாரிடம் திருமால், விருந்தே அருந்திஞராமே—நீங்க ஏம்பா

பரமன் மேலே பட்டதற்கே ஆத்திரப்பட்டீங்க?

மோ. மு. மு: அதெல்லாம் காலட்சேபத்திலே — பூலோக க்ஷேமத்திற்கு ஆகாதுடா.

ம: என்னப்பா, இப்படிச் சொல்றீங்க—ஆடுதின்னும் புலையரேனும், ஈசன் அன்பராயின், அவர் கண்டீர் யாம் வணங்கும் தெய்வம் என்று உரத்த குரலில், பக்க வாத்தியங்கள் முழங்க பாடினீங்க!

மோ. மு. மு: போடா போ, வர வர, கழுதையாகிட்டு வர்ரே.

நாடகம்

[முதலியாரும், மணியனும் ஆலயத்திற்குள் நுழைகிறார்கள். வெண் சக்கரக்குடை நிழலில் மேளதாளங்கள் முழங்க, பூரண கும்பம் ஏந்தி வந்து ஒருவரை வரவேற்கிறார்கள் கோயில் குருக்கள்.]

ம: அப்பா, அவர் யார் தெரியுமா?

மோ. மு. மு: கோயில் தர்ம கர்த்தாக்களில் அப்படி ஒருத்தருமில்லே—யார்? தெரியல்லியே!

ம: அவர் மந்திரியப்பா!

மோ. மு. மு: மந்திரியா—எந்த மந்திரி?

ம: கோயில் மந்திரி!

மோ. மு. மு: யார்?

ம: அவர் தானப்பா, மந்திரி பரமேசுவரன்.

மோ. மு. மு: நல்ல பெயர்.

ம: பெயர்தான் நல்ல பெயரே தவிர, குலம் மோசம்.

மோ. மு. மு: என்ன குலம்?

ம: சாட்சாத் பரமன் குலம்—அவன்மேலே பட்டுவிட்டதற்கு அப்படித் தாண்டிக் குதித்தீர்களே—இதோ, அதே குலத்தவர் பூரண கும்பம் தாங்கி வரவேற்கப்படுகிறார். இதற்கென்ன சொல்கிறீர்கள்?

மோ. மு. மு: என்னடா, இப்போதான் கோயில் நுழைவு சட்டம் வந்தாச்சே!

ம: அப்படியானால் சட்டம் போட்டால், உங்க வைதீகம் சரணடைந்து விடுமா?

மோ. மு. மு: உம், என்ன...மடையா! தடியா!... சீ, போடா, வாயாடி!

2

[காலட்சேப புகழ் முருகேச முதலியார் ஆலயத்திற்குள் வந்தால் ஒரு அர்ச்சனையாவது செய்யாமல் போகமாட்டார்—ஒரு ரூபாயாவது தட்சணை தராமல் திரும்பமாட்டார்.

ஆலயத்திற்குள் நுழைந்தார். அர்ச்சனை செய்யச் சொன்னார். தட்சணை கொடுக்க மடியைத் தடவினார். விபூதிப் பையில்தான் பணம் போட்டு வைப்பது வழக்கம். பையையே யாரோ

> எதிர்ப்பைக் கண்டு கலங்காதே! காற்றுடி காற்று வாக்கில் உயர எழுவதில்லை; அதை எதிர்த்துத்தான் உயர எழுகிறது. இதை நினைவில் வைத்திடு!
>
> —ஹாமில்டன்

கூட்டத்தில் இடித்துக் கொண்டு நுழைந்தபொழுது திருடிவிட்டார்கள்.]

மோ. மு. மு: ஐயோ, திருநீற்றுப் பையை யாரோ திருடி விட்டான்களே!

ம: அப்பா, பதருதீர்கள்.

மோ. மு. மு: ஏண்டா, நீயா வைத்திருக்கிறே?

ம: இல்லையப்பா, அவனன்றி ஓரணுவும் அசையாது.

மோ. மு. மு: என்னடா, கேலியா பண்றே!

ம: இல்லையப்பா, தங்களின் நேற்றைய உபதேசத்தை திருப்பிச் சொல்கிறேன்.

மோ. மு. மு: பை போயிட்டு துங்கிறேன் — இவன் வேதாந்தம் சொல்லித்தருகிறான் எனக்கு.

ம: நமக்கு பிராப்தம் அவ்வளவுதான். அவரவர்கள் கொடுத்தவைத்த அளவுதானே கிடைக்கும்.

மோ. மு. மு: சரி. சரி. உன்னிடம் பணமிருந்தால் ஒரு ரூபாய் ஐயரிடம் கொடு.

ம: இல்லையே!

மோ. மு. மு: சாமி, அடுத்த வெள்ளிக்கிழமை சேர்த்து தந்துட்ரேன்.

[முதலியார், கோபத்தோடு வெளியில் வருகிறார். மணியனும் கூடவே தொடர்கிறான்.]

ம: அப்பா, அவனன்றி ஓரணுவும் அசையாதுன்னு. நம்ம பையை ஆண்டவனே திருடச் சொல்லி, திருடனைத் தூண்டியிருக்கவேண்டும். நாம் பையை இன்றைக்கு இழந்து போயிடணும்னு நம் தலையிலே எழுதி வைத்திருக்கணும்.

மோ. மு. மு: டேய், போதுண்டா காலட்சேபம்.

[முதலியார் வேகவேகமாக வெளியில் வருகிறார். கோயில் கூட்டத்திற்கிடையே பரபரப்பு! ஆண்டவன்மீது சாத்தியிருந்த வைரமாலை காணமல் போய்விட்டது என்று செய்தி பரவுகிறது.]

ம: அப்பா, நாமதான் பையைக் கொடுத்தோம்னு ஆண்டவன் மாலையையே பறிகொடுத்திருக்கிறார்.

மோ. மு. மு: டேய், உன் பேச்சைக் கேட்டுக்கிட்டே வந்தால் எனக்கு பைத்தியம் பிடிச்சிடும் போலிருக்கு.

ம: இல்லேப்பா. இருந்தால் தெளியும்னு சொல்லுங்க.

[போலீஸ்காரர்கள் வேக வேகமாக வருகிறார்கள்.]

ம: சரிதான், ஆண்டவன் உலகத்தையே படைத்து, அளித்து, காப்பவர். அவர் நகை திருட்டுக்குக்கூட, இந்த சாதாரண போலீஸ்காரவங்க தான் வரணுமா? ப்பூ......

மோ. மு. மு: டேய்,

கோயில்னு என்னடா நினைச்சிருக்கே?

ம: ஆண்டவனின் வீடு-அதாவது ஆண்டவன் உலகம் முழுதும் பரவியிருந்தாலும், தோன்றும் இடம் ஒன்று. எப்படி பசு மாட்டின் உடல் முழுவதும் பால் பரவியிருந்தாலும், காம்பின் வழியாக வருகிறதோ அப்படி.

மோ. மு. மு: என் பேச்சை நன்றாக கிரகிச்சு வைச்சிருக்கேன்னு தெரியுது.

ம: அப்படி அருள் தருகிற இடத்திலே, நமக்கு பை போயிட்டுதே! அதனால் நமக்கு அருள் தரல்லேன்னு அர்த்தமா? பையை எடுத்துக் கொண்டு போனவனுக்கு கைமேலே அருள் கிடைத்ததுன்னு அர்த்தமா?

மோ. மு. மு: இது அர்த்தமா? அனர்த்தமா?

ம: அது என்னமோப்பா, நீங்கதான் சொல்லணும்.

[முதலியார், ஆண்டவன் அபிஷேகம் நடக்கும் நேரம் வந்துவிட்டதால், அதையும் பார்த்துவிட்டுப் போகலாம் என அபிஷேகம் நடக்கும் இடத்திற்குப் போகிறார்—மணியனும் உடன் செல்கிறான்.]

மோ. மு. மு: டேய், நீ இந்த சு. ம. காரனுவ கூட்டத்திற்கு—அதான் இந்த 'அண்ணு, தம்பி' கூட்டத்திற்குப் போனயா?

ம: இல்லேப்பா!

மோ. மு. மு: அதானே, அது மாதிரி கூட்டங்களுக்குப் போகாதே.

ம: உ[illegible] கூ[illegible]தானே தினசரி காலட்சேபம் கேட்டுண்டிருக்கேன்!

மோ. மு. மு: அது சரி! அது சரி!

ம: எல்லாம் சரிதானப்பா—ஆனால் ஒண்ணுமட்டும் எனக்கு சரியாகப் புரியல்லேப்பா.

பெரிய கோடீஸ்வரர் ஒருவர் நண்பருக்கு மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்ட தன் வீட்டை சுற்றிக் காண்பித்துக்கொண்டு வந்தார். "இதோ பார்த்தீர்களா? நான் குளிக்க வேண்டுமென்று நினைத்தால் 'பாத் ரூமு'க்குப் போகவேண்டியதில்லை. இந்தப் பித்தானை அமுக்கினாலே வெந்நீர் நிரம்பிய குளிக்கும் தொட்டி இங்கே வந்து விடும்"—என்று கூறிக்கொண்டே பித்தானை அமுக்கினார்.

உடன் வெந்நீர் நிரம்பிய தொட்டி வந்தது. இதில் ஆச்சரியமென்னவென்றால் அந்தத் தொட்டியில் சோப்பு தேய்த்துக் கொண்டிருந்த அந்தக் கோடீஸ்வரருடைய மனைவியும் இருந்தார்!

மோ. மு. மு: என்னடா?

ம: நீங்க சொன்னீங்களே, கடவுள் எல்லாம் செம்பு, பித்தளை, கருங்கல் என்று சொல்கிறார்கள் — கோயிலிலிருப்பதும் ஒன்றுதான்; உலைக்களத்தில் உருக்கியெடுப்பதும் ஒன்றுதான் — என்கிறார்கள். பெண் என்றால் எல்லாம் ஒரே மாதிரி நினைக்க முடியுமா? தாய், தாரம், தங்கை — மூவரும் பெண்களே; மூவரிடமும் ஒன்றாக ஒருவன் நடந்துகொள்ள முடியுமா என்று கேட்டீர்களே!

மோ. மு. மு: ஆமாம், பலத்த ஆரவாரம்கூடச் செய்து பக்தர்கள் ஆமோதித்தார்கள்.

ம: அப்படின்னா, கோயிலில் இருக்கும் செம்பு, பித்தளை, கருங்கல் சிலைகளுக்கு உயிர் இருக்கிறது, சக்தியிருக்கிறது என்றுதானே அர்த்தம்?

மோ. மு. மு: ஆமாம்.

[இந்த நேரத்தில் அம்மன் சிலைகளின் ஆடைகளை அவிழ்த்து விட்டு, அபிஷேகம் செய்கிறார் குருக்கள். மணியன் கண்களை மூடிக்கொள்கிறான்.]

> முதலாளி: ஏனப்பா; உன் வயதே இருபத்தைந்துதான் ஆகிறது. ஆனால் முப்பது வருஷம் சர்வீஸ் என்கிறாயே; எப்படி?
>
> ஊழியன்: 'ஓவர் டயம்' சார்!

ம: அப்பா, என்ன அக்கிரமம் பார்த்தீர்களா? இந்தக் குருக்கள் எவ்வளவு தடித்தனமாக நடந்து கொள்கிறான் பாருங்கள். இவன் ஆண்டவனுக்குக் குளிப்பாட்டுகிறான், ஆடை உடுத்துகிறான், நகை மாட்டுகிறான் — எல்லாம் சரி — ஆனால், அம்மனுக்கு இவன் மனைவியை விட்டு இதெல்லாம் செய்யக் கூடாதா? செய்யவில்லையே! ஆகவே இவன் இதற்கு உயிர் உண்டு, சக்தி உண்டு என்று நினைக்கவில்லை என்றுதானே அர்த்தம்?

மோ. மு. மு: சீ, சீ, வாயை மூடடா, வாயாடிக் கழுதை!

[முதலியார், சிந்தனையும் சிறகை விரித்துப் பறக்க ஆரம்பிக்கிறது. வெளியில் வருகிறார்கள். கதவு பூட்டப்படுகிறது.]

ம: அப்பா, ஆண்டவன் சர்வ வல்லமை உள்ளவன் என்று ஆயிரம் மேடைகளில் சொல்கிறீர்கள்; ஆனால் இவன் அனுதினமும் இரவு எட்டானதும், அவர் வல்லமையைவிட இந்த அலிகார் பூட்டுக்குத்தான் வல்லமை அதிகம் என்கிறான். என்ன சொல்கிறீர்கள்?

மோ. மு. மு: போதுண்டாப்பா, எனக்கு தலையும் வலிக்கிறது. உன் வாயாடி வாயை மூடடா, நாயே!

3

[ஆலயத்திற்கு வெளியே வந்தவுடன் முதலியாரையும், மணியனையும் பிச்சைக்காரர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். ஒனி



யன், தன் பையிலிருந்து சில்ல ரைக் காசுகளை எடுத்து ஒவ் வொருவருக்காகப் போடு கிறுன்.]

மோ. மு. மு: ஏண்டா, தட் சணைக்கு கேட்டபோது பண மில்லை என்ருயே...!

ம: பாத்திரமறிந்து பிச்சை யிடுகிறேன்.

[பிச்சைக்காரர்கள் சுற்றி வளைக்கவே, முதலியார் சீறு கிருர்.]

மோ. மு. மு: ஏற்பது இகழ்ச்சி என்று சொல்லியிருக் கிருர்கள் பெரியவர்கள். ஆனல் இந்த நாட்டில்தான் பிச்சைக் காரர்கள் அதிகம்.

ம: பிச்சை புகினும் கற்கை நன்றே என்றுகூட சொல்லி யிருக்கிருர்கள். அது மட்டு மல்ல, ஈவது விலக்கேல் என்று எத்தனையோ காலட்சேபங் களில் நீங்கள் சொல்லிவிட்டு, இப்போது நான் கொடுப்பதைத் தடுக்கிறீர்களே!

மோ. மு. மு: இந்த மாதிரி தடியன்களுக்குத்தாஞ கொடுக் கணும்?

ம: இவர்களை பிச்சை யெடுக்கவிட்ட ஆண்டவனைக் கேட்கணும் இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்— என்ருரே வள்ளுவர்! இதுவும் நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

மோ. மு. மு: அப்பப்பா, நீ எங்கதான் இப்படி வாயாட கத்துகிட்டேயோ தெரியல் லியே!

ம: எல்லாம் உங்க காலட் சேப மகிமையப்பா!

மோ. மு. மு: என் காலட் சேபம் கேட்டு இப்படிப் பேச ஆரம்பித்தால் இன்னும் கொஞ் சம் நாளிலேயே, உலகம் குட் டிச் சுவராகிவிடும்.

ம: உலகம் குட்டிச் சுவராக இல்லாமல் கூரைவேய்ந்த எழில் குடிலாகும் என்று சொல்லுங்க.

மோ. மு. மு: வாயாடி வம்பா, வாடாப்பா சும்மா!

4

[மோகனூர் முருகேச முதலி யார் சாதகங்களைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிருர். மணியன் வருகிருன்.]

ம: அப்பா!

மோ. மு. மு: வாடா, எல் லாம் உனக்காகத்தான் பார்த் துக் கொண்டிருக்கிறேன்.

ம: என்னப்பா?

மோ. மு. மு: பெண் சாத கங்கள் இவை.

ம: இவைகளுக்கு வேலை யில்லாமலேயே நான் முடிவு செய்து விட்டேன். அதுவும் நேற்று உங்கள் 'வள்ளித் திரு மணம்' காலட்சேபம் கேட்ட பிறகு அதை உறுதி செய்து விட்டேன்.

மோ. மு. மு: ஏய், என்னடா, விஷயத்தைச் சொல்லா மலேயே வீண் பிரசங்கம் செய்யரே!

ம: ஆமாம்பா, முருகன் குற சாதிப் பெண்ணுகிய வள்ளியை காதலித்து மணந்து கொண் டார் இல்லையா?

மோ. மு. மு: ஆமாம்.

ம: முருகனின் தந்தை மலை சாதிப் பெண்ணாகிய பார்வதியை மணந்து கொண்டார் இல்லையா?

மோ. மு. மு: அதுக் கென்னடா, இப்போ?

ம: அதுமாதிரி நானும்...

மோ. மு. மு: எலே, என்னடா நீயும்......?

ம: ஒரு...

மோ. மு. மு: குறத்தியைக் கட்டிக்கப் போகிறாயா? அடே சண்டாளா, ஏண்டா எனக்கு மகனாக வந்து வாய்த்தே!

ம: மகனாக வந்ததற்கு பெருமைப் படணும் அப்பா—முருகன் மாதிரி நானும் ஒரு குறத்தியை அல்ல, பறசாதிப் பெண்ணை கல்யாணம் பண்ணியிருக்கேனேன்னு...

மோ. மு. மு: யாருடா அவள்?

ம: அந்தப் பெண் பெயர் மனோன்மணி — என் கூடப் படித்தவள். நம்ம ஊர் பள்ளியில் ஆசிரியையாக இருக்கிறாள்.

[முதலியாருக்கு தலை சுற்றுகிறது. மயக்கம் வந்துவிடும் போலிருக்கிறது. மணியன் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொள்கிறான்.]

மோ. மு. மு: டேய் மணி, நிசமாகவா சொல்றே?

ம: பொய்யில்லேப்பா—சாதி விட்டு சாதி கல்யாணம் பண்ணினதற்கு ஆதாரமாக, நீங்க செய்த காலட்சேபக் கதைகளிலேயே எத்தனையோ சம்பவங்கள் இருக்கே! மானையும், மீனையும், ஆமையையும், குதிரையையும், மணந்து கொண்டிருக்கிறார்களே! அதை விடவா இது தவறு? ஆகவே மனதை திடப்படுத்தி ஆசீர்வதியுங்கள்.

மோ. மு. மு: ஆடே. வேணு

ண்டா தம்பி !

ம: அப்படியானுல் வள்ளித் திருமணத்தைப் பற்றிப் பேசும்பொழுது, நீங்கசொன்னதெல்லாம் பொய்யா ?

மோ. மு. மு: பொய்யில்லேடா, புராணம். இது நிச வாழ்க்கையடா !

ம: அப்பா! புராணத்தைப் படிக்கணும்—ஆனுல் அதிலே உள்ளதை மட்டும் புரிந்து கொண்டு செய்யக் கூடாதா ?

மோ. மு. மு: ஏய், ஏய், இப்படி வாயாட உனக்கு யாருடா கத்துக் குடுத்தது?

ம: யாருமில்லேப்பா, உங்கள் காலட்சேபம் — நீங்கள் தினந்தினம் சொல்லும் புராணக் கதைகள் !

மோ. மு. மு: என் காலட்சேபம் உன் மாதிரி வாயாடியையா உண்டாக்கும் — பரம பக்திமான்களையல்லவா பெருக்கும் ?

ம: அதுதானில்லே—புராணக் கதைகளிலே உள்ள கோணல் மாணல்கள், இதிகாசங்களிலே உள்ள இழிவுகள், எத்துவாளித் தனங்கள், மூடக் கருத்துக்களிலே நெளியும் முடக்குவாதத் தனங்கள், குருட்டு பழக்க வழக்கங்களில் உள்ள இருட்டுப் போக்குகள், திருட்டுத் தனங்கள்—எல்லாம் சேர்ந்துதான் தினந்தினம் என்னைப் போன்ற வாயாடிகளை உண்டாக்கி வருகின்றன. இம் மாதிரி வாயாடிகள் தினம் வளர்கிருர்கள், வளர்கிருர்கள், வளர்ந்து கொண்டே இருக்கிருர்கள் !

மோ. மு. மு: சீ, எப்படியோ ஒழிந்து போடா, வாயாடி !

ம: புராணப் பிரசங்கியாகிய தங்கள் வீட்டிலேயே ஒரு வாயாடி ஏற்பட்டிருக்கிறேன் என்ருல், நாட்டிலே இத்தகைய வாயாடிகள் எத்தனை பேர் ஏற்பட்டிருப்பார்கள் என்று யோசித்துப் பாருங்கள். இப்பொழுது வீட்டுக்கொரு வாயாடி கிளம்பியிருக்கிருேம்—இனி வீட்டிலுள்ளோர் அனைவருமே வாயாடிகளாகி விடுவர். அந்நாளே, இந்நாடு பகுத்தறிவு நாடாக மாறும் நாளாகும்! அதை எதிர்பாருங்கள், அப்பா!

மோ. மு. மு: சரி, சரி, வாயாடாதே! போ, போ, போய் விடு!

ம: சரி, போகிறேன். இன்று மாலை பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழா. அதற்கு நான் தான் தலைமை வகிக்கிறேன். அதோடு உங்களுக்கும் ஒரு அறிவிப்பு—தங்களின் 'ஈசரும் நேசரும்' காலட்சேபம் இன்று கிடையாதாம். தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளார்களாம்! பக்த ஜன சபையார் வழியில் பார்த்துச் சொன்னுர்கள்.

மோ. மு. மு: ஆங்...

ம: வாயாடிகள் காலம் வந்துவிட்டது. இனி வாய் வணிகர் காலம் போய் விட்டது! வருகிறேன், வணக்கம்! வாயாடி மகனுக்கு திருமண விஷயமாக பதில் சொல்ல யோசித்து வைத்திருங்கள்!

●

ஆடிப்பிறை

"என்ன தம்பி பார்த்துக் கொண்டிருக்கிருய்; ஆடிமாசத்தில் நீ என்னதான் சல்லடை போட்டுத் தேடினுலும் பிறையைப் பார்ப்பது கஷ்டம். பாலைக் குடித்துவிட்டு நேரத்தில் படுத்துத் தூங்குடா. நாளைக்குக் கோர்ட்டுக்குப் போக வேண்டாம்!''—என் அன்னையின் குரல் இது!

பாலை வைத்துவிட்டு சென்றுவிட்டார்கள், என் தாயார். அவர் முகத்தை ஒரு முறை பார்த்தேன். பால் கிண்ணத்தில் மட்டுமில்லை; என் அன்னையின் முகத்திலும் வழிந்தது!

நான் பிறந்து வளர்ந்த இரண்டு ஆண்டுகள் பாலூட்டினுள்; இப்போதும் அந்தப் பழக்கத்தைத் தொடர்ந்து காய்ச்சிய பசும்பால் தருகிருள். அந்தப் பாலுக்குத்தான் என்ன மகத்துவம்!

தாய் குழந்தைக்கு ஊட்டும் பாலில் ஒரு நாட்டின் வரலாறு அல்லவா புதைந்து கிடக்கிறது! வீரர்கள் தோன்றுவதும், விவேகிகள் பிறப்பதும் அன்னை ஊட்டிய அந்த அமுதத்தால் தானே! இல்லையேல் புகழ் பெற்ற புறநானூற்றுத்தாய் கோழைக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன்- என்று வெஞ்சினம் கூறுவாளா?

இருந்தும் அந்தத் தாயை அல்லவா கூறுபோட்டு விட்டான், மாணிக்கம்!

கோவிலெழுப்பிக் கும்பிட வேண்டிய கடவுளென்கிறேன், என் அன்னையை! அவனே ஆலகாலம் உமிழும் பாம்பு என நினைத்து நசுக்கி யெறிந்து விட்டான்!

தேடக் கிடைக்காத திரவியம்; தியாகத்தின் தரிசனம் என்கிறேன்—என் தாயை! அவனே தேளின் கொடுக்கு; பனங்கீற்றின் கறுக்கு எனக் கூறி ஈன்றவளின் தலையையே அறுத்துவிட்டான்.

பெற்று வளர்த்து, பெருந்துயர்பட்ட பெண்ணின் உயிருக்கு அவள் மகனே உலை வைப்பதா? தோளையும் முது

மாறன், எம்.ஏ.

கையும் தொட்டிலாக்கி முத்தத்தின் அணைப்பிலே வளர்த்த தாயின் வயிற்றிலேயே புதல்வன் கட்டாறியை வீசுவதா ?

—நினைக்க முடியவில்லை என்னால், அந்த மாபாதகத்தை !

கொலை அவனுக்கு சிறு பிள்ளை விளையாட்டாக இருக்குமோ என்று நினைப்பதற்கும் இடமில்லை. காரணம், ஒரே ஒரு முறைதான் சிறு திருட்டுக் குற்றத்திற்காகக் குற்றவாளிப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் பட்டு, அப்போதுதான் வீடு திரும்பி யிருக்கிறான் அவன்! வீட்டுப் படியை மிதித்தவுடனேயே கொலை செய்திருக்கிறான்.

எப்படித்தான் அவன் மனம் கல்லாக மாறிற்று?—அவனுக்காக வாதாடுவதற்குமுன் பல முறை கேட்டு விட்டேன் இந்தக் கேள்வியை. அவனோ உண்மையைப்பற்றி வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. "வக்கீல் அய்யா! எனக்கு உங்கள் உதவிதேவையில்லை. தூக்கு மேடைக்குப் பயந்தாலல்லவோ நான் உங்களை எதிர்பார்க்க வேண்டும். தயவு செய்து என்னை ஒன்றும் கேட்காதீர்கள்"-எப்போதும்;நீதிபதியிடம் கூட, அவன் இதே பதிலைத் தான் கூறி வந்தான்!

பாவம்; அவன் எதிர்பார்த்த படி தூக்கு தண்டனைதான் கிடைத்தது. இருந்தாலும் நாளைக் காலை அவன் உயிர் உடலை விட்டுப் பிரியு முன்னர் கொலையைப் பற்றிய உண்மை தெரிந்து கொண்ட ஒரே மனிதனாக நான் இருக்க வேண்டுமென்ற ஆசை என்னை வாட்டிப் பிழிந்தது.

மறு நாள் சிறைச்சாலையில் அவன் அடைக்கப்பட்டிருந்த தனி அறையில் அவனைச் சந்தித்தேன்.

"தம்பி, வக்கீல் என்ற முறையில் அல்ல; குற்றவாளிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்பவன் என்ற நிலையில் கேட்கிறேன். நீ கொலை செய்த காரணத்தை தயவு செய்து கூறி விடு. சூழ்நிலைதான் எதற்கும் காரணமென்பதை பதினெட்டேவயது நிரம்பப் பெற்ற உன்னைப் பொறுத்த வரையில் நான் நம்பத் தயாராயில்லை. தண்ணீரில் மிதப்பதால் தாமரை அழுகி விடுகிறதா? தணலில் போடுவதால் தங்கம் கெட்டு விடுகிறதா? இல்லை. மாற வேண்டுமானால் மனிதன் எப்படியும் திருந்தி விடலாம். உண்மையைச் சொல். உன் இருதயத்தைத் திறந்து பார்த்த முதலும் கடைசியுமான மனிதனாகவாவது நான் இருக்கிறேன்"—வார்த்தைகளில் வர்ணனையைக் குழைத்துக் கொடுத்து அவன் மனதைத் தொட்டு விட்டேன். அவன் பேச ஆரம்பித்தான் :

"மாணிக்கத்தைவிட அதிக மதிப்புடன்தான் வளர்த்து வந்தாள் என்தாய், இந்த மாணிக்கத்தை! தனக்கு ஒரு பிடி சோறு கிடைத்தாலும் அதை எனக்கென்றே பத்திரப்படுத்தி எடுத்து வைத்திருப்பவள்தான் அவள்!

"இருந்தும் அவள் எனக்கு மாபெரும் துரோகத்தைச்

செய்து விட்டாள், வக்கீல் அய்யா!

''உங்களுக்குத்தான் தெரியுமே, சிறுவயதில் திருடியதற்காக நான் குற்றவாளிகள் பள்ளிக்கூடத்திலே பல ஆண்டுகளைக் கழித்தேன்! அங்கேயிருந்த நாட்களிலேதான் என் தாயைப் பழிவாங்க வேண்டுமென்ற உணர்ச்சியையும் எருவிட்டு வளர்த்தேன்.

''நான் ஏன் அய்யா திருடினேன்? சோற்றுக்காகவா? அல்ல; சோறு வேண்டுமென்றால் நான் வேறு வேலை தேடியிருப்பேனே! அப்படி வேறு வேலை தேட வேண்டாமென்று என்னை வற்புறுத்



தியவளே என்தாய் தான் அய்யா!

"ஐந்து வயதாக இருக்கும் போது என்னைப் பள்ளியிலே சேர்த்தாள், அவள்! ஒரு நாள் என் பக்கத்திலிருந்த பையன் புதிதாக 'சிலேட்' ஒன்று வாங்கி வந்திருந்தான். சொறி நாயின் தோல்போல கரைபட்டுக் கிடந்த என் கரும் பலகையோடு அந்த மாடி வீட்டுக்காரனின் கரும் பலகையையும் ஒப்பிட்டேன். அதன் விளைவு? அந்த சிலேட்டை யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு எடுத்து வந்துவிட்டேன். ஆவலோடு அன்னையிடம் காட்டினேன். இருந்தாலும் எனக்கு பயம் தான், "செய்யலாமா இந்த வேலை?" என்று கேட்டு என் கன்னத்தில் அறைவாளோ என்று! என்னைப் பெற்று வளர்த்த அந்தப் பேயோ கண்டனக் குரல் எழுப்பினாள், "ஏன் 'சிலேட்'டை எடுத்து வந்தாய்?" என்றல்ல! "சிலேட்டுத்தானா கிடைத்தது? அந்தப் பையனின் மோதிரம் கிடைக்கவில்லையாக்கும்"—என்று முணகினாள்! பலன்? மறு நாள் அவன் மோதிரத்தையும் எடுத்து வந்து விட்டேன், துணிவோடு—திறமையோடு!

"ஆண்டுகள் வளர்ந்தன; நானும் திருடனாக வளர்ந்தேன். அந்த வளர்ச்சிப் பருவத்திலே தான் ஒரு முறை நான் போலீஸ்காரனையும், குற்றவாளிப் பள்ளிக்கூடத்தையும் சந்தித்தேன்!

"குற்றவாளிப் பள்ளியிலே குன்றிப்போயிருந்த என் தன்மானம் குன்றின் மேலிட்ட விளக்கைப்போல தூண்டி விடப்பட்டது.

"நான் ஏனய்யா அப்படி மாறினேன்? உங்களைப் போல மானஸ்தனாக வாழவேண்டிய நான் ஏன் கோணல் வழியிலே தலைகால் தெரியாமல் ஓடினேன்? என் தாய்தான் அதற்குக் காரணம். அவள்தான் என்னைத் திருடனாக-தீயவனாக-தீயினும் கொடியவனாக வளர்த்தாள். அன்றே அவள் 'ஏன்டா பக்கத்துப் பையனுடைய கரும் பலகையை எடுத்தாய்?' என்று கேட்டு என் கைவிரலை நசுக்கியிருந்தால் நான் கள்வனாக-கருநாகமாக மாறியிருப்பேனா?

"துரோக மிழைத்தாள்; என் வாழ்வை வெட்டிச் சாய்த்தாள் என் அன்னை! அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதற்குத் தான் பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும் அவளையும் என் கத்தியால் வெட்டிச் சாய்த்தேன்! இதில் தவறென்ன அய்யா? தவறென்ன?"

—மாணிக்கத்துடைய அந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

மெதுவாக வானத்தைப் பார்த்தேன். ஆடி மாதத்திலே பிறை இருக்காதென்றாள், முதல் நாள் இரவு என் தாய்! அது தவறு; "கருமேகம் மூடிக் கிடக்கும் மனித சமுதாயத்திலேதான் 'ஆடிப்பிறை'யை சுலபமாகப் பார்க்க முடிகிறதே!" என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு நடந்தேன்! அல்ல, நகர்ந்தேன் வீடு நோக்கி!


மறைந்த அடிவானம்
மூலம்: ஜேம்ஸ் ஹில்டன்
தமிழில்: பி. சி. கணேசன். பி.எஸ்ஸி.பி.டி
செல்லப்பன்

முன் கதை :

பெர்லினில் அரசியல் தூதராக இருந்த என்னுடைய நண்பர் வைலண்டு நடத்திய விருந்திற்கு நானும் போயிருந்தேன். என்னுடைய மற்றொரு நண்பரும் நூலாசிரியருமான ரூதர் போர்டும் வந்திருந்தார். ஸாண்டர்ஸ் என்ற ஒரு விமானி எங்கள் விருந்தில் கலந்து கொண்டவுடனே, எங்களுடைய பேச்சு, 1931-ம் ஆண்டில் பாஸ்கல் நகரில் நடந்த வெட்கப்படத்தக்க விமானத் திருட்டின் பக்கம் திரும்பியது. பெஷாவருக்குச் செல்வதாக இருந்த அந்த விமானத்தில் நான்கு பிரயாணிகள் இருந்தனர். திடீரென்று ஒருவன், விமானியைத் தலையில் அடித்து வீழ்த்தி விட்டு, விமான உடையைத் தான் அணிந்து கொண்டு, ஒருவருக்கும் தெரியாமல் விமானத்தை ஓட்டிச் சென்று விட்டான். விமான நிலையத்தின் அடையாள முறைகளையெல்லாம் அவன் சரிவரப் பின்பற்றியதால், யாரும் நிகழ்ச்சி பற்றி சந்தேகப்படவில்லை. ஆனால் விமானம் பெஷாவரைப் போய்ச் சேரவேயில்லை. இந்தச் செய்தியை அதிகாரிகளும் பத்திரிகைகளுக்கு அறிவிக்கவில்லை—மக்கள் அவர்களுடைய திறமையை எண்ணி சிரிப்பார்களே என்ற பயம்! ஒருவரும் காணாத இடத்தில் விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கும் என்று யூகிக்கப்பட்டது.

இந்த விமானத் திருட்டு பற்றிய கதை எனக்கு வியப்பூட்டியது. அந்த விமானத்தில் சென்ற பிரயாணிகளில் ஒருவரான கான்வே, ரூதர்போர்டுடன் கல்லூரியில் படித்தவர். கான்வே நல்ல புத்தி கூர்மை உடையவர் என்பதோடு, பியானோ வாசிப்பதில் நிபுணர் என்ற விவரத்தையும் ரூதர்போர்டு எடுத்துச் சொன்னார். விருந்து முடிந்தவுடன் ரூதர்போர்டுடன் அவர் தங்கியிருந்த ஓட்டலுக்கு நானும் கிளம்பினேன்.

ஓட்டலுக்குப் போனவுடன் ரூதர்போர்டு சொன்னார் : " ஜப்பானியக் கப்பல் ஒன்றில் நவம்பர் மாதம் (1931-ம் ஆண்டு) கான்வேயுடன், ஹாங்காயி லிருந்து ஷோனேலூலுவிற்குப் பிரயாணம் செய்தேன்."

"கான்வே பிரயாணம் செய்த விமானம் 1931-ம் ஆண்டு மே மாதமே காணாமல்போய் விட்டது. அப்படியானால் அதே ஆண்டு நவம்பர் மாதம், ரூதர்போர்டு எப்படிக் கான்வேயுடன் பிரயாணம் செய்ய முடிந்தது"-என்ற விஷயம் எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

ரூதர்போர்டு விளக்கினார் : " சீனாவில் பீகிங் எக்ஸ்பிரஸில் சென்று கொண்டிருந்த பொழுது, கத்தோலிக்க மதத் தலைவி ஒருத்தியைச் சந்தித்தேன். அவள் சுங்கிங்கிலுள்ள அவர்களுடைய ஆஸ்பத்திரியில் பழைய நினைவுகளை அடியோடு மறந்துவிட்ட

ஒரு ஆங்கிலேயர் சேர்க்கப் பட்டிருப்பதாகவும், அவர் சீன மொழியை வெகு நன்ருகப் பேசுவதாகவும் கூறினுள். நான் ஆவலால், சுங்கிங்கில் இறங்கி, அந்த மதத் தலைவியோடு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். என்ன ஆச்சரியம்! அங்கு பழைய நினைவுகளை மறந்து, கான்வே படுத்திருந்தார். கான்வேயுடன் நான் ஆங்கிலத்தில்தான் உரையாடினேன். பழைய சம்பவங்கள் பலவற்றை நினைவுபடுத்தியும் ஒன்ருவது அவருடைய நினைவுக்கு வரவேயில்லை. அவருடன் சில நாள் தங்கியிருந்தேன். கடைசியில் அவரை என்னுடன் இங்கிலாந்துக்கு அழைத்துப் போக அனுமதி கேட்டேன். உடனே ஆஸ்பத்திரி அதிகாரிகள் அனுமதி அளித்தார்கள். அவரை, ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்தவர்கள் பற்றியும் சரியான தகவலில்லை. நானும் கான்வேயும் கப்பலில் புறப்பட்டோம்.''

ருதர்போர்டு என் முகத்தைப் பார்த்தார். நானே, ஆச்சரியத்தால் வாய் பிளந்து கேட்டுக் கொண்டு இருந்தேன். அவர் தொடர்ந்தார்: ''பழைய நினைவு ஏதும் கான்வேயிக்கு வரவில்லையே தவிர, தான் கற்றிருந்த மொழிகள் எதையும் அவர் மறக்கவேயில்லை. எங்கள் கப்பல் யோகஹாமாவை அடைந்தவுடன் சிங்கிங் என்ற பிரபல பியானே வாசிப்பவர் எங்கள் கப்பலுக்கு வந்து சேர்ந்தார். ஒருநாள் சிங்கிங் பியானே வாசிப்பதை கான்வே ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, அவர் வாசித்து முடித்தபின், பியானேவின் முன் உட்கார்ந்து இனிமையான கீதம் ஒன்றை மெய் மறந்து வாசிக்கலானுர். சிங்கிங், அது யாருடைய பாடல்-என்று கான்வேயைக் கேட்டார். பிரபல சங்கீத நிபுணரான ஷாபினுடைய பாடல்—என்ருர் கான்வே. ஷாபினுடைய பாடல் எல்லாம் தமக்குத் தெரியுமென்றும், இம்மாதிரி பாடல் ஏதும் ஷாபின் எழுதவில்லையென்றும் சிங்கிங் கூறினுர். தான் வாசித்தது ஷாபினுடைய பிரசுரமாகாத பாடல் என்றும், அதை ஷாபினுடைய மாணுக்கர் ஒருவரிடமிருந்து தெரிந்துகொண்டதாகவும் கான்வே கூறினுர். கான்வே, பிரசுரமாகாத ஷாபினுடைய மற்ருெரு பாடலையும் வாசித்தார். சிங்கிங், உண்மையிலேயே இப்பாடல்களைக் கேட்டு பிரமித்துப்போனுர். இதில் ஆச்சரியம் என்ன வென்ருல், ஷாபின் 1849-ம் ஆண்டே இறந்துவிட்டார்: ஆகவே, கான்வேயிக்கு அவருடைய மாணுக்கர் எப்படி அறிமுகம் ஆனுர் என்பதுதான்! ஆனுல் கான்வே வாசித்த பாட்டுக்களில் ஷாபினின் முத்திரை அப்படியே இருப்பதாக சிங்கிங் ஒப்புக்கொண்டார். அதற்குப் பின் நானும், கான்வேயும் படுக்கச் சென்ருேம். இரவு திடீரென்று கான்வே என்னிடம் ஓடி வந்தார். இசை, பழைய நினைவுகளைக் கொண்டு வந்து விட்டதாகவும், இப்பொழுது தமக்கு எல்லாம் புரிவதாகவும் கூறினுர். அவர் முகத்தில் சிந்தனையின் தேக்கம் தெளிவாகத்

தெரிந்தது. அதன்பின் கான்வே தூங்கவே இல்லை. அவருடைய அனுபவங்களை யெல்லாம் கூறினார். கப்பல் ஹோனோலூலு துறை முகத்தை அடைந்தவுடன் அவரைக் காணவில்லை. மூன்று மாதம் கழித்து, நான் அவருக்காகச் செலவழித்த பணத்திற்கு ஒரு 'செக்'கை அனுப்பி, வடமேற்கு திசை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.''—ருதர் போர்டு முடித்தார்.

''அவருடைய விமான அனுபவங்களைப் பற்றிக் கூற வில்லையே!'' என்றேன் நான்.

''சுய நினைவு வந்தவுடன், கப்பலில் அவர் எனக்குக் கூறிய வைகளைக் குறிப்பெடுத்துக் கோர்வையாக கதைபோல் எழுதி யிருக்கிறேன். படியுங்கள்.'' என்றார் ருதர்போர்டு.

இரயிலில் ஊருக்குத் திரும்பிச் செல்லும்பொழுது கதை யைப் படிக்க ஆரம்பித்தேன்......

* * *

மே மாதம் 20-ம் தேதி—பாஸ்கலிலிருந்து விமானம் புறப்பட் டது. மிஸ். பிரிங்க்லோ, ஹென்றி பர்னார்ட் என்ற அமெரிக்கர், கான்வே, மாலின்சன்—ஆகிய நான்கு பிரயாணிகள் அந்த விமா னத்தில் இருந்தனர். ஒரு மணி நேரம் விமானம் பறந்தபின், விமானம் சரியான திசையில் பறக்கவில்லை யென்பதை மாலின் சன் உணர்ந்தார். மாலின்சன் இளைஞர். மெதுவாக விஷயத் தைக் கான்வேயிடம் சொன்னார். கான்வேயோ அதைப் பற்றிக் கவலைப்படாமல் புன்முறுவல் பூத்தார். ஆபத்து ஏதும் இல்லை யென்பதும், மாலின்சன் அவசரத்தால் அச்சப்படுவதாகவும் கான்வேயின் எண்ணம். ஆனால் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தவுடன் அவரும் அதிர்ச்சியடைந்தார். விமானம் பெஷா வருக்குச் செல்லாமல் மலைப்பிராந்தியமொன்றில் பறந்து கொண் டிருந்தது. விமானி வழி தவறிவிட்டதாக இப்பொழுது கான்வே யும் நம்பினார். திடீரென்று விமானம் பூமியை நோக்கி இறங்கியது. அது ஒரு பள்ளத்தாக்கு. விமானம் நின்றவுடன் விமானி கீழே இறங்கினான். அந்த விமானி கான்வேயிக்கோ, மாலின்சனுக்கோ அறிமுகமில்லாத ஒரு புதிய மனிதன் என்பது புலனாயிற்று. அவனைச் சுற்றிலும் மலைஜாதியினர் வந்து சூழ்ந்துகொண்டு அள வளாவினர். பிரயாணிகள் கீழேயிறங்க அனுமதிக்கப்படவில்லை. தண்ணீர் மட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. விமானம் பெட்ரோல் பிடித்துக் கொண்டபின் மீண்டும் கிளம்பியது.

மாலின்சனுக்கு அச்சமும் ஆத்திரமும் தோன்றியது. கான்வே யிக்கோ இன்னது செய்வதென்றே புரியவில்லை. முடிவில், மாலின்சனின் தூண்டுதல் பேரில், விமானி அறையின் கண்ணாடி

ஜன்னலைப் போய் கான்வே மெதுவாகத் தட்டினார். விமானி திரும்பி துப்பாக்கியைத் தொட்டுக் காட்டினான். கான்வே பதில் பேசாமல் இடத்தில் வந்து உட்கார்ந்தார். எல்லோரும் மெது வாகக் கண்ணயர்ந்தார்கள். கான்வே கண் விழித்தபொழுது, விமானம் புரியாத இடமொன்றை நோக்கிப் பறந்து கொண் டிருப்பதை உணர்ந்தார்.

*　　　*　　　*

பர்னார்ட் கண்விழித்தவுடன், விமானம் எந்த நாடு நோக்கிப் பறக்கிறதென்று தெரியுமா வென்று கான்வேயைக் கேட்டார். கான்வேயின் நிலையும் குழப்பமாகவே இருந்தது. மிஸ். பிரிங் கலோ பெண்ணாக இருந்தாலும், மனோ தைரியத்தை இழக்காமல் உற்சாகமாகவே இருந்தாள்.

விமானம் பறந்து கொண்டே இருந்தது!

திடீரென்று 'ஓ' வென்ற பேரிரைச்சல்...ஆம், விமானம் புயலில் சிக்கிக் கொண்டு விட்டது. விமானி, விமானத்தை இறக்குவதற்கு அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தான். கடைசி யில் விமானம் ஒரு மாதிரியாக இறங்கியது. சக்கரதின் 'டயர்' படீரென்று வெடித்தது.

விமானம் நின்றவுடன், பிரயாணிகள் பயமும், ஆவலும் மீதூற மெதுவாக இறங்கினர். விமானியின் அறைப் பக்கம் போனபோது, விமானி அங்கேயே மயங்கி வீழ்ந்து கிடந்தான். மாரடைப்பினால் அவன் மயங்கிக் கிடப்பதாக முடிவு செய்தனர்.

நேரமோ இரவு. இடமோ ஆயிரக் கணக்கான மைல்கள் வரை மனித சஞ்சாரமே இல்லாத இடம். விமானி இறந்து விட் டானோ என்ற பயம் ஒரு புறம். விமானம் பழுதாகி விட்டது. உண்ண உணவில்லை. இரவு நகர மறுத்தது.

*　　　*　　　*

கருக்கலில், விமானி மெதுவாகக் கண்விழித்து ஓரிரு வார்த் தைகள் பேசினான். அவன் வார்த்தை கான்வேயிக்கு மட்டுந் தான் புரிந்தது. 'ஷாங்ரிலா' என்ற மடத்தில் அவர்களுக்கு உண வும் உறையுளும் கிடைக்கும் என்ற செய்தியை அறிவித்த பின், விமானி மாண்டு போனான்.

'ஷாங்ரிலா' மடம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ என்ற கவலை, பிரயாணிகளுக்கு. அங்கே போனால் அவர்களைக் கொலை செய்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் மாலின்சனுக்கு! 'ஷாங்ரிலா' பௌத்தத் துறவிகளின் மடம்; அங்கே கொலை நடக் காது என்பது கான்வேயின் நம்பிக்கை. இம்மாதிரியான குழப் பத்தில் அவர்கள் இருக்கும்பொழுதே பள்ளத்தாக்கில் சற்று தூரத்தில் சில மனித உருவங்கள் வருவது தெரிந்தது.

ஒரு மனிதனை நாற்காலியில்சுமந்து கொண்டு நான்கு பேரும், வேறு சில பணியாட்களும் வந்து கொண்டிருந்தனர். நாற்காலி யில் உட்கார்ந்திருந்தவர் நீல உடை அணிந்திருந்தார். 'ஷாங்ரிலா' மடத்திலிருந்து வருவதாகக் கூறி கான்வேயிடம் கைகுலுக்கினார். இதர மூவரும் அவருக்கு அறிமுகப்படுத்தப் பட்டனர். வந்த மனிதர் தன்னுடைய பெயர் சாங் என்று அறிவித்தார். கான்வே, அவரை 'ஷாங்ரிலா'வுக்கு வழி கேட்டார். அவரும் அவர்க் ளுடன் விருப்பத்தோடு வழிகாட்ட வந்தார். மாலின்சன் 'ஷாங் ரிலா'வில் அதிக நாள் தங்க விருப்பமின்மையை அறிவித்தார். அவர்கள் ஷாங்ரிலாவிலிருந்து திரும்பிச் செல்லுவதற்கு ஏற்ற துணை அவ்வளவு சீக்கிரம் கிடைக்காது என்று சாங் அறிவித்தார். குறுகலான பாதைகளையும் சறுக்கலான பாதைகளையும் வெகு சிரமப்பட்டுக் கடந்து, 'ஷாங்ரிலா' மடத்தை அடைந்தனர். மலைச் சிகரத்தின்மீது கட்டப்பட்ட அந்த மடம் பார்ப்பதற்கு மிக ரம்மியமாக இருந்தது. அறைகள் பெரியதாகவும், வசதியா கவும் அமைந்திருந்தன. சாங் அவர்கள் தங்குவதற்கான அறை களைக் காட்டிவிட்டு, குளித்தபின் உணவருந்தலா மென்று கூறிப் போய் விட்டார்.

ஆனால், மாலின்சனோ அதைவிட்டு வெளியேறும் மார்க்கம் காணத் துடிதுடித்துக் கொண்டிருந்தார்!

* * *

'ஷாங்ரிலா' மடத்தில் எல்லா நவீன வசதிகளும் இருந்தன. சீனப் பழக்க வழக்கங்களில் நன்கு பழகியவராதலால், சீன உணவு கான்வேயிக்கு மிகவும் பிடித்திருந்தது. சாங்குடன் பேசி, 'ஷாங்ரிலா' மடத்திற்கு வெளியாருடைய வருகை மிகவும் குறைவு என்று கான்வே புரிந்துகொண்டார். மிஸ். பிரிங்க்லோ மடம் வேலை செய்யும் முறையை சாங்கிடமிருந்து தெரிந்து கொண் டாள். அங்கு வசிக்கின்ற லாமாக்களில் (பௌத்தத் துறவிகள்) எல்லா நாட்டினரும் இருக்கிறார்கள் என்ற உண்மையும் தெரிந்து கொண்டாள். ஆனால் அந்த லாமாக்களைப் பார்ப்பதற்கு மட்டும் அவர்கள் ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை.

மாலின்சன் மட்டும் அங்கிருந்து செல்லுவதற்குப் போர்ட் டர்களின் உதவிக்கு ஏற்பாடு சீக்கிரமே செய்யும்படி சாங்கைக் கேட்டுக் கொண்டார். சாங்கின் பதிலோ திருப்திகரமாக இல்லை. மாலின்சனின் சந்தேகம் வலுத்தது.

காலையில் சாங்கைத் தூக்கிச் சென்ற போர்ட்டர்கள் உதவி செய்யமாட்டார்களா—என்று சாங்கைப் பார்த்துக் கான்வே கேட்டார். சாங் அது வேறு விஷயம்-என்றார். ஆகவே காலை யில் சாங்கை வழியில் சந்தித்தது சந்தர்ப்பத்தின் விளைவல்ல வென்றும், தாங்கள் வருவது முன்பே தெரிந்துதான் தங்களை

அழைத்துப்போக சாங் அங்கு வந்திருக்க வேண்டும்என்பதையும் யூகிக்க கான்வேயிக்கு வெகுநேரம் ஆகவில்லை. அதை வெளிப் படையாக சாங்கை கேட்டேவிட்டார். சாங்கோ, ஷாங்ரிலாவில் அவர்களுக்கு எந்தவிதமான அபாயமும் இல்லையென்றும், நிம்மதி யாக இருக்கும்படியாகவும் கூறினர்.

கான்வே எண்ண அலைகளில் மூழ்கினர். தூரத்தில் 'நீல நிலவு' என்ற பெயர் கொண்ட மலை நிலவொளியில் அழகு மயமாகத் திகழ்ந்தது!

* * *

மாலின்சனுக்கு ஒரே கவலையாகப் போய்விட்டது. அவ ரைத் திருமணம் செய்து கொள்ளுவதற்காக ஒரு பெண் இங் கிலாந்தில் காத்துக் கொண்டிருக்கிருள். கான்வேயைப் பற்றிக் கவலைப்பட யாருமில்லை என்பது அவருடைய எண்ணம். பர்னர்டும், அவர் காணமல் போய்விட்ட செய்தி குறித்து அவ ருடைய பெற்ருேர்கள் அறியமாட்டார்கள் என்ருர். "விமான விபத்து ஏற்பட்டு எல்லோரும் மாண்டுபோனதாகப் பத்திரிகை யில் செய்தி வருமே" என்ருர் கான்வே! "அது என்னைப் பாதிக் காது!" என்ருர் பர்னர்ட்! பர்னர்டின் இந்தப் பதில் கான்வேயிக் குப் புதிராக இருந்தது.

பொழுது போவதற்காக சாங் அவர்களை மடத்தைச் சுற்றி அழைத்துக் கொண்டு போனர். மடம் மிகப் பெரியதாகவும், ஏராளமான அறைகளைக் கொண்டதாகவும் இருந்தது. ஆங் காங்கே, உலகத்தின் உன்னதமான சிற்பங்களும், ஓவியங்களும், அதிசயப் பொருட்களும் அலங்காரம் செய்தன. மிகப்பெரிய நூல் நிலையமொன்றும் இருந்தது. அங்கே பிரஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன் மொழி நூல்களெல்லாம் இருந்தன. அவைகளை யெல் லாம் பார்ப்பதற்குள் மாலையாகி விட்டது. தேநீர் அருந்தியபின் சங்கீத அறைக்குள் நுழைந்தனர். ஒரு மூலையில் பியானே ஒன் றிருந்தது. சீன நாட்டைச் சேர்ந்த இளம் பெண் ஒருத்தி பியா னேவின் எதிரில் உட்கார்ந்து இனிமையாக வாசிக்கத் தொடங் கினள். அவள் கலைஞன் ஒருவன் செதுக்கிய பளிங்குச் சிலை போன்றிருந்தாள். பாடி முடித்தவுடன் அங்குள்ளோரை வணங்கி விட்டு வெளியே சென்ருள்.

அவள் லாமா ஆகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிருள் என்றும், அவள் பெயர் லோஷின் என்றும் சாங் கூறினர். ஆனல் அவளுடைய வயதை மட்டும் அவர் வெளியிட மறுத்து விட்டார்.

அன்று இரவு கான்வே சிந்தனையில் மூழ்கியவராய், மடத்தின் வெளிப்புறத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார். சற்றுத் தூரத்தில் கொம்புகளும், தப்பட்டைகளும் முழங்கின. அப்பள் ளத்தாக்கில் வசிக்கின்ற மக்கள் ஏதோ விழாக் கொண்டாடுவ

தாகக் கான்வே எண்ணிக் கொண்டார். ஆனுல் சற்று நேரத்துக் குப்பின் நடந்த நிகழ்ச்சி அவருக்குப் பெரும் திகைப்பூட்டியது. நான்கைந்து திபேத்தியர்கள் அவர்களுடைய மொழியில் பேசிக் கொண்டு சென்றனர். கான்வேயிக்கு அவர்களுடைய மொழி கொஞ்சம் தெரியுமாதலால் உற்றுக் கேட்டார்.

அவர்கள் முன் தினம் டாலு என்பவன் ஓட்டிவந்த பறவையைப் பற்றியும், அவன் இறந்து போனதால் சவ அடக்கம் செய்வது பற்றியும் பேசிக் கொண்டனர்.

கான்வேயிக்கு விஷயம் விளங்கிவிட்டது. டாலுதான் அவர்களுடைய விமானத்தை ஓட்டி வந்த விமானி!

ஆம், அவர்கள் நால்வரும் ஷாங்ரிலாவில் முன்கூட்டியே செய்யப்பட்ட ஏற்பாட்டின்படிதான் அழைத்து வரப் பட்டிருக்கிறுர்கள்! ஏன் அவர்கள் அழைத்து வரப்படவேண்டும் என்ற புதிர்தான் கான்வேயிக்குப் புரியவில்லை. தான் இப்பொழுது அறிந்து கொண்ட விவரத்தை வேறு எவரிடமும் வெளியிடாமல் விஷயங்களைக் கவனிப்பது என்று கான்வே முடிவு செய்தார்.

* * *

மிஸ். பிரிங்க்லோ திபேத் மொழியைக் கற்றுக் கொள்வதில் பொழுதைப் போக்கினுள். கான்வே பியானே வாசிப்பதில் பொழுதைக் கழித்தார். பல சமயங்களில் லோஷின் என்ற அந்தப் பெண் பியானே வாசிப்பதைக் கேட்டு ரசிப்பார். அவளுடைய வயதை நிர்ணயிப்பது அவருக்கு ஒரு பிரச்சினையாகவே போய் விட்டது. பதின்மூன்றிலிருந்து முப்பது வரை, எந்த மதிப்பீடும் அவள் தோற்றத்திற்குப் பொருந்தியது. காலத்தின் அடிச்சுவடு அவள்மீது பட்டதாகவே தெரியவில்லை. லோஷின் அந்த மடத்து வாழ்க்கையை அடியோடு வெறுக்க வேண்டுமென்பது மாலின்சனின் நம்பிக்கை. பர்னுர்ட் எதைப் பற்றியுமே கவலைப் படவில்லை.

"பர்னுர்டைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" —கான்வேயைப் பார்த்து மாலின்சன் கேட்டார்.

"ஏன்?" என்ருர் கான்வே.

"பர்னுர்ட் அவருடைய பாஸ்போர்ட்டில் பிரயாணம் செய்யவில்லை. அவருடைய பெயரும் பர்னுர்ட் அல்ல," என்ருர் மாலின்சன்.

பல கம்பெனிகளை மோசடி செய்த 'சாமர்ஸ் பிரயாண்ட்'தான் இந்த பர்னுர்ட் என்றும், அவரை அமெரிக்க அரசாங்கம் தேடிக் கொண்டிருப்பதால், பர்னுர்ட் என்ற பெயரில் பிரயாணம் செய்வதாகவும் மாலின்சன் கூறினுர். இந்த விபரங்களை, பர்னுர்ட் தவறிக் கீழே போட்டுவிட்ட கைப் புத்தகத்திலுள்ள பத்திரி

கைத் துணுக்குகளில் அவருடைய புகைப்படத்துடன் காணப் பட்ட விளம்பரங்களிலிருந்து கண்டறிந்ததாகவும் மாலின்சன் கூறினர்.

கான்வேயிக்குப் புதுப் பிரச்சினைகள் கிளம்பிக் கொண் டிருந்தன. இந்த விஷயம் தெரிந்திருப்பதாகக் காட்டக்கூடா தென்று மாலின்சனை எச்சரித்தார். ஆனால், அவர்களுக்கு விஷயம் தெரிந்து விட்டதை எப்படியோ பர்னர்ட் அறிந்து கொண்டுவிட்டார். 'விமான விபத்து பற்றிப் பத்திரிகையில் வரும் செய்தி தன்னைப் பாதிக்காது' என்று பர்னர்ட் சொன்ன பொழுதே, அவர் மாறுபெயரில் இருப்பதாக மிஸ். பிரிங்க்லோ யூகித்துவிட்டாள். விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டவுடன், பர்னர்டும் விஷயத்தை மறைக்காமல், தன்னுடைய எதிரிகளிட மிருந்து பாதுகாத்துக் கொள்ள ஷாங்ரிலா நல்ல இடம் என்று கருதுவதாக ஒப்புக் கொண்டார்.

ஒருவருடைய பிரச்சினைக்கு ஒரு தினுசாக விளக்கம் கிடைத்தது.

ஷாங்ரிலாவின் அமைதியும், அன்பும் கான்வேயின் உள்ளத் தைப் படிப்படியாகக் கவர்ந்தன. அந்த இடத்தைவிட்டுப் போகத்தான் வேண்டுமா என்ற சந்தேகம் அவருடைய மனதில் எழ ஆரம்பித்தது.

இந்த நிலையில் சாங் திடீரென்று கான்வேயின் முன் தோன்றி, "தலைமை லாமா உடனே உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். வந்து இரண்டு வாரங்களில் யாருக்கும் அவர் இதுவரை பேட்டி யளித்தது கிடையாது. உங்கள் சந்தேகங்களை யெல்லாம் அவர் தெளிவுபடுத்துவார்," என்றார்.

"இரவு வெகு நேரமாகிவிட்டதே. இப்பொழுதே போய் அவரைப் பார்க்கலாமா?" என்றார் கான்வே.

"நன்றாகப் பார்க்கலாம். இனி உங்களுக்குக் கவலையே இருக்காது!" என்றார் சாங்.

சந்தேகமும் ஆவலும் உந்தித் தள்ள, கான்வே சாங்கைப் பின் தொடர்ந்தார்.

* * *

பல அறைகளைக் கடந்து தலைமை லாமாவின் அறையை அடைந்தனர். "நீங்கள் உள்ளே போங்கள். உங்களைத் தனிமையில்தான் அவர் சந்திப்பார்." என்று கூறிவிட்டு சாங் போய் விட்டார். திரையை விலக்கிக் கொண்டு கான்வே உள்ளே நுழைந்தார். அங்கு சற்று தூரத்தில், தோல் சுருங்கி, உடம்பு துரும்புபோல் இளைத்து, ஆனால் கண்கள் ஒளி வீச, ஒரு பெரியவர் சலனமற்று வீற்றிருந்தார். கான்வே பக்தி யுடன் மரியாதை செய்தார். இருவரும் ஒருவருக்கொருவர்

முகமன் கூறிக்கொண்டபின், தலைமை லாமா, ஷாங்ரிலா மடம் ஏற்பட்டதன் வரலாற்றினைக் கான்வேயிக்கு விளக்கினார்:

"1719-ம் ஆண்டு பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த மூன்று கிறிஸ்தவப் பாதிரிகள் சீனாவிலிருந்து திபேத்துக்குச் செல்லும்போது இரண்டு பேர் மாண்டுபோனார்கள். மூன்றாமவர் இந்தப் பள்ளத்தாக்கிற்கு வந்து சேர்ந்தார். இங்குள்ள மக்கள் அவரை அன்போடு நடத்தினார்கள். அவர்கள் பௌத்தர்களாயினும் அவருடைய கிறிஸ்தவக் கோட்பாடுகளை அன்புடன் கேட்டனர். இங்குள்ள பௌத்த மடத்திற்கு அருகிலேயே ஒரு கிறிஸ்தவ மடத்தையும் 1734-ம் ஆண்டு தோற்றுவித்தார். அப்பொழுது அவருக்கு வயது ஐம்பத்து மூன்று.

"அவருடைய பெயர் பெர்ரால். கல்விமான் என்பதோடு கலையிலும் இசையிலும் அவருக்கு நிரம்ப ஆர்வமுண்டு. பெர்ராலுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. மக்களோ புத்த மதத்தை மறப்பதாயில்லை. அவருடைய தொண்ணூற்று எட்டாம் வயதில் அவரும் பௌத்த நூற்களைக் கற்கலானார். வயதாக, வயதாக மரணத்தை ஆவலோடு எதிர்பார்த்தார். 1789-ம் ஆண்டு அவருடைய நூற்று எட்டாம் வயதில் அவர் இறந்து கொண்டிருப்பதாக மக்கள் நம்பினார்கள். ஆனால் அவர் இப்பொழுது புதிய உணர்ச்சியோடு உலவ ஆரம்பித்தார். அவர் சாப்பிட்ட மூலிகைகள் அவர் ஆயுளை வளர்த்தன. அவரோடு வாழ்ந்த பலர் மாண்டு கொண்டிருந்தார்கள். அவரோ காலத்தைப்பற்றி கவலையின்றி வாழ்ந்து கொண்டிருந்தார். 1803-ம் ஆண்டு, இங்கு தங்கம் காண வந்த ஹென்ஷல் என்ற ஆஸ்திரியர் பெர்ராலின் வசப்பட்டு, அவருடனேயே தங்கிவிட்டார். அவர் இந்த ஷாங்ரிலா மடத்தைப்பல விதத்திலும் வளர்த்தார், ஆனால் 1857-ம் ஆண்டு, மடத்தைப் பார்க்க வந்த ஒரு ஆங்கிலேயன் சிறு தகராறு ஒன்றில் அவரை சுட்டுக் கொன்று விட்டான். அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் வரையப்பட்ட படம், அதோ!" என்று தலைமைலாமா ஒரு படத்தைக் காட்டினார்.

1803-ல் இளைஞனாக வந்து 1857-ல் கொல்லப்படுவதற்கு முன்பும் இளைஞனாகவே இருந்த ஹென்ஷலின் படம் கான்வேயை ஆச்சரியத்தில் மூழ்கவைத்தது.

"வந்த ஆங்கிலேயனுக்கும் ஹென்ஷலுக்கும் தகராறு ஏற்படக் காரணம்?"—கான்வே கேட்டார்.

"இங்கு வரும் விருந்தாளிகளுக்கு நாங்கள் விதிக்கும் நிபந்தனை...அது என்னவென்று உங்களால் யூகிக்க முடிகிறதா, மிஸ்டர் கான்வே?"

"யூகிக்கலாம் என்று நினைக்கிறேன்."

"அது சரி, என் கதையைக் கேட்ட பிறகு இன்னும் என்ன யூகிக்கிறீர்கள் ?"

"ஆச்சரியம்—அற்புதம்—என்னல் நம்பவே முடியவில்லை !"

"எதை மகனே ?"

"பாதிரி பெர்ரால் அவர்களே, நீங்கள் இன்னும் உயிரோடு இருக்கிறீர்கள் என்பதை !"

* * *

தேநீர் அருந்திய பின், மீண்டும் அவர்களுடைய பேச்சு தொடர்ந்தது. சங்கீத நிபுணரான ஷாபினின் சீடர் ஒருவர் மடத்தில் இருப்பதாகத் தலைமை லாமா அறிவித்தார். மடத்தின் வாழ்க்கையை மேற்கொள்ள ஆளின்றி அவர்கள் தவித்தபோது, டாலு என்ற திபேத்தியன், இதற்காகவே அமெரிக்கா சென்று விமானப் பயிற்சி பெற்று அவர்களை அழைத்து வருவதில் வெற்றியும் பெற்றுவிட்டதாகக் குறிப்பிட்டார்.

அவர்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று கான்வே கேட்டார்.

தலைமை லாமா சொன்னர்: "கான்வே ! உங்களைப் போன்ற பொறுமைசாலிதான் என் பணிக்குத் தேவை. இங்கே, ஷாங்ரிலா மடத்தில் உருண்டோடும் வருஷங்கள் வயோதிகத்தைக் கொடுக்காது. மாருக இளமையுணர்ச்சியை ஊட்டும். காலம் உங்களுக்குக் காலனுக மாருது. ஏவலாளியாக ஊழியம் செய்யும். மரணத்தை நாங்கள் இன்னும் வெல்லவில்லையாயினும், ஒத்திப்போடுவதில் வெற்றி கண்டிருக்கிறோம்."

கான்வே பதில் பேசவில்லை.

"என்ன நினைக்கிறீர்கள், கான்வே?"

"ஷாங்ரிலாவும், அதன் வரலாறும் எனக்கு வியப்பூட்டுகின்றன. நான் லட்சியமற்ற வாழ்க்கை வாழ்பவன். நெடுநாள் நான் வாழ்வதால் பயனேதும் விளையும் என்று நான் நம்பவில்லை!"

"ஷாங்ரிலாவில் வாழ்கின்றவர்களுக்கு லட்சியம் இருக்கிறது. பேராசை, இச்சை, வெறி, பலாத்காரம் ஆகியவை உலகின் அழகுப் பொருட்களை—வாழ்வின் தூய்மையை—அழித்துவிடக் கிளம்பியிருக்கின்றன. மாசற்ற உள்ளங்களின் புகழ் பேசும் கலையும் காவியமும், ஒவ்வொரு அமுதப் படைப்பும், அதன்விளைவான கலாச்சாரமும் பண்பும், போர்களினுல் அழிந்தொழியும். ஆனல் இந்த நாச நர்த்தனத்தின் மத்தியில் ஷாங்ரிலா உலகிற்கு அறவொளி பரப்பும் "

"உலகமே நாசமுறும்போது; ஷாங்ரிலா மட்டும் எப்படித் தப்பும்?"

"உலகம் காட்டும் இரக்கத்தால் அல்ல, கான்வே. அவர்கள் ஷாங்ரிலாவிடம் காட்டும் அக்கரைக் குறைவினால் அது தப்பும்! உலகின் வெறி பழமையின் அழகைப் பாழ்படுத்தும்போது, புதுமைக்குப் பழமை மெருகிடும் அற நிலையமாய் ஷாங்ரிலா விளங்கும்."

தலைமை லாமா போக எழுந்தார். கான்வே அவர் காலில் விழுந்து, "தந்தையே, உங்களுடைய புனித லட்சியத்தை இப்போதுதான் புரிந்துகொண்டேன்," என்றார்.

சாங் தொட்டவுடன்தான் கான்வே சுய நினைவு பெற்றார். இதர மூவரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

* * *

மறுநாள்காலை, கான்வேயின் நண்பர்கள் அவரை சரமாரியாகக் கேள்விகள் கேட்டனர். மாலின்சன் திரும்பிப்போக ஏதாவது வழி பிறந்ததா என்று கேட்டார். கான்வே விவரமான பதில் ஏதும் கூறவில்லை. கான்வே இரட்டை வாழ்க்கை வாழ வேண்டியவரானார். இப்பொழுது சாங் கான்வேயிடம் மடத்து விஷயங்களைப் பற்றி மனம் விட்டுப் பேசினார். ஷாங்ரிலா மடத்தில் வாழ்கின்றவர்களை எப்படி முதுமை அணுகுவதில்லை யென்பதை விளக்கினார். சாங் அவருக்கு வயது தொண்ணூற்று ஏழு என்றபோது, கான்வே பிரமித்துப் போனார். ஷாங்ரிலாவில் இளமையழியாமல் வாழ்கின்றவர்கள், அதைவிட்டு நீங்கியவுடனேயே மீண்டும் முதுமையடைந்து இறந்து போவதை சாங் சொன்னபோது, ஷாங்ரிலா மடத்துக்கு வெளியே காலம் தன் கோரக் கரங்களை நீட்டிக் கொண்டிருப்பதாக கான்வே எண்ணினார்.

சில நாட்களிலேயே கான்வே பல லாமாக்களைச் சந்தித்தார். ஷாபினின் மாணுக்கரான அல்வான்சோ பிரயாக்கையும் சந்தித்தார். அவரும் இளமையுடனேயே காணப்பட்டார். லோஷின் என்ற அந்த சீனப் பெண் பியானோ வாசிப்பதைக் கான்வே அடிக்கடி கேட்பார். அவளுடைய வயது எழுபத்தைந்து என்று சாங் சொன்னபோது, கான்வேயின் சித்தம் குழம்பியது! ஒரு மாதத்திற்குள்ளாகவே, தலைமை லாமா கான்வேயை மீண்டும் பேட்டிக்கு அழைத்தார்.

* * *

கான்வே அதன் பின் அடிக்கடி தலைமை லாமாவைச் சந்தித்தார். நீல நிலவு மலை அவர் உள்ளத்துக்கு நீங்காத இன்பத்தை வழங்கிக் கொண்டிருந்தது. லோஷின் என்ற அந்த சீனப் பெண்ணிடம் அவருடைய உள்ளத்தில் ஒரு வகையான காதல் முகிழ்த்திருந்தது. அவள் எதுவும் பேசாமல் அருகில் இருந்தாலே

போதுமென்று உணர்வார். தன் இச்சை எதுவும் பூர்த்தியாக, காலம் விரிந்து கிடக்கப் போவதால் எது குறித்தும் அவர் அவசரப்படாமல் அமைதியாகவே இருந்தார்.

அமெரிக்கா சென்று போலீஸ்காரர்களின் வரவேற்பைப் பெறுவதைவிட, ஷாங்ரிலாவில் தொல்லையின்றி காலம் கழிக்க எண்ணினுர் பர்னுர்ட். திபேத் மொழியைக் கற்றுக் கொண்டு, அங்குள்ளோருக்குக் கிறிஸ்தவ மதத்தைப் போதிக்கத் திட்டமிட்டாள் பிரிங்க்லோ.

மாலின்சன், ஷாங்ரிலாவை விட்டுச் செல்லும் பொழுது லோஷினையும் ஏன் அழைத்துப் போகக்கூடாது என்று கான்வேயைக் கேட்டார். லோஷின் அந்த இடத்தை விட்டுச் சென்ருல் அவள் நிலைமை?...அவள் வயது?...கான்வே மாலின்சனைப் பார்த்து மனதுக்குள்ளேயே அனுதாபப்பட்டுக் கொண்டார், மாலின்சன் வெளியேறுவதை சாங்கும் விரும்பவில்லை. ஷாங்ரிலாவின் விவரமறிந்த மாலின்சன் வெளி உலகில் இருப்பது நல்லதல்ல என்பது சாங்கின் எண்ணம்......

அன்று தலைமை லாமா கான்வேயை சந்தித்த பொழுது ஷாங்ரிலாவின் பொறுப்பை அவரிடம் விட்டுவிட்டு இறக்கப் போவதாக அறிவித்தார். "உலகம் நாசமடைந்தாலும், ஷாங்ரிலா ஞான ஒளி வீசும். மரணத்தை ஏற்றிச் செல்லும் விமானங்கள் ஷாங்ரிலாவை வட்டமிடாது."

"இவை யெல்லாம் என் காலத்தில் நிகழும் என்று நினைக்கிறீர்களா ?"

"தானே ஏற்படுத்திக்கொண்ட அழிவில், மறைந்துபோன கருவூலங்களை ஒரு காலத்தில் மனிதன் தேடுவான். அப்பொழுது அவற்றை, ஷாங்ரிலா மடத்தில் கண்டு மகிழ்வான்"—தந்தை பெர்ராலின் கண்களில் நீர் அரும்பியது. "ஆம் மகனே, நீல நிலவு மலைகளுக்குப் பின்னே, அன்பும் அருளும், இன்பமும் எழிலும் மனித சமுதாயத்திற்கு அழியாமல் காப்பாற்றி வைக்கப் படும்."

சில விநாடிகளில் மகான் பெர்ரால், சமாதியானுர் !

கனவுகள் கண்முன் விரிய, கான்வே தோட்டத்தை நோக்கி நடந்தார். மாலின்சன், அவர் தோளை திடீரென்று தொட்டு, அவசரமாக அவருடன் வரும்படி அழைத்தார்.

* * *

போர்ட்டர்கள் பள்ளத்தாக்கில் காத்திருப்பதாகவும், நாளை புறப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்திருப்பவதாகவும், மாலின்சன் சொன்ன பொழுது, கான்வேயிக்கு எதுவும் சொல்லத் தோன்றவில்லை.

''நான் தலைமை லாமாவைச் சந்தித்தேன்'' என்றார் கான்வே.

''அதுதான் கடைசி சந்திப்பாக இருக்கும்,'' என்றார் மாலின்சன்.

''ஆம் மாலின்சன், கடைசி சந்திப்புதான்.'' என்றார் கான்வே துயரத்தோடு.

பிரயாணத்திற்கு வேண்டிய உணவு, உடையெல்லாம் தயாரித்துவிட்டதாகவும், போர்ட்டர்களுக்குக் கூலியாக முன் பணம் கொடுத்து விட்டதாகவும், மறுநாள் காலையிலேயே புறப்பட்டுவிட வேண்டுமென்றும் மாலின்சன் துரிதப்படுத்தினார்.

''இவைகளுக்கெல்லாம் ஏற்பாடு செய்தது, யார்?'' என்றார் கான்வே.

மாலின்சனின் பதில் கான்வேயைப் பிரமையில் ஆழ்த்தியது.

லோஷின்! அவர்களோடு செல்லுவதற்கு அவளும் பள்ளத்தாக்கில் காத்துக் கொண்டிருக்கிறாள் !!

''இருக்க முடியாது!'' என்றார் கான்வே.

''அவள் இந்த இடத்தில் இருக்க விரும்பினால், நாம்மோடு வர ஒப்புக்கொள்வானேன்?''—கான்வேயைப் பார்த்து மாலின்சன் கேட்டார்.

''இங்கிருந்து போனால், லோஷினின் நிலை—அவள் வயது—ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிக் கூறுகிறேன், கேள்'' என்று கூறி, ஷாங்ரிலாவில் வசிப்பவர்களின் வயது பற்றிய ரகசியத்தை கான்வே விளக்கினார்.

''உங்களுக்கு மூளைக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தவிர, வேறென்ன சொல்ல முடியும்?'' என்றார் மாலின்சன்.

''அப்படியானால் மாலின்சன், நீ இங்குள்ள அதிசயம் எதையுமே நம்பவில்லையா?''

''நம்புகிறேன். மனித சஞ்சாரமே இல்லாத இடத்தில் மாபெரும் நூல் நிலையம் இருக்கின்ற அதிசயத்தை நம்புகிறேன். துறவிகள் வாழும் இடத்தில், சுகவாழ்க்கைக்குத் தேவையான விஞ்ஞான வசதிகள் இருக்கும் அதிசயத்தை நம்புகிறேன். கண்ணால் கண்ட, அந்த அதிசயங்களை நம்புவது வேறு. ஆனால், இங்குள்ள லாமாக்கள், கந்த மூலாதிகளை உண்டு, யோகம் பயின்று, காலத்தை வென்று வாழ்கிறார்கள் என்பதை நான் நம்பத் தயாராயில்லை...கான்வே, நான் நாளை புறப்படுகிறேன்...பிரிங்கிலோ, பர்னார்ட்போல நீங்களும் இங்கேயே காலந்தள்ளுங்கள். லோஷின் காத்திருப்பாள்...வணக்கம், வருகிறேன்!''

என்று கூறிவிட்டு மாலின்சன் அறையிலிருந்து வெளியேறினர்.

இரவெல்லாம், சிகரெட் பிடித்தபடியே கான்வே சிந்தனையில் இருந்தார். விடியற்காலம் மாலின்சன் மீண்டும் அவர்முன் தோன்றினர்.

"மிஸ்டர் கான்வே, மலையைக் கடக்க உங்களுடைய உதவி உங்களுக்குத் தேவைப்படுகிறது"

"மாலின்சன், நீங்கள் உண்மையிலேயே லோஷினைக் காதலிக்கிறீர்களா?"

"ஆம்!"

"நான் உலகிலேயே இருவருடைய நலனைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். லோஷின் ஒருத்தி. மற்றொருவர் நீங்கள்... லோஷின் இளம் பெண் என்று நீங்கள் உண்மையிலேயே நம்புகிறீர்களா?"

"அவள் இளம் பெண் மட்டுமல்ல; அந்த இளம் உள்ளத்தை மலரவிடாமல் செய்துவிட்டது ஷாங்ரிலா! அதை நான் மலர்வித்துவிட்டேன்"—மாலின்சன் உணர்ச்சியோடு பேசினர்.

கான்வே நீலநிலவு மலையைப் பார்த்தார். கடந்த காலம் அவர் மனத்திரையில் கனவுபோல் மறைந்தது. வருங்காலம் 'வா, வா' வென்று அவரைக் கைகாட்டி அழைத்தது. இளமையின் எழிலுருவாய், எங்கோ நின்று லோஷின் சிரித்துக் கொண்டிருந்தாள்!

இதுவரையில் பைத்தியமாக வாழ்ந்தாரா, இனிமேல் பைத்யமாக வாழப்போகிருரா—கான்வேயிக்கே புரியவில்லை.

ஆனல், ஒரு முடிவோடு மாலின்சனுடன் புறப்பட்டார். பள்ளத்தாக்கில், போர்ட்டர்களோடு லோஷின் அவர்களுக்காகக் காத்துக் கொண்டு நின்ருள்.

"லோஷின், கான்வேயும் நம்முடன் வருகிருர்." என்ருர் மாலின்சன்.

அவளுடைய முகம் அதைக் கேட்டவுடன் புது ஒளி பெற்றதாகக் கான்வே எண்ணினர். அவள் அவரைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தபடியே, மாலின்சன் மீது விழிகளை ஓட்டினள்.

*　　　*　　　*

கதையின் பின்:

கதையைப் படித்த பின் ரூதர்போர்டை நான் டெல்லியில் சந்தித்தேன். கதையில் வரும் நிகழ்ச்சிகள் பற்றி அவர் ஆராய்ச்சிகள் நடத்தியதாகவும், பெர்ரால், ஷாப்பினின் மாணவர் பிரயாக்

● தொடர்ச்சி கடைசிப் பக்கம்

முத்தாரம்

சென்னை—7.

"முத்தாரம்" வரப்பெற்றேன். முழுமதி எனத் தண்ணொளி வீசக் கண்டேன். முல்லைச் சரம் என நன் மணம் நுகர்ந்தேன். குறிஞ்சித் தேன் எனச் சுவைதரக் கொண்டேன். மருத யாழின் பண்ணென இன்னிசைக் கேட்டுக் களித்தேன். உள்ளத்தையும் குளிர்விக்கும் தென்றல் விருந்தாக அமைந்தது; உவகையை மிகுவித்தது.

இயலின் மேன்மையும், இசையின் மென்மையும், கூத்தின் நன்மையும் தன்னகத்தே கொண்டு, கலை நடம் புரிந்து வரும் எழிலரசியென முத்தமிழ் முழங்கும் முத்தாரத்தை வரவேற்கிறேன். தமிழர் தம் அக இருள் அகல, அறிவுத் திறன் ஓங்க, அருஞ் செயல் பெருக, 'முத்தாரம்' துணை செய்ய விரும்புகிறேன்.

முத்தாரம்—அழகு மிகுந்து ஒளிர
அறிவு சிறந்து வளர
உண்மை போற்றி உயர
பண்பு தழுவி ஓங்க—வாழ்த்துகிறேன்.

—க. அன்பழகன்.

● ...தென்னாட்டின் முத்தாரம், ஒரு "டைஜஸ்ட்" என்று கூறுவது பொருந்தும்...

—செ. சுந்தர மூர்த்தி.
வேலூர்.

● ...'இரு நகரக் கதை' 1956-ம் ஆண்டு எஸ். எஸ். எல். சி. மாணவர்களுக்கு இருக்கிறது. அக்டோபர் எழுதும் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும்...

—டி. முத்துராமன்,
அண்ணாமலை நகர்.

● ...சரித்திர சம்பந்தமான — இன வெழுச்சியை ஊட்டக் கூடிய சிறிய கதைகள் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும்...

—பி. சுந்தரம், சேலம்.

● ...மொத்தத்தில் சத்தான முத்தமிழ்க் கடலில் முகிழ்த்திருக்கும் "முத்தாரம்" நல்ல படைப்பு — ஒவ்வொருவரும் வாங்கிச் சுவைக்கக் கூடியது.

—புத்தனேரி
ரா. வெங்கடாசலம், மதுரை.

கருத்துக்கள்

ஈரோடு

'முத்தாரம்! முதல் இதழைக் கண்ணுற்றேன்.

நமது இயக்கத்தின் வண்ணத்தில் இலக்கியப் பணி எவருங் குறை காண இயலாத வகையில் நடைபெறும் நாள் எந்நாளோ என ஏங்கிக் கிடந்த நம்மவர் உள்ள மெலாங் களிக்க 'முத்தாரம்' பவனி வருவது காண கழிபேருவகை கொள்கிறேன்.

முத்தாரம் தமிழ் மக்களுக்கு இலக்கியச் சுவை காட்டி இன்பம் கூட்டும் என்னும் நம்பிக்கையோடு உளமார வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,

ஈ. வெ. கி. சம்பத்.

●...புத்தகம் இன்னும் கொஞ்சம் பெரிய அளவில் இருந்தால் நலம்...

—அரங்கசாமி, கம்பம்.

●...எங்களைப் போன்ற மாணவர்கள் பெரிதும் விரும்பிப் படிக்கும், நல்ல எளிய நடையில் புறநானூறு, அகநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் வரும் பாடல்களைக் கொண்டு கட்டுரைகள் தேவை.

—திருச்சி பல்கலைக் கழக மாணவர்கள், திருச்சி.

●...பக்கங்கள் அதிகம் இருக்க வேண்டும்...

—பி. மணி, திருச்சி.

●...புத்தகச் சுருக்கம் ஓரளவுக்கு புதிய, தற்கால நவீனங்களின் இருப்பது நலம்...

—எஸ். மோகனதாஸ், காஞ்சி.

●...சினிமாவுக்கென ஒரு பகுதியும் தேவை...'பிரேத மனிதன்' சித்திரத் தொடர் கதை மிகவும் விறுவிறுப்புடன் தீட்டப்பட்டிருக்கிறது.

—பி. பாண்டுரங்கன், நாதன் கம்பெனி, திருச்சி.

●...முதல் 'முத்தாரம்' ஒரு அவசரக் கோர்வை—இருந்தாலும் முத்துக்கள் உயர்ந்தவை—வெற்றியேதான்!

—மயிலை. முத்தெழிலன்

● 125-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆகியோர் இருந்தார்கள் என்பதற்கான ஆதாரமும் கிடைக்க வில்லையென்ருர்.

"ஷாங்ரிலாவை விட்டுப் புறப்பட்ட கான்வே என்ன ஆனுர் ?" என்றேன்.

"ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனுல், அவர் ஒரு விபத்தில் சிக்கி நினைவிழந்திருக்கக்கூடும் என்று யூகிக்கிறேன். ஷாங்ரிலாவை விட்டு நீங்கியபின் நடந்த நிகழ்ச்சிகளை அவருக்கே சொல்லத் தெரியவில்லை."

"சுய நினைவு வந்து, கதையைச் சொன்னபின் உங்களை விட்டு எங்கே போயிருப்பார் ?"

"ஷாங்ரிலா மடத்திற்கே போயிருக்கலாம்"

"நீங்கள் அப்படி நினைக்கக் காரணம் ?"

"கான்வே தங்கியிருந்த சீன ஆஸ்பத்திரியில், அவரை அங்கு அனுமதிக்க யார் அழைத்து வந்தார்கள் என்று கேட்டேன். ஒரு பெண் அழைத்து வந்ததாகவும், அங்கிருந்து ஷாங்காயுக்கு மாற்றிப் போன டாக்டருக்கு அதன் முழு விவரமும் தெரியுமென்றும் அறிந்து அங்கு போனேன். ஒரு சீனப் பெண்தான் சுயநினைவு இழந்த நிலையில் கான்வேயை அழைத்து வந்ததாக அவர் கூறினுர். ஆவல் அதிகரிக்க, அவள் கிழவியா குமரியா என்று அவரைக் கேட்டேன். அவ்வளவு முதிய பெண்ணை அவர் பார்த்ததே இல்லையென்ருர்."

இந்த வரலாற்றைக் கூறிவிட்டுப் பொருள் பொதிந்த பார்வையை என்மீது [illegible]டு செலுத்தினுர்.

என் சிந்தனை, வெகு வேகத்தில் சுழன்று கொண்டிருந்தது!

❋

பொழிப்புரை!

'அலாரம் டைம்பீஸ்' என்பது குழந்தைகள் இல்லாத வீட்டுக்காரர்கள் தூக்கத்தில் தங்களை எழுப்புவதற்காக உபயோகிக்கும் கருவி!

●

சினிமா தியேட்டர் என்பது முன்னுல் நெட்டையான, தொப்பி வைத்த மனிதர்களும், பின்னுல் அழுகின்ற குழந்தை வைத்திருக்கும் தாய்மார்களும், பக்கத்தில் சுருட்டு பீடி சிகரெட் கம்பெனிகளுக்கு லாபம் தேடித்தருபவர்களும் நிரம்பிய இடம்.

128548

Wrapper printed at Shanti Press, Madras-1